காந்திய வழி

ஆச்சார்ய
கிருபளானி

இதே ஆசிரியர் எழுதியவை

அஹிம்ஸா புரட்சி

இந்திய தேசிய காங்கிரஸ்

சர்க்கா அரசியல்

காந்தீய வழி

ஆச்சாரிய கிருபளானி

தமிழாக்கம்

கா. திரவியம்

கதம்பம்

சென்னை 1

முதற் பதிப்பு : நவம்பர் 20 1946

விலை ரூ. 2-12-0,

பொருளடக்கம்

காந்திய வழி

காந்தியம் என்ற பொருளைப்பற்றி எழுதுமாறு என்னைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் நான் 'காந்திய வழி' அல்லது, சமூக அரசியல் பிரச்னைகளைக் காந்திஜி நோக்கும் விதம்' என்ற தலைப்புடன் எழுதுவதே சிறந்ததெனத் தீர்மானித்தேன். இன்னும் காந்தியம் உருவாகவில்லை என்பது என் கருத்து. சில அறிஞர்கள் முதலில் தங்கள் எண்ணங்களை வெளியிடுகின்றனர். அந்த எண்ணங்களை, அதே இலட்சிய பக்தியுடனும் தூர திருஷ்டியுடனும் பின்பற்ற முடியாமல், அவர்களுடைய சிடர்கள் அந்த எண்ணங்களுக்கு வேலி வகுத்து, விதிகள் நிர்ணயித்து அவற்றை உயிரற்ற, உணர்வற்ற குறுகிய கட்டுப்பாடுக் கடங்கிய கொள்கைகளாக்கி விடுகின்றனர். குறுகிய நோக்கும் கொள்கை வெறியும் அதிகரிக்கின்றன.

அந்த எண்ணத்தின் அல்லது முறையின் இளமை இதனால் குன்றுகிறது.

மேலும் காந்திஜி ஒரு தத்துவ அறிஞரல்லர்; அவர் தத்துவம் எதையும் சிருஷ்டி செய்யவில்லை. அவர் ஆதியி

லிருந்தே, பிரத்தியக்ஷ நிலைமையை உணர்ந்து முற்போக்கு எண்ணம் கொண்ட ஓர் சீர்திருத்த வாதியாக இருந்து வந்துள்ளார். அம் முறையில்தான் அவர் எல்லாப் பிரச்னைகளையும் ஆராய்கிறார். செயலே அவர் சாதனை; சிறந்த கர்மயோகி என்று அவர் போற்றப்படுவதும் இதனால்தான். ஆகவே அவர் பேச்சிலும், எழுத்திலும், செய்கையிலுமிருந்து, ஒரு தர்க்கரீதியான முறையையோ, தத்துவத்தையோ காணமுடியாது. இதில் அவர் ஆதிகாலத்து ஞானிகளையும் சீர்திருத்த வாதிகளையும் ஒத்தவர். அவர்களும் நடைமுறையில் அன்றாடம் பல பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியிருந்தது. தத்துவங்களில் சிக்கிக்கொள்ளாமல், இப் பிரச்னைகளை அவர்கள் எளிதில் தீர்த்து வந்தார்கள். எந்த அடிப்படைத் தர்மத்தைப் பின்பற்ற வேண்டுமென்பது அனைவராலும் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. அந்த தர்மத்தைப் பின்பற்றி, ஒவ்வொருவரும் தம் தேவைகளுக்கும், நிலைமைக்கும் அனுசரணையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். வாழ்க்கையின் அடிப்படை தர்மத்தை உணராதவர்களும் குறுகிய நோக்குக் கொண்டவர்களுமே, தத்துவம், கட்டுப்பாடான முறை, உணர்வற்ற விதிகள், என்பவற்றை ஏற்படுத்தினர்.

தம்முடைய கருத்தே, இறுதியான உண்மை என்று காந்திஜி ஒருபோதும் கூறுவதில்லை. தமது நடவடிக்கைகளெல்லாம் சத்திய சோதனைகளென்று அவரே கூறுகிறார். இந்த சோதனை நடந்துகொண்டே, வளர்ந்து கொண்டே இருக்கிறது. இந்தச் சோதனைகளே உண்மை என்று கூறுவது ஏற்காது. காந்திஜியின் சீடர்களில் சிலர் இவ்வாறு சொல்வதுண்டு. ஆனால் காந்திஜி இவ்வாறு கூறுவதே இல்லை. அவர் தமது தவறுதல்களை ஒத்துக்கொண்டு அவற்றைத் திருத்த முயல்கின்றார்.

சத்யம், அஹிம்ஸை, ஆகிய இரண்டுமே அடிப்படைத் தர்மங்கள்; நிரந்தர உண்மைகளென்று அவர் கூறுகிறார். இந்த இரண்டு உண்மைகளையும் கூட நடைமுறையில் கடைப் பிடிப்பதில் ஒரு இறுகிய கட்டுப்பாடு கிடையாது. வெவ்வேறு நிலைமைகளில் சமய சந்தர்ப்ப, சூழ் நிலைகளுக் கேற்றவாறு அவற்றை வெவ்வேறு வழிகளில் கடைப் பிடிக்க முடியுமென்பதை அவர் ஒத்துக்கொள்கிறார். அவர் இத்தகைய நிலையை எடுத்துக் கொள்வதால்தான் அவர் சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடிக்கடி திகைப்பு ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், அவர் எந்த விதத்தில் நடந்து கொள்வார் என்பதை எவரும் முன்னதாக நிதானித்துச் சொல்வது அதிகக் கடினமா யிருப்பதும் இதனால்தான். அவர் நாளுக்கு நாள் வளர்கிறார்; முன்னேறுகிறார். அவர் செயலும் சிந்தனையும் ஒரு குறுகிய சுவட்டையோ, இறுகிய விதியையோ அறியா. அவருடன் நெருங்கிப் பழகுபவர்கள் இதை உணரமுடியும். பல விஷயங்களையும் பிரச்னைகளையும் பற்றி அவர் நிலையும் கொள்கையும் மாறுவதிலிருந்து அது வெளிப்படுகிறது. அவருடைய அடிப்படை நோக்கமும் உணர்ச்சியும் எப்பொழுதும் ஒன்றுதான். ஆனால் அந்த உணர்ச்சி வெளிப்படும் விதம் வேறுபடும். இதுதான் அவர் நிரந்தர இளைஞராக இருப்பதற்கும் காலத்தோடு ஒத்துச் செல்ல அனுசரணையாக இருப்பதற்கும் காரணம்.

அவருடைய சீடர்களில் பலருக்குக் கொள்கையில் தேக்கமும் தளர்வும் ஏற்பட்டு அவர்களுடைய சக்தி குன்றும்போது, காந்திஜியிடம் மட்டும் என்றும் இளமை பொங்குகின்றது. அவர் ஆர்வமும் சக்தியும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. புதுத் தலைமுறையினரின் நிலையற்ற போக்கையும் இளைஞர்க்கு இயல்பாக உள்ள பரபரப்பையும் கண்டு மற்றவர்கள் மனக்கசப்பு அடை

கின்றனர். ஆனால் காந்திஜி எல்லாவற்றையும் பொறுமையுடன் அறிந்து கொள்கிறார். புதுக் கருத்துக்களைத் திறந்த மனத்துடனும் துவேஷமில்லாமலும் அவர் வரவேற்கின்றார். ஆகவே 'காந்தியம்' என்று ஒன்று இன்னும் ஏற்படவில்லை. காந்திய நோக்கு, காந்திய வழி, என்பவைதான் உள. இவை உயிரற்ற சட்டங்களுக்கும் இலக்கண விதிகளுக்கும் கட்டுப்பட்டவை யல்ல. நிரந்தரமான உண்மையை அடைவதற்கு எந்த வழியைப் பின்பற்ற வேண்டு மென்பதை மட்டுமே இவை காட்டுகின்றன.

காந்திஜி, சமூக அரசியல் அரங்கத்தில் பிரவேசித்ததற்கே நம் நாட்டின் விசேஷ நிலைமைதான் காரணம். பணக்கார இந்திய இளைஞர் செய்தது போலவே அவரும் இங்கிலாந்து சென்று சட்டப் பரீட்சையில் தேறி வக்கீல் வேலை பார்த்துப் பணம் சம்பாதித்துச் சுகமான குடும்ப வாழ்க்கையை நடத்திவந்தார். அவருக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகியிருந்தது. ஒரு வழக்கின் நிமித்தம் அவர் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார். அங்கு அவர் தம் சொந்தநாட்டுச் சோதரருடன் சேர்ந்து, அவர்களுக்காகப் போராடத் தொடங்கினார். அவர்களில் பெரும்பான்மையோர் ஏழைகள்; கல்வியறி வற்றவர். பணக்காரராயிருந்த ஒருசிலரும் தங்கள் பணக்குவியலை அதிகப்படுத்துவதிலேயே சிரத்தையாய் இருந்தனர். அவர்களுக்குப் பொதுநல உணர்ச்சியோ அரசியலில் ஆர்வமோ கிடையா. நிறத்துவேஷமும், பொருளாதார அசூயையும் நிறைந்திருந்த அந்த அந்நிய நாட்டில் அவர்கள் அனைவருக்கும் ஒரு தகுந்த தலைவர் வழிகாட்ட வேண்டியிருந்தது. சமூக, அரசியல் துறைகளில் அவர்கள்மீது பல தடைக ளிருந்தன. பல அவமானகரமான விதிகளுக்கும் அவர்கள் பணியவேண்டி யிருந்தது. தங்கள் ஸ்வீகார

நாட்டில் இந்தியர் உரிமைகளைக் காக்கும் போராட்டத்தில் காந்திஜி முனைந்தார். அதில் ஈடுபட்டவுடன் தமது ஆர்வம், ஆற்றல், இலட்சிய பக்தி அனைத்தையும் செலுத்தி வேலை செய்தார். அந்தப் போராட்டத்திற்காகவே அவர் தம்மை அர்ப்பணம் செய்துவிட்டார். கஷ்ட நஷ்டம் எதையும் பாராட்டாமல் அவர் உழைத்தார். அந்தப் போராட்டத்தின்போது பொது அநீதிகளை விலக்குவதற்கு அவர் ஓர் புதுப்போர் முறையை வகுத்தார். இங்குதான் சத்யாக்ரஹத்தின் அடிப்படைத் தர்மம் வகுக்கப்பட்டது. வழக்கம்போல், முதலில் அவர் கொள்கையைக் கடைப்பிடித்து நடத்திக்காட்டினர். அதன் பின்னர்தான் அந்த மார்க்கத்திற்குப் பெயரும் அதைச் சுற்றி ஒரு தத்துவமும் எழுந்தன. சத்யம், அஹிம்ஸை, ஆகியவை சொந்த வாழ்க்கையில் மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளல்ல. பொதுப் பிரச்னைகளையும் நாடுகளிடை ஏற்படும் பூசல்களையும் தீர்ப்பதற்கு அவை சிறந்த ஆயுதங்கள் என்பதைக் காந்திஜி இப் போராட்டத்தின்போது கண்டார். இக் கொள்கைகள் மனித சரித்திரத்தில் புதிதானவை யல்ல. பண்டைக் காலத்தி லிருந்தே பல ஞானிகள் இவற்றைப் போதித்தும் கடைப்பிடித்தும் வந்துள்ளனர். ஆனுல் அரசியல் பிரச்னைகளையும் பூசல்களையும் தீர்ப்பதில் இவற்றைப் பயன்படுத்த முயற்சி எதுவும் நடக்கவில்லை. சொந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத நல்லொழுக்கமும், நற்குணமும், பொது வாழ்விலும் சிறந்த பலனை அளிக்கும் என்று நிரூபித்த பெருமை காந்திஜியைச் சாரும். சத்தியம் அஹிம்ஸை ஆகியவற்றைப் பின்பற்றி வகுக்கப்படும் வேலைத்திட்டம் வெற்றி பெறுவது எளிது. அதை எதிர்ப்பது கடினம். ஒரு நல்ல இலட்சியத்திற்காகப் போராடுபவர் பலாத்காரத்தில் ஈடுபடாமலே, தமது குறைகளைத் தீர்த்துக்

கொள்ள முடியுமென்பதையும், அநீதியையும் அதர்மத்தையும் அகற்ற, சம்பிரதாயமாக உபயோகிக்கப்படும் பலாத்காரத்தைவிட, சத்தியம் அஹிம்ஸையே சிறந்த ஆயுதங்கள் என்பதையும் அவர் உணர்ந்தார்.

நிரந்தரமான வெற்றிக்கு சத்தியமும் அஹிம்ஸையுமே அடிப்படை என்பதற்குக் காந்திஜி ஒரு சிறு காரணம் எடுத்துக் காட்டினார். வாய்மை வெற்றிபெற, அசத்தியம், ஹிம்ஸை, ஆகியவற்றின் ஆதரவு அநாவசியம். ஆனால் அசத்தியமும் ஹிம்ஸையும் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வாய்மையைப் பயன்படுத்தாமல் முடியாது. வாழ்க்கையில், சுயநலனுக்காகவோ, பரோபகார சிந்தையுடனோ நாம் எது செய்வதானாலும், பிறர் நம்மிடம் நம்பிக்கை வைத்தால்தான் அக்காரியத்தைச் சாதிக்க முடியும்.

உதாரணமாக, மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் வர்த்தகத்துறையில் சுயநலமும் பேராசையும் தலை விரித்தாடுகின்றன. ஆயினும் அங்குகூட வியாபாரிகள் ஒவ்வொருவர் வார்த்தையில் நம்பிக்கை வைத்து, வெறும் வாக்கையே, கையெழுத்திடப்பட்ட பத்திரம் போல் மதிக்காவிடில், ஒன்றும் சாத்தியமில்லை. மோசடி கூடச் செய்ய முடியாது. திருடர்களும் கொலைகாரர்களும் கூட ஒருவர்க்கொருவர் நம்பிக்கை வைத்துக் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. சில சமயங்களில், தங்கள் சொந்த நன்மையை விட்டுக் கொடுத்துக்கூட இந்த நம்பிக்கையைக் காக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, எத்தகைய நடவடிக்கைக்கும் ஓரளவிற்காவது வாய்மை அவசியம். அஹிம்ஸையும் அவ்வாறே அவசியம் தான். ஓர் சேனையை எடுத்துக் கொள்ளுங்கள். அச்சேனை வீரர்கள் தங்களுக்குள்ளாகவே அஹிம்ஸையைப் பின்பற்றுவிடில், எதிரியுடன் பலாத்காரமாய்ப் போராடுவது

சாத்தியமில்லை. தங்களுக்குள்ளாகவே, அவர்கள் பலாத்காரம் உபயோகித்துக் கொண்டால், சேனை தன்னைத் தானே நிர்மூலமாக்கிக் கொள்ளும்.

கட்டுப்பாடான வாழ்க்கைக்கு, சத்தியம், அஹிம்ஸை ஆகியவை இன்றியமையாதவை என்பதை உணர்ந்த காந்திஜி அவற்றை அரசியலிலும் கடைப்பிடிக்கிறார். அரசியலில், இதுவரை, மோசடியும் பலாத்காரமுமே அதிகப் பலன் தருமென்ற எண்ணம் இருந்து வந்ததுண்டு. ஆனால் அடிப்படை தர்மம் இறுதியில் வெல்லும் என்று திருப்தி யடைந்து காந்திஜி வாளா இருப்பதில்லை. எதிரியின் மனத்தை மாற்ற வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால் அந்த மனமாற்றத்தில் மட்டும் அவர் தமது முழு நம்பிக்கையையும் வைக்கவில்லை. அநீதியால் கஷ்டப்படுவோரை ஒன்றுதிரட்டி, அவர்கள் உணர்வை எழுப்பி, அவர்களைப் பலப்படுத்த அவர் உழைக்கிறார். அவர்கள் எல்லாப் பாபங்களையும் போக்கி விட்டு, அச்சத்தை அகற்றி, சுயநலச் சிறுமையையும் தங்களிடையே உள்ள பிரிவினைகளையும் பூசல்களையும் ஒழித்து விட்டு அவர்கள் ஒன்றுபடவேண்டு மென்பதே காந்திஜி காட்டும் வழி. இவ்வாறு அவர்கள் பலம் திரட்டிய பின்னர், அதர்மத்துக்கும் கொடுங் கோன்மைக்கும் உடந்தையா யிருந்து அதன் மூலம் அவர்கள் செய்யும் உதவியை நிறுத்திவிட வேண்டு மென்று கூறுகிறார். அதாவது, அவர்கள் அதர்ம சக்திகளுடன் ஒத்துழையாமை அனுஷ்டிக்க வேண்டும்.

பண்டைக்காலத்தில் எப்படி யிருந்திருந்தாலும் சரி, இன்று அதர்மத்துக்கு ஆளுவோர், தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, சுயேச்சையாகவோ நிர்ப்பந்தத்தின் பேரிலோ அந்த அதர்மத்திற்கு உடந்தையாயிருந்து அத்துடன் ஒத்துழைப்பதால், அதர்மம்

நடப்பது சாத்தியமாகிறது. அவர்கள் ஒத்துழைக்க மறுத்து, அந்த ஒத்துழையாமையால் வரும் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் ஏற்றுக் கொள்ளச் சித்தமா யிருந்தால், அதர்மமும் அநீதியும் வெகு காலம் நிலைக்க முடியா. தொழிலாளர் தகராறுகளில் இதைக் காணலாம். தொழிலாளர் கட்டுப்பாடாக ஒத்துழையாமையை அனுஷ்டிக்கும் போதெல்லாம், முதலாளிகள் பணிந்து பின்வாங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. தனிப்பட்ட விவகாரங்களிலும் சிறு தகராறுகளிலும் இது பலனளிப்பதைக் கண்டுள்ள தொழிலாளர், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவோ, புரட்சிகரமான அரசியல் நடவடிக்கைகளுக்காகவோ, பொது வேலை நிறுத்தம் செய்வது பற்றிப் பேசுகின்றனர்.

வேலை நிருத்தம் என்பதென்ன? ஒத்துழையாமை, அதாவது சத்யாக்ரஹம் தானே? ஆனால் வெளிப்படையில் இவை இரண்டும் ஒன்றுதான் என்ற போதிலும், சத்யாக்ரஹத்துக்கு அடிப்படையாக இருக்கும் உணர்ச்சியும், தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு அடிப்படையாக இருக்கும் உணர்ச்சியும் வேறுபட்டவை. இந்த வேறுபாடு இருப்பது அவசியமில்லை; ஆனால் இன்று அது காணப்படுகிறது. ஒத்துழைக்க மறுப்பதென்பது இவ்விரு முறைகளுக்கும் பொதுவானது. ஒத்துழையாமையால் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் பலனேற்படுமென்றால், சத்யாக்ரஹம் பற்றி ஏன் நம்பிக்கைக் குறைவு இருக்கவேண்டும்? சத்யாக்ரஹத்தில், வேலைநிறுத்தத்தோடு வேறொன்றும் சேர்ந்திருக்கிறது. அதுதான் போராட்ட சக்தியைப் பலப்படுத்தி எதிரி உறுதி குலையும்படி செய்கிறது. அதுதான் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள், எதிரியிடம் ஆதரவு காட்டாமல் நம்மிடம் ஆதரவு காட்டும்படியும் செய்கிறது. ஒத்துழையாமை

என்பதைக் காட்டிலும், ஆழ்ந்த அடிப்படையான முறையில் போராட்டம் நடக்கிறது; மனத்தையே வெல்ல முயற்சி நடக்கிறது.

வேலை நிறுத்தம் செய்பவரைக் காட்டிலும், ஓர் சத்யாக்ரஹி ஒத்துழையாமையைப் பூரணமாய் அனுஷ்டிக்க முடிகிறது. சத்யாக்ரஹி, துவேஷம், வெகுளி, வெறுப்பு ஆகியவற்றிற்கு இடங்கொடாமல், உண்மையைக் கண்டு தெளிகின்றான். அதன்மூலம் அவன் எதிரியை நிராயுதபாணியாக்கி விடுகின்றான். சத்யாக்ரஹிக்கு அதிகப் பொதுஜன ஆதரவு கிடைக்கிறது. தியாக மனப்பான்மையுடன், தானாக வருவித்துத் தாங்கிக் கொள்ளும் கஷ்டத்தால் மனிதன் உயர்வடைகிறான் என்ற நம்பிக்கையும் அவனுக்கு உறுதி அளிக்கிறது.

ஆனால் இந்த மனவுறுதி, ஆத்மபலம் என்பவற்றையெல்லாம் மறந்து விடுவோம்; ஒத்துழையாமையை மட்டும் கவனிப்போம். தொழிலாளர் தகராறுகளைத் தீர்க்க சென்ற நூற்றைம்பது வருஷங்களாக இம்முறை மொத்தத்தில் வெற்றிகரமாய்ப் பயன் படுத்தப் பட்டுள்ளது. அவ்வாறில்லாவிடில், பொதுவேலை நிறுத்தம் சமதர்மம், பொதுவுடைமை என்ற பேச்சே எழுந்திருக்காது. இந்த வேலை நிறுத்தத்தில், பாமரமக்கள் புரிந்து கொள்ள முடியாத பரமார்த்திகம் எதுவுமில்லையே! அறியப்படாதது அல்லது அறிய முடியாதது, நடைமுறையில் அசாத்தியமானது என்று எதையும் குறிக்கச் சத்யாக்ரஹம், என்ற பதம் உபயோகிக்கப் படுவதென்றால், அது ஞானிகளுக்குத்தான் ஏற்றது என்று கூறலாம்.

ஒரு பொது வேலைநிறுத்தம் சாத்தியம் தானே? அனைவரும் புரிந்து பின் பற்றக் கூடிய கொள்கை தானே? அப்படியிருக்கையில் சத்யாக்ரஹம் மட்டும்

என் புரியாமல் போய்விட வேண்டும்? வார்த்தைகளிலும், பெயர்களிலும் சிக்கி, வேறுபாடில்லாத இடத்திலும் வேறுபாட்டை சிருஷ்டிப்பது எவ்வளவு சுலபமாயிருக்கிறது! நடைமுறையில் சாத்தியமானதும் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடியதுமான ஒரு திட்டமான முறைகூட, காந்திஜியின் பாஷையில் பேசி சத்யாக்ரஹம் என்ற பதத்தை உபயோகித்து விட்டால் பரமாத்திக மார்க்கமாகவும், ஞானிகளுக்கும் இலட்சியவாதிகளுக்கும் மட்டும் ஏற்றதாகவும், நடைமுறையில் அசாத்தியமானதாகவும் ஆகிவிடுகிறது. ஆனால், பொது வேலைநிறுத்தம் என்ற பாஷையில் பேசுங்கள், அது அனைவரையும் கவர்கிறது என்பது மட்டுமல்ல; பொது வேலை நிறுத்தம் நடந்தே தீரவேண்டும்; அது சரித்திரத்தின் தீர்ப்பு என்று கூறுவோருமுவர்.

சத்யாக்ரஹ கொள்கையில் மட்டுமல்ல, சத்தியத்தை அரசியலில் நிலை நாட்ட வேண்டுமென்ற கொள்கையிலும், காந்திஜியின் மனத்தை உணரத் தற்காலத்தினர் தவறி விட்டனர். இன்று உலக நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்கு இன்றியமையாதது, சுதேச, சர்வதேச அரசியலில் சத்தியத்தை உறுதியாகப் பின்பற்றுவதாகும். ராஜதந்திரம் என்ற பெயரால் இன்று நடந்து வருவதெல்லாம் மேலும் நீடித்தால், தற்கால நாகரிகம் முழுவதும் முறிந்து, அழியுமென்பது நிச்சயம். முதல் உலக மகா யுத்தத்திலேயே டாக்டர் உட்ரோ வில்ஸனும் மற்ற அரசியல் தலைவர்களும் இதை நன்கு உணர்ந்திருந்தனர். எது பகிரங்க ராஜதந்திரம் என்று இன்று வழங்கிப் போற்றப் படுகிறதோ அதுதானே சத்தியம் என்பது.

பகிரங்க ராஜதந்திரக் கொள்கையை எல்லா தேசங்களும் பின்பற்ற வேண்டுமென்றும், அக் கொள்கையின் அடிப்படையில் சர்வதேச சங்கம் அமைக்க

வேண்டுமென்றும் வில்ஸன் கூறியபோது, அவர் உலக அரசியல் தெரியாதவரென்ருே, காலத்துக்கு ஒவ்வாத கர்நாடகப் பேர்வழியென்ருே, பித்தனென்ருே எவரும் கூறியதில்லை. பகிரங்க ராஜதந்திரம் என்பதை ரஷ்யா ஆதரிக்கும் போதும் அக்கொள்கையைச் சமதர்மம், பொதுவுடைமை மூலம் போதிக்கும் போதும், அது தற்காலத்தினருக்கு விபரீதமாகத் தோன்றவில்லை. ஆனால் அரசியல் துறையில் சத்தியத்தை நிலைநாட்ட வேண்டுமென்று காந்திஜி கூறினுல் மட்டும், அது பெரும் விபரீதமென்றும் மனித இயற்கைக்கும் அரசியல் உலகிற்கும் ஏற்றதல்லவென்றும், படித்தவர்கள் கூக்குரல் எழுப்புகின்றனர். வார்த்தைகளைப்பற்றி எழும் சண்டையிலிருந்தே வெறி வளர்கிறது. மதத்திலும் அதே போக்கு காணப்படுகிறது. பரிசுத்த ஆவி, புருவைப்போல் பறந்து வந்தது, என்று கிறிஸ்துவர்கள் கூறினுல் அது பகுத்தறிவுக்கு ஏற்றதாகப் படுகிறது. அதே பரிசுத்த ஆவி, மனித உருவில் அவதாரமெடுத்தது என்று ஹிந்து வேதங்கள் கூறினுல்அது கீழ் நாட்டினரின் மூடநம்பிக்கைக்கும் அறியாமைக்கும் உதாரணமென்று கண்டிக்கப்படுகிறது. விக்ரஹத்தை ஒரு ஹிந்து ஆராதனை செய்தால் அது மூடநம்பிக்கையாம். ஆனால் விவில்யத்தையோ (பைபிள்) வேறு வேதப் புத்தகத்தையோ ஒரு துணியில் நூற்றுக்கணக்கான மடிப்புகளுக்கிடையே பொதிந்து வைத்து, அதைத் திறக்கும் ஒவ்வொரு நேரமும் அதைத் தொடும் ஒவ்வொரு நேரமும் அதை முத்தமிடுவது மட்டும் பகுத்தறிவுக்குப் பொருந்தியதாம். பகிரங்க ராஜதந்திரம் என்ற பாணியில் யாரும் பேசினுல் அவர் பெரிய அரசியல் மேதை. ஆனுல் அரசியலில் சத்தியத்தை நிலைநாட்ட வேண்டுமென்று யாராவது பேசிவிட்டால் அவர் உடனே

வேதாந்தியாகவும் சந்நியாசியாகவும், அரசியல் துறைக்கு லாயக்கற்றவராகவும் ஆகிவிடுகிறுர். பொதுவேலை நிறுத்த மென்ற பாணியில் பேசுங்கள் ; நீங்கள் அரசியல் ஞானம் படைத்தவர் என்று அனைவரும் போற்றுவார்கள். ஆனல் சத்யாக்ரஹம் என்ற பதத்தை உபயோகித்துப் பேசுங் கள். அரசியல் ஞானம் உங்களுக்கில்லை என்பதற்கும் நீங்கள் பிற்போக்கு மனப்பான்மை கொண்டவரென்ப தற்கும் அதுவே அத்தாட்சி.

தமது போராட்ட தர்மத்தை, காந்திஜி தென்னுப் ரிக்காவில் உருவாக்கினுர். அங்கு அதை அவர் பின் பற்றி ஓரளவு பலனும் கண்டார். இந்தியாவிலும், அதே போர்முறையை அவர் பல முறை பின்பற்றி யுள் ளார். சம்பாரானிலும், மூன்று ஒத்துழையாமை இயக் கங்களில் அவர் அதே முறையைப் பின் பற்றினுர். அந்த இயக்கங்களில் அவர் தேசிய இலட்சியத்தை அடைவதில் வெற்றி பெறவில்லை என்ற போதிலும், இயக்கங்களால் நல்ல பலன் கிடைத்தது. ஆயுதம் தாங்கிய புரட்சிகூட முதல் முறையிலேயோ ஒரே முயற்சியிலேயோ வெற்றி பெறுவதில்லை. ஒரு இலட்சியத்திற்காக நடக்கும் போராட்டத்தில், பல யுத்தங்கள், தாக்குதல்கள், முற்று கைகள், தோல்விகள், வெற்றிகள் முதலியன இருக்கத் தான் செய்யும். இவற்றில் ஓரளவிற்கு வெற்றி பெறும் படை, மேலும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் போராடி நாளடைவில், பூரணவெற்றி அடைந்து இலட் சியத்தை ஈடேறச்செய்யும் என்பதில் சந்தேகமே யில்லை. சில போர்க்களங்களிலும், முனைகளிலும் தோல்வியடைந் தாலும், சேனை உறுதியுடன் மேலும் முன்னேறினுல், அதன் எதிர்ப்புச் சக்தியும் கொள்கை உறுதியும் வளர்ந்து வலுவடையும்; படிப்படியாக வெற்றி அடையும்.

பூரண வெற்றி கிடைக்காவிடினும் இம் முறை சிறந்த போர்முறை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

காந்திஜியின் தலைமையில் நடந்துள்ள ஒவ்வொரு போராட்டத்தின் பயனாகவும், தேசத்தின் எதிர்ப்பு சக்தி வளர்ந்து ஒருபடி முன்னேறியுள்ள தென்பதை எவரும் மறுக்கமுடியாது. தேசமக்களின் உறுதி, அச்சமின்மை தியாக சிந்தை, கட்டுப்பாடு ஆகியவை வளர்ந்துள்ளன என்பதை மறுப்பவர்கள் கண்மூடித்தனமான வெறுப்பும் குரோதமும் கொண்டவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு போராட்டத்திலும், அடக்குமுறை அதிகரித்துள்ளது. அதனால் கஷ்டங்களும் தியாகங்களும் அதிகரித்துள்ளன. அதே சமயத்தில் தேச மக்களின் ஆர்வமும் உறுதியும் பெருகியுள்ளன. 1920-21 இயக்கத்தில் தேசம் காட்டிய உற்சாகத்தையும் உறுதியையும் விட 1930-ல் அதிகம் காட்டியது. 32-33 இயக்கத்தில் தேசமக்கள் இன்னும் அதிக உணர்ச்சியுடன் எழுந்தனர். அந்த இயக்கத்தைத் தொடர்ந்து வெளிப்படையாய்க் காணப்பட்ட பலன் 1930-ல் கிடைத்ததுபோல் அவ்வளவு அதிகமாகவும் சாதகமாகவும் காணப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் தேசம் என்றுமில்லா உறுதியுடன், முன்னிலும் அதிக அடக்குமுறையை எதிர்த்து நீண்டகாலம் போராடியது. அடக்குமுறை மிகவும் கடுமையாகவும் கொடுமையாகவும் இருந்ததால், எதிரியின் மிருகபலத்தால் நசுக்கப்பட்டு, போராட்டத்தால் சக்தி அனைத்தையும் இழந்து சோர்வடைந்தோம். ஆயினும் தேசமக்களிடை அடிப்படையாக இருந்த உறுதியும் பலமும் 1930-ல் இருந்ததைவிட அதிகமிருந்தது. அதைத் தொடர்ந்து நடந்த அசெம்பிளித் தேர்தல்களில் தேசிய இயக்கம் பெற்ற அமோக வெற்றியி லிருந்தே அதன் பலம் புலனாயிற்று. சத்யாக்ரஹத்தை நிறுத்

தாமல், மேலும் கஷ்டத்தை நீடித்துக் கொள்ளத் தேசம் அந்தச் சமயத்தில் தயாராகவில்லை. ஆனால், தேசத்தின் இதய உறுதியும் இலட்சிய விசுவாசமும் சிர்குலையாம லிருந்தன. ஆகவே அந்த மூன்று இயக்கங்களிலும் உடனடியாகக் கிடைத்த பலன், ஒன்றில் தோல்வி, மற்றொன்றில் தற்காலிகச் சமரசம், மூன்றாவதில் மீண்டும் தோல்வி, என்பதுதான் என்ற போதிலும், தேசம் படிப் படியாகத் தன் இலட்சியத்தை நோக்கி முன்னேறி வந்துள்ளது.

இலட்சியத்தை நாம் ஒரு முறைதானே அடைய முடியும். பலமுறை வெற்றி பெற்றபோதும், இறுதி லட்சியத்தை அடையாமலு மிருக்கலாம். தோல்வியோ வெற்றியோ, எது நமக்கு அதிக உறுதியை ஊட்டி இறுதி லட்சியத்தின் அருகே அழைத்துச் செல்கிறதோ, அதுவே உண்மையில் வெற்றியாக மதிக்கப்பட வேண்டும்.

சத்யாக்ரஹம் தோன்றுவதற்கு முன்பிருந்த மார்க்கங்களால் தேசம் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்க முடியுமா என்பதைக் காண்போம். காந்திஜி அரசியலில் புகுவதற்கு முன்பு, சர்க்காருக்கு மனுப் போடுவது, மன்றாடிக் கேட்டுக் கொள்வது, ஆக்ஷேபம் செய்வது. முதலிய சட்ட பூர்வமான முறைகளிலேயே கிளர்ச்சி நடந்து வந்தது. அதைவிட சத்யாக்ரஹம் எவ்வளவோ பெரிய முன்றேற்றம் என்பதை எவரும் ஒத்துக் கொள்வர். இதனால் தேசம் சற்று முன்னேற்ற மடைந்தது உண்மைதான் என்றும் ஆனால் இப்பொழுது அம்முறை காலத்துக் கேற்ற முறையல்ல வென்றும் சிலர் வாதாடலாம். அதை விடச் சிறந்த முறையைச் சிபார்சு செய்ய எந்த நண்பராவது முன் வந்துள்ளாரா? உண்மையில், உலகமும் குறிப்பாக இந்தியாவும் இன்றுள்ள நிலைமையில் சாத்விகப் போராட்டம் தான் நடத்த முடியு

மென்று முற்போக்குக் கட்சிகளென்று சொல்லப்படுபவை யும் ஒத்துக் கொள்கின்றன. இன்றோ நாச ஆயுதங்கள் எல்லாம் அரசாங்கத்தின் ஏகபோகமாய் இருக்கின்றன. அததகைய அரசாங்கத்தை எதிர்த்து, ஆயுதங்கள் கொண்டவர்களே எதிர்த்துப் போராடுவது சாத்திய மில்லை. அதிலும் நிராயுதபாணியாக இருக்கும் இந்தியா எப்படிப் போராட முடியும?

மேலும் ராணுவரீதியில் போருக்கு ஆயத்தம் செய்வ தென்றால் அதைப் பகிரங்கமாகச் செய்ய முடியாது. நாம் நம்மை சாத்விக முறைகளில்தான் தயார் செய்துகொள்ள முடியும். மேலும் பலாத்காரப் போராட்டத்தில் கூடக் கட்டுப்பாடு, ஒற்றுமை, வீரம், தியாகம் முதலிய குணங் கள் மிக முக்கியம். இக் குணங்களைச் சத்யாக்ரஹம் வெளிப்படுத்துகிறது. இறுதிப்போர் சாத்விகமாய் இருந்தாலும் சரி, பலாத்காரமாய் நடந்தாலும் சரி, இது வரை, காந்திஜியின் தலைமையில் சாத்விகக் கொள்கை யைப் பின்பற்றி. தேசம் மகத்தான நன்மைகளை அடைந் துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இக் குணங்களை பெரும்பாலும் சமாதான வழிகளில்தான் வளர்க்க முடியும். இத்தகைய உயர்ந்த குணங்களைக் கொண்ட ஓர் சிறிய இரகசிய பயங்கர வாதிகளின் கட்சி இருக்கலாம். ஆனால் தேசம் முழுவதும் இக் குணங்களை வளர்க்க வேண்டும் என்றால், அது இரகசிய வேலைகளால் சாத்தியமில்லை. ஆகவே இறுதிப்போர் பலாத்காரப் போராய் இருந்தால் கூட, சத்யாக்ரஹத்தால் வளர்ந் துள்ள குணங்கள் இன்றியமையாதவை. ஏனெனில் அவை தான் எல்லாப் போர்களுக்கும்—சாத்விகமாயினும் சரி, பலாத்கார மாயினும் சரி-அடிப்படை. இன்னும் பல வருஷங்கள் வரை நமக்குச் சத்யாக்ரகஹத்தைத் தவிர வேறு வழி கிடையாது. ஒரு உண்மையான சிர்

திருத்தவாதி, வருங்காலத்தைப் பற்றி நினைக்காமல் குறுகிய திருஷ்டியுடன் வேலை செய்தால் அது எவ்வளவு தவறோ, அதைப்போன்றதுதான் இன்றைய நிலைமையைப் புறக்கணித்துவிட்டு, வருங்காலத்தைப் பற்றியே அதிகம் நினைத்துக் கொண்டிருப்பதும், இவ்விரண்டிற்கும் நடுவில் உள்ள வழியே சிறந்த வழி. அத்தகைய வழியைக் காட்டுவதே சத்யாக்ரஹம். சத்யாக்ரஹத்திற்குப் பதிலாக நாம் கையாளக்கூடிய திட்டம் பற்றி இதுவரை வேறெந்தக் கட்சியும் பொர்சு செய்ததுகூடக் கிடையாது.

ஒரு புரட்சியின்போது சில பருவங்களில் நேரடியான போராட்டம் நமக்கும் மற்ற நேரங்களில் அடக்கு முறையிலேயோ, களைப்பாலேயோ, சற்று ஓய்வு இருக்கும். இந்த இரு பருவங்களும் மிக முக்கியமானவை. ஓய்விருக்கும் நேரங்களிலும் போர் வீரர்களுக்கு நல்ல பயிற்சியும் வேலைகளும் அளிக்கவேண்டும். இல்லாவிடில் போர் வீரர்களை உறுதி சிர்குலைந்துவிடும். சத்யாக்ரஹப் போர்வீரர்கள் அவ்வப்போது தங்கள் முகாம்களுக்குத் திரும்ப வேண்டியிருக்கும். அப்பொழுது உரமளிக்கக் கூடிய ஆக்கல் வேலைகளை அவர்களுக்குத்தர வேண்டும். இது போல் ஓய்வும் சமாதானமும் இருக்கும் நேரங்கள் ஸ்தாபனத்தைப் பலப்படுத்தப் பயன் படுத்தப்பட வேண்டும். இதைப் புறக்கணித்துவிட்டால், புதுப் போராட்டம் தொடங்கும் நேரத்தில், அதற்கு தேசம் தயாராக இருக்காது. அரசியலில் அமைதியோ, சோர்வோ இருக்கும் நேரங்களுக்காகத்தான் காந்திஜி நிர்மாணத் திட்டத்தை வகுத்துள்ளார். கதர், கிராம சேவை, குடிசைக் கைத்தொழில்கள், தேசியக் கல்வி, ஹரிஜனத்தொண்டு, ஹிந்துஸ்தானிப் பிரசாரம், ஆகியவை, அவர் இந்த நோக்கத்துடன் தொடங்கி, பலப்படுத்தியுள்ள இயக்கங்கள். இந்த வேலைகள், வேறு பலன் தராவிட்டாலும்,

அவற்றைப் பொறுத்த அளவிலேயே மிக உயர்ந்த வேலைகள்; தேசத் தொண்டர்களுக்கு உரமளிக்கவும் உதவுகின்றன. பொது மக்களும் இந்த இயக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வதின் மூலம், பொறுப்புணர்ச்சியும் சமூக உணர்வும், நாட்டுப் பற்றும் பெறுகின்றனர். அது மட்டுமல்ல; சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்படும் போதும், அந்தந்த ஊர்களில் எழும் குறிப்பிட்ட சில பிரச்னைகளைக் கொண்டு சர்க்காருடன் போராட்டம் நடக்கின்றது. பர்டோலி போராட்டம், அத்தகைய போராட்டங்களில் ஒன்று.

நேரடியான போராட்ட அரசியலில் நம்பிக்கை இல்லாதவர்களையும், அரசியல் வேலையைவிட சமூக சேவையில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளவர்களையும், இந்த நிர்மாண வேலைகள் ஈர்க்கின்றன. இந்த வேலைகளை, அரசியல் நோக்குடனும், சமூக நோக்குடனும், காந்திஜியும் அவர் சீடர்களும் ஆராய்கின்றனர். இந்த நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதும், தாங்கள் சுதந்திரப் போர்வீரர்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுவதில்லை. ஆகவே, இந்த நிர்மாண வேலைகள் வெறும் சமூக சீர்திருத்தங்கள் என்றோ, பாட்டிமார் வேலை என்றோ, பிற்போக்கான திட்டமென்றோ குறை கூறுவது, அவதூறாகும்; உண்மைப் பிரச்னையை உணராமல் குழப்புவதேயாகும். மேலாகப் பார்த்தால், ராணுவ ரீதியில் நடக்கும் வேலை தவிர மற்றெல்லா வேலைகளும் புரட்சிகரமாக இல்லாமலும் மிதவாத சீர்திருத்தங்களாகவோ பிற்போக்கான திட்டங்களாகவோ தான் தோன்றும்.

ஆனால் இலட்சியத்தை மறக்காமலிருந்தால், இந்த மிதவாத சீர்திருத்தங்களே உண்மையில் புரட்சிகரமாக இருக்கும். உடனடியாக, அவை சிறிய சீர்திருத்தங்களாகத்தான் புலப்படும், ஆனால் போராட்டம் வரும்

நேரத்தில் இவற்றினுல் அதிக நன்மை ஏற்படும். போர்க் களத்திலிருந்து ஓய்வெடுத்து ஓர் முகாமில் தங்கி இருக்கும் சேனை செய்யும் காரியங்கள் பலவற்றிற்கும் போர்ப் பயிற்சிக்குச் சம்பந்தம் எதுவுமில்லை என்று மேலாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும். அவர்கள் குழி தோண்டுகின்ருர்கள்; அதே குழிகளில் மீண்டும் மண்ணைப்போட்டு நிரப்புகின்றனர். எவ்விதமான வேலையில்லாத போதும் கூட நீண்டதூரம் நடந்து சென்று, பின்பு திரும்புகின்றனர். ஒரு மரத்தில் குறி போட்டு அதைப் பார்த்துச் சுடுகின்றனர். விளையாட்டுக்காகவும் பயிற்சிக்காகவும் தங்களுக்குள்ளாக சண்டைபோட்டுக் கொள்கின்றனர். போருக்கும் இவற்றிற்கும் சம்பந்தமில்லையே என்று கூறி இவற்றை விலக்கிவிட்டால் எந்த சேனையும் சீர்குலைந்து விடும்; போர்வரும் நேரத்தில், அதற்கு அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள்.

புரட்சிகரமான கட்சிகள் கூட உடனடியாகச் செய்ய வேண்டிய சில சீர்திருத்தத் திட்டங்களை வகுக்கின்றனர். அவர்கள் திட்டத்தைக் கொண்டு மட்டுமே அவர்கள் மீது தீர்ப்புக்கூற முடியாது. அவ்வாறு கூறும் தீர்ப்புகள் நியாயமாய் இருக்கமுடியாது. நகரத்திலுள்ள பாட்டாளி மக்களை ஒன்று திரட்டவேண்டும். அது எவ்வாறு சாத்தியம்? தொழிற் சங்கங்கள் மூலமாகத் தான் அதைச் செய்யமுடியும். ஒரு தொழிற் சங்கத்தின் நோக்கம் எவ்வளவு புரட்சிகரமாய் இருந்தாலும், முழுவதும் புரட்சித் திட்டத்தைக் கொண்டே அது வேலை செய்ய முடியாது. தொழிலாளரின் அன்ருடத் தேவைகளையும் கோரிக்கைகளையும் கவனிக்கவேண்டும். இவற்றிற்கும் புரட்சிகரமான இலட்சியத்திற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கலாம். கொஞ்ச காலத்திற்கு, நிலைமையில் இங்கு மங்கும் சிற்சில சீர்திருத்தங்கள் செய்வதில்

தொழிற் சங்கங்கள் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். சம்பள உயர்வு, வேலை நேரக்குறைவு சமூக வசதிகளை அதிகரித்தல், முதலியவற்றில் உடனடியாக ஓர் புரட்சியை ஏற்படுத்திவிடுவ தென்பது சாத்திய மில்லை. விவசாயிகள் ஸ்தாபனங்களிலும் அவ்வாறு தான். அவர்கள் இலட்சியம் புரட்சிகரமானதாய் இருக்கும், ஆனால் அவர்கள் அன்றாடவேலை சீர்திருத்த வேலையாகவே இருக்கும். சீர்திருத்தங்களெல்லாம், பிற்போக்கானவை என்றோ புரட்சிக்கு விரோதமானவை என்றோ கூறுவது, ஒரு புரட்சி இயக்கம் ஏககாலத்தில் பற்பல முனைகளில் பற்பல விதங்களில் நடத்தப்பட வேண்டும் என்பதை மறந்து விடுவதாகும்.

காந்திஜியால் வகுக்கப்பட்டுக் காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுக்குப் பதிலாக அவற்றை விடச் சிறந்த திட்டம் எதையும், எந்தக் கட்சியும் இது வரை வகுத்ததில்லை. புரட்சிகரமான திட்டம், தீவிரமான திட்டம் என்பதைப்பற்றி யெல்லாம் பெரும் போக்கான பேச்சுகளை நான் கேள்விப்பட் டிருக்கிறேன். ஆனால் அவை நடைமுறையில் கொண்டுவரப்பட்டதைக் காணோம்.

காந்திஜியின் நிர்மாணத் திட்டத்தில் ஓர் அம்சமான, 'கதர் உற்பத்தியும் விற்பனையும்' என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். காந்தியத் தத்துவத்தில் நம்பிக்கை இல்லாத புரட்சி வாதி,கதரை ஆதரிக்கமாட்டார். அப்படியானால் ஆலைத்துணியை ஆதரிப்பாரா? அவ்வாறு ஆதரித்தால், ஒவ்வொரு மணி நேரமும் தொழிலாளரைச் சுரண்டிப் பிழைத்துவரும் முதலாளிகளை ஆதரித்தவராவார். அம் முதலாளிகளின் பேராசையையும் பண வேட்டையையும் அடக்குவதற்கோ அந்தப் புரட்சி வாதிக்கு அதிகாரம் இருக்காது. அப்படியானால் அந்நிய

நாட்டுத் துணியை ஆதரிப்பாரா? வேறு காரணங்க ளெல்லாம் ஒருபுற மிருக்கட்டும். அந்நிய நாட்டுத் துணியை ஆதரித்துப் பேசுவதே உடனடியாக உள்ள அரசியல் போராட்டத்திற்கு ஆதரவாக மக்களிடை உள்ள உணர்ச்சியைப் பாதிப்பதாகும். இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைய அடைய, பாட்டாளி மக்க ளின் எண்ணிக்கையும் பலமும் பெருகுமென்றும் அதன் மூலம் புரட்சி நெருங்குமென்றும் ஆகவே ஆலைத்துணி உபயோகத்தை ஆதரிப்பதில் கெடுதல் இல்லையென்றும் அவர்கள் வாதாடக்கூடும். அந்த வாதத்தை நாம் ஒப்புக் கொண்ட போதிலும் ஒன்று மறந்துவிடக்கூடாது. அப் புரட்சிவாதிகள் என்னதான் பேசினாலும் எதைத்தான் சாதித்தாலும், இந்திய இயந்திரத்தொழிலை வளர்க்கவோ, அதற்கு ஊக்கமளிப்பதோ முடியாது. அந்நிய சர்க்கார் கொள்கையின் விளைவாக, இந்திய இயந்திரத்தொழில், ஒரு குறுகிய எல்லையைத் தாண்டிப் பிரிவது சாத்தியமில் லாது போயிற்று. ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு அனுசரணையாக இயந்திரத்தொழில் முன்னேற முடிய வில்லை என்பது ஜன சங்கியை அறிக்கையி லிருந்து வெளியாகிறது. அதன் பயனாக, இயந்திரத்தொழிலை நம்பிப் பிழைப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து விவசாயத்தை நம்பிப் பிழைப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இன்று இயந்திரத்தொழிலை ஆதரிப்பது வருங்கால இந்தியாவின் இயந்திரத்தொழில் வளர்ச்சிக்கு அஸ்தி வாரம் போடுவதாகுமென்று சிலர் வாதாடுகின்றனர். இந்த வாதம் உண்மையில் ஏற்காது. அரசியல் அதிகா ரத்தைக் கைப்பற்றிய பின்பு, ஐந்து அல்லது பத்துவரு ஷத் திட்டத்தில் தேசம் முழுவதையும் இயந்திரத் தொழில் மயமாக்க முடியும் என்பதற்கு ரஷ்யா ஓர்

சான்று. நமக்கு அதிகாரம் வந்தபின், நாம் வகுக்க வேண்டிய இயந்திரத்தொழில் புனருத்தாரணத் திட்டத்தில், இன்றுள்ள உளுத்துப்போன இயந்திரத்தொழில் முறை உதவாது. ஆகவே நிச்சய மில்லாத ஒரு நன்மை வருங்காலத்தில் ஏற்படக்கூடு மென்று நம்பி, இன்று ஏழை மக்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் ஒரு நன்மையை உதறித்தள்ளுவது விவேகமாகாது. பழைய நாட்களில் நமக்குக் கிடைத்த அனுபவத்தின் படிப்பினையையும் நாம் உணரவேண்டும்.

வங்காளப் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்த இயக்கத்தில் சுதேசி இயக்கம் ஆலை ஏஜெண்டுகளை நம்பினதால் தான், தோல்வி அடைந்தது. அவர்கள் ஆலைத் துணி விலையை உயர்த்தி, அரசியல் தலைவர்களின் இலட்சியத்தைத் தோற்கடித்தனர். ஆலை முதலாளிகளின் நல்லுணர்வையும் தேசாபிமானத்தையுமே அரசியல் வாதிகள் நம்பி இருந்தனர். அதனால் முடிவில் மோசமடைந்தனர். சுதேசியினால் நாம் நன்மை அடைய விரும்பினாலும், தேசாபிமானமில்லாத, குறுகிய திருஷ்டி படைத்த முதலாளித் துவத்திடமிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றாலும், இவற்றைத் தவிர வேறு மார்க்கங்களை நாம் பின்பற்ற வேண்டும். காந்திஜியின் கதர் இயக்கமும், கிராமக் கைத்தொழில் இயக்கமும் இந்த வழிகளைக் காட்டுவன, விவசாயிகளுக்கு ஓய்வுள்ள நேரத்தில் அவர்கள் செய்து லாபமடையக்கூடிய வேலைகளையும் இவை தருகின்றன. இந்தத் திட்டங்கள் எந்த விதத்தில் பிற்போக்கானவை? இவவாறு ஏழைகளின் நிலைமையை உயர்த்துவதின் மூலம், அவர்கள் புரட்சி ஆர்வம் குறைக்கப் படுமென்று சிலர் வாதாடுகின்றனர். கதர் இயக்கத்துக்கு இந்த ஆக்ஷேபம் சொல்ல முடியுமென்றால், வேலை நிறுத்தம் உள்பட

எல்லாத் தொழிற்சங்க இயக்கவேலைகளுக்கும் இது பொருந்தும். ஒரு வேலை நிறுத்தம்கூட உடனடியாகச் சீர்திருத்த மேற்படும் நோக்கத்துடன் நடக்கிறதே யொழிய, புரட்சிகரமான நோக்கத்துடன் நடப்பதில்லை. புரட்சி ஏற்படுவதற்கு அது ஒத்திகையாய் இருக்கிறது என்பது தற்செயலாய் நேரிடும் அம்சமே.

கதரையும், கிராமக் கைத்தொழில் இயக்கத்தையும் பொறுத்தவரை, அவர் அனைத்தையும் உணர்ந்தே அத் திட்டத்தை வகுத்துள்ளார் என்பது எவருக்கும் வெளிப் படை. அரசியல் அதிகாரம் இல்லாதிருக்கும் காலத் திலேயே குறைந்த பக்ஷ சம்பளத்தை நிர்ணயிப்பதை விடப் புரட்சிகரமானது எதுவும் இருக்க முடியாது. தமது மேற்பார்வையில் நடக்கும் ஸ்தாபனங்களில் எல்லாம் அவர் அக் கொள்கையைப் புகுத்தியுள்ளார். திட்டம் சரியாக வேலை செய்யாது என்று அனைவரும் முன்னதாகக் கூறியதைப் பொருட் படுத்தாமல், காந்திஜி அதைப் புகுத்தித் தமது அரசியல் திருஷ்டியையும் புரட்சி ஆற்றலையும் நிலை நாட்டிவிட்டார். அத் திட்டத்தினால், கதர் இயக்கத்தில் கொஞ்சம் எஞ்சியுள்ளதும் அழிக்கப் படும் என்று அவருக்கு எச்சரிக்கை செய்யப்பட் டிருந் தது. ஆனால் ஒரு நியாயமான கொள்கையை நிலைநாட் டும் முயற்சியில், தம் மனத்திற்கு மிகவும் உகந்த திட்டம் அழிந்தாலும் பரவாயில்லை என்று அவர் கூறினார். அவர் கொள்கையும் திருஷ்டியும் சரியானவை என்பதை அனு பவம் நிரூபித்து விட்டது. புதத்திட்டங்களால் கதர் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை.

தொழிலாளர் இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங் கள். அவர் தலைமையின் கீழ் அவர் கொள்கைகளைப் பின் பற்றி நடக்கும் ஓர் தொழிலாளர் யூனியன் இருக் கிறது. இன்று இந்தியாவில், அஹமதாபாத் ஆலை

மஸ்தூர் யூனியனை (தொழிலாளர் சங்கம்) விடபலமான சங்கம் வேறெதுவும் கிடையாது. அதைப்போல் பொருளாதாரத் துறையில் அவ்வளவு ஸ்திரமானதும் கிடையாது. ஆங்குள்ள பெண் தொழிளாவர்கள் வேலை செய்யப் போகும்போது தங்கள் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கு ஒரு விடுதி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் இரவுப் பள்ளிக்கூடங்கள், குடியிருப்பு வசதிகள், ஹரிஜன நலவுரிமை ஸ்தாபனங்கள், கூட்டுறவுப் பண்டக சாலைகள், போன்றவை அந்தத் தொழிலாளர் சங்கத்தோடு இணைக்கப் பட்டுள்ளன. அதைப்போல் வேறெந்தச் சங்கத்திலும் கிடையாது.

விரைவில் சுதந்திரம் அடைந்துவிட வேண்டும் என்ற ஆர்வம் காந்திஜிக்கு கட்டுக்கடங்காமல் இருந்தபோதிலும், அவர் தமது திட்டங்களைப் பரந்த நோக்குடனும் தூரதிருஷ்டியுடனும் நிரந்தர அடிப்படையுடனும் வகுக்கின்றார். ஓர் ஆண்டில் சுதந்திரம் அடையத் திட்டம் வகுப்பதுபற்றி அவர் பேசியபோதுகூட, நீடித்தகாலம் வேலை செய்வதற்கு வேண்டிய நிர்மாணத் திட்டங்களை அவர் வகுத்தார். தேசியக்கல்வி, கதர், ஹிந்துஸ்தானி பிரசாரம், ஹரிஜன முன்னேற்றம் முதலிய இயக்கங்கள் ஓராண்டிற்குள் பூர்த்தியாக முடியாது. பல வருடகால வேலைத்திட்டங்களே வகுக்கப் பட்டன. உடனடியான அரசியல் இலட்சியம் கைகூடவில்லை எனினும், இந்த ஸ்தாபனங்கள் நாளுக்கு நாள் முன்னேறிப் பலம்பெற்று வந்தன. அதன் மூலம் அவை புரட்சிக்கனல் அணையாமல் காத்து வந்தன. அவையெல்லாம் மக்களுக்கு ஒரு புது வழியைக் காட்டுகின்றன. அவை வெற்றி பெருமல் போகலாம்; அவற்றைவிடப் புதிதாகவும் பெரிதாகவும் உள்ள திட்டங்கள் வகுக்கப்

பட வேண்டியிருக்கும்; ஆயினும் அவற்றின் மூலமாகத் தேசம் அடைந்துள்ள பலத்தையும் முன்னேற்றத்தையும் சரித்திர அறிவுடைய எவரும் குறைத்துக் கூற முடியாது.

குறை கூறுவதும் கண்டிப்பதும் வெகு எளிது. ஆனால் கண்டனம் செய்தவர்களிடமே, வேலைத்திட்டம் வகுக்கும் பொறுப்பு ஒப்புவிக்கப் படும்போது இதுவரை தாங்கள் உலகப் புரட்சிக் கண்ணோட்டத்துடன் பேசி வந்தவையெல்லாம் நடை முறையில் இலட்சியத்திற்கு சம்பந்தமில்லாத அன்றாடச் சீர்திருத்தங் களிலேயே தங்களைக் கொண்டு விடுகின்றன என்பதைக் காண்பார்கள். ஒரு புரட்சி இயக்கத்தில் வேலை பார்க்கும் தொண்டர் ஒருவருக்குக் கடிதக் கூடுகளின் மீது தபால்முத்திரை ஒட்டும் வேலை கொடுக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த உற்சாகமற்ற, சற்றும் முக்கிய மில்லாத வேலையை தன் கட்சி கனவு காணும் மகத்தான புரட்சியுடன் அத்தொண்டர் எப்படி இணைத்துப் பார்ப்பார்? பரந்த நோக்கமும், அளவற்ற இலட்சிய பக்தியும் இருந்தால் தான் அது முடியும். அப்பொழுது தான் தன்னுடைய சிறு வேலைகூடப் புரட்சிக்கு மிக அத்தியாவசியமான வேலை என்பதை அவர் காணமுடியும். இந்த அடிப்படைக் கொள்கையை உணர்ந்து கொள்வதற்கு வேண்டிய இலட்சிய பக்தியும் கொள்கை விசுவாசமும் காந்திஜியிடம் உண்டு.

ஒவ்வொரு ஆத்மாவிலும் பரமாத்மாவைக் காணும் ஞானிபோல், காந்திஜி, தாம் பொர்சு செய்யும் ஒவ்வொரு சிறு வேலைத்திட்டத்திலும் சுயராஜ்யக் கடவுளின் தரிசனத்தைக் காண்கிறார். போர்க்களத்தில் முன்னணியில் நின்று பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தாலும் சரி, தம்முடைய சிறிய சர்க்கா

மேலும் மேலும் உபயோககரமாய் இருக்கும்படி செய்து கொண்டிருந்தாலும் சரி, சைகான் கிராமத்திலுள்ள புழுதிபடிந்த தெருக்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாலும் சரி, அவை அனைத்தும் புரட்சிக்கு ஆயத்தம் செய்யும் வேலைகளே; வாயில்லா மக்களுக்கு விமோசனம் தரும் பூரண சுயராஜ்யக் கனவை நனவாக்கும் வேலைகளே என்பது அவர் நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் அவர் வேலை செய்யும்போதே, அதே பக்தி, தம்மைப் பின் பற்றுவோருக்கும் பரவிவிடும்படி அவர் செய்கிறார்.

இவ்வாறாக காந்திஜி, இரு அம்சத் திட்டம் ஒன்றை வகுத்து, தேசத்துக்குத் தந்துள்ளார். நாட்டில் புரட்சி வேகம் கொந்தளித்துக் கொண்டு, தீவிர இயக்கம் நடந்து வரும் வேலைகளுக்கு ஏற்றது ஒரு அம்சம். தேசப் பொது வாழ்வில் தேக்கம் ஏற்பட்டுள்ள நேரத்திலும், சாதாரண சமாதான காலத்திலும் பொருந்துவது மற்றொரு அம்சம். இந்த இரண்டு பருவங்களும் மாறி மாறி வந்தே தீரும். அவற்றிற்கு ஏற்றவாறு இருதரப்பட்ட திட்டம் ஒன்றை இதுவரை எந்தக் கட்சியும், எந்தத் தலைவரும் வகுத்ததில்லை. இத் திட்டங்கள் சுதந்திர மடைவதற்கான திட்டங்கள் என்பதும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமோ, விவசாயிகள், தொழிலாளர்கள் குடியரசோ நிறுவுவதற்கான திட்டங்களல்ல என்பதும் உண்மை தான். ஆயினும் அடிப்படையில் அவர் போர் முறையும் அவர் சுயராஜ்யத் திட்டமும் இந்தியாவின் ஏழைமக்கள் நலனுக்காக வகுக்கப்பட்ட திட்டமே, "எல்லா வகையிலும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து பூர்ண விடுதலை பெறுவதே இந்திய தேசியக் காங்கிரஸின் இலட்சியம். இப் பூர்ண விடுதலை, இந்தியாவின் கோடிக் கணக்கான வாயில்லாப் பூச்சிகளின் நலனுக்காகத் தான். ஆகவே அந்த இலட்சியத்திற்கு விரோதமாகவோ இடையூறு

கவோ இருக்கும், எந்த அம்சத்தையும் மாற்றித் திருத்த வேண்டும். அதைத் திருத்த இயலாவிடில் அடியோடு ஒழிக்கவேண்டும்" என்று வட்டமேஜை மகா நாட்டில் காந்திஜி பேசினார்.

நாளடைவில் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் ஏற்படுத்துவதே ஏழைகளுக்கு நன்மை பயக்கும் என் றிருக்கக் கூடும். ஆனால் தற்போது அத்தகைய திட்டங் களால் இந்தியப் பாமர மக்களுக்கு நன்மை இல்லை என்பது காந்திஜியின் கருத்து. அதற்கிடையில் தொழி லாளர் வர்க்க சர்வாதிகாரத்தில் நம்பிக்கை கொண்டவர் கள், இரு அம்சங்கள் கொண்ட ஒரு திட்டத்தைத் தயா ரித்து அதைத் தேசத்தின் முன்பு சமர்ப்பிக்க வேண்டும். நடைமுறையில் அதை வேலை செய்துகாட்டவும் வேண் டும். அத்தகைய திட்டமெதுவும் வகுக்கப் படாதவரை நம்முடைய திட்டத்தை நாம் பின்பற்றுவதே நலம். சத்தியம் அஹிம்ஸை என்ற கொள்கைகளை உபதேசிப்ப தூடன் மட்டும் காந்திஜி நின்றுவிடவில்லை. அவற்றை நடை முறையில் கடைப்பிடிக்கத் திட்டங்களும் வகுத் தார்.

அவர் கொள்கைகளை உணர்ந்து மதிக்கும் அளவிற்கு உலகம் பக்குவம் அடைய இன்னும் பல நூற்றாண்டுகள் ஆகக்கூடும். ஆயினும் பாமர மக்களிடையும் தமது தத்துவம் பரவும் நாள்வரை காந்திஜி காத்திராமல், அக் கொள்கையை அனுசரித்து ஒரு திட்டம் வகுத்து, அதைச் செயலில் நடத்திக்காட்டி, அதன் மூலம் தம் கொள்கை யின் உயர்வை தேச மக்களுக்கு நிரூபித்தார். ஒரு கொள் கையைக் கடைப்பிடித்து வேலை செய்து காட்டுவதே அதைப் போதிக்கும் சிறந்த முறை என்பதை அவர் உணர்வார். மற்றவர்களும் தங்கள் கொள்கைகளைப் போதித்துப் பரப்ப விரும்பினால் அம் முறையையே பின்

பற்றட்டும். காந்திஜியின் கொள்கையும் திட்டமும், நாம் இதுவரை பின் பற்றிவந்த முறைகளுக்கு முற்றிலும் மாறு பட்டவையாக இருந்தன. பழமையின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு அப் புதிய முறைகளைப் பின் பற்றுவது கடினமாகவே இருந்தது. அதேபோல், உண்மையில் சிறந்த புதுத் திட்டங்கள் இனியும் தோன்றினால் அவை எந்தக் கட்சி அல்லது எந்தத் தலைவரின் திட்டங்களாயினும் சரி, அவற்றை உணர்ந்து மதித்துப் பயிலும் துணிவு மக்களுக்கு வரும் என்பது நிச்சயம்.

மேலும் ஏழ்மை, இன்னல்கள் முதலியவற்றை ஏற்றுக் கொள்ளச் சித்தமாய் இருக்க வேண்டுமென்று காந்திஜி தமது சீடர்களிடம் கூறினர். அவ்வளவு கஷ்டம் அனுபவிக்காமலே நன்மை அடைவதற்கு வேறு யாராவது திட்டம் காட்டினால், அதை மக்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பார்களா என்ன? பலர் தங்கள் வேலைகளையும் வருவாயையும் விட்டுக் கதர், கிராமக் கைத் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேலையால் ஏழைகளுக்குத் தினம் இரண்டணு கிடைக்கக் கூடும். தொண்டர்களுக்கோ, சத்யாக்ரஹ இயக்கம் நடக்காமல் ஓய்வு இருக்கும் நேரங்களுக்கு ஏற்ற திட்டம் இது. ஏழைகளுக்கு அதிக வருவாய் கிடைக்கும்படி செய்யக் கூடியதும், அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட இப்பொழுதுள்ளதை விட நல்ல பலனளிக்கக் கூடியதுமான ஒரு வழியை வேறு யாரும் காட்டினால், அதை, நாட்டுப்பற்றே உயிர் நாடியாகக் கொண்டுள்ள தொண்டர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

காந்திஜியின் திட்டத்திற்கே அவர்கள் தங்கள் வேலையையும் வருவாயையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தார்களானல், அதைவிடச் சிறந்த திட்டத்திற்கு இன்

னும் அதிகத் தியாகங்கள் செய்ய அவர்கள் சித்தமாய் இருக்க மாட்டார்களா? மனித சமுதாயத்தின் சரித்திரத்திலேயே அதற்கு முன்பு எங்கும் கண்டிராத முறைகளான காந்திஜியின் முறைகளையே அவர்கள் பின்பற்ற சித்தமாய் இருந்தார்களானால், தங்களுக்குப் பழக்கமான, அல்லது எளிதான முறைகளை அவர்கள் பின்பற்ற மறுப்பார்களா? அத்தகைய முறைகளை அவர்கள் வரவேற்பார்கள் என்பது நிச்சயம். ஆனால் அத்தகைய முறைகளை இன்று அவர்கள் காணவில்லை என்பதுதான் குறை. அம்முறைகள் தெளிவாகப் புலப்பட்டபின், அவர்களும் அவற்றைப் பின் பற்றுவார்கள். அதுவரை அவர்கள், தாங்கள் நம்பும் திட்டங்களிலேயே பின்பற்றி இடையூறின்றி வேலை செய்ய அனுமதிக்கப் படவேண்டும். அதே சமயத்தில், மற்றவர்கள் தங்கள் தங்கள் கொள்கைகளையே பின்பற்றி வேலை செய்வதை அனுமதிக்க அவர்களும் சித்தமாய் இருக்கின்றனர்.

ஆயினும், காங்கிரஸ் ஸ்தாபனம் யார் கையில் இருப்பது என்ற கேள்வி எழக் கூடும். இங்கும் காந்தீய வழியே நமக்கு வழிகாட்ட வேண்டும். சம்பாரான் சத்யாக்ரஹப் போரின் போது, காங்கிரஸ் அவருக்கு உதவி செய்ய முன் வந்தது. ஆனால் அவர் அதை மறுத்து விட்டார். காங்கிரஸ் ஒரு பெரிய முக்கிய ஸ்தாபனம் என்றும், புது முயற்சிகளிலும் பரீக்ஷார்த்த முறைகளிலும் அது சம்பந்தப் பட்டுத் தன் பலத்தைப் பாதித்துக் கொள்ளக் கூடாது என்றும், தத்துவத்தின் முழுத் தாத்பரியத்தையும் உணராமல் காங்கிரஸ் இதில் பங்கெடுத்து, அதன் மூலம் விவேகத்திற்கும் கொள்கை உயர்விற்கும் தான் பெற்றிருந்த சிறப்புக்குப் பங்கம் விளைவித்துக் கொள்ளக் கூடாது என்றும் காந்திஜி கண்டிப்பாகக் கூறிவிட்டார். ஆத்மீக ஆதரவு மட்டும் தந்தால் போதுமென்று அவர்

கூறினர். தன் வளர்ச்சிக்கும் பக்குவத்துக்கும் ஏற்ற முறைகளையே காங்கிரஸ் பின்பற்ற வேண்டுமென்று அவர் கருதினர்.

1920ல் அவர் கிலாபத் பிரச்னை மீது ஏற்கெனவே சத்யாக்ரஹத்தைத் தொடங்கி விட்டார். தம்முடைய திட்டத்தை அவர் காங்கிரஸ் முன் வைத்தார். அப் பிரச்னையை எடுத்துக் கொள்வது காங்கிரஸுக்கே நன்மை என்று அவர் எடுத்துக் காட்டினர். காங்கிரஸ் விரும்பாவிடில், தாம் மட்டும் அதைத் தொடர்ந்து நடத்துவதாக அவர் கூறினர். காங்கிரஸ் ஏற்றுக் கொண்டால் தான் தமது திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்று அவர் கூறவில்லை. அதே போல் சுயராஜ்யக் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், வோட்டு எடுத்த போது மிகுதியான ஆதரவு காந்திஜியிடம் இருந்த போதும், அவர் விலகி நின்று, சுயராஜ்ய வாதிகள் தங்கள் வேலைத் திட்டத்தைத் தடையின்றி நடத்த இடம் கொடுத்தார்.

அது போல எல்லாக் கட்சிகளும் தங்கள் திட்டத்தைக் காங்கிரஸ் முன் வைக்கட்டும். ஆனால் காங்கிரஸ் அவற்றை ஏற்றுக்கொள்ளாவிடில், அக் கட்சிகள் அவற்றைத் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே நடத்தித் தங்கள் முயற்சியால் அடைந்த வெற்றியின் மூலம் திட்டத்தின் உயர்வை நிரூபித்துக் காங்கிரஸின் ஆதரவைத் தேடிக்கொள்ள வேண்டும். திட்டம் வெற்றி பெற்றால்தான் அவர்கள் முயற்சிகள் வெற்றி பெற்றன என்ற நிபந்தனை கூட அவசியமில்லை. உண்மையான முயற்சி எடுத்து இறுதி வெற்றிக்கு அடிகோலினல் கூடப் போதும். அத்திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும், அதைப் பின் பற்றினல் என்ன நடக்கும்

என்பது சற்றுத் தெளிவாகப் புலப்படும்படி வேலை செய்து காட்டவேண்டும்.

ஆனால் இவ்வாறு உண்மையில் வேலை செய்யாமல், காங்கிரஸை மேலிருந்து கைப்பற்ற விரும்பினால், அது, பசுவிடமிருந்து கடைசிச் சொட்டுப் பாலையும் கறந்துவிட வேண்டும் என்ற பேராசையில் பால் மடுவையே நசுக்கிப் பசுவைக் கொன்று விடுவதையே ஒக்கும். சர்க்காரைக் கைப்பற்றிவிடின் அதிகாரம் கிடைத்து விடுவது போல், காங்கிரஸைக் கைப்பற்றியவுடன் தலைமைப் பதவி வந்து விடாது. நாம் நமது வேலையாலும் கட்டுப்பாடான சேவையாலும் காங்கிரஸுக்கு என்ன பலம் தருகின்றோமோ அதுதான் காங்கிரஸின் பலம். ஆகவே மேலிருந்து காங்கிரஸ் ஸ்தாபனத்தை மட்டும் கைப்பற்றி விடுவது எந்தக் கட்சிக்கும் நன்மை அளிக்காது. காங்கிரஸுக்கு மகத்தான கௌரவமும் பலமும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் சேவையும் தியாகமும் செய்யத் தயாராய் இருப்பவர்கள் தான் அந்தப் பலத்தை உபயோகப் படுத்த முடியும்.

நேரடியான போராட்ட திட்டம், நிர்மாண வேலைத் திட்டம், ஆகிய இரு அம்சங்கள் கொண்ட காந்திஜியின் திட்டத்தை நான் விளக்கமுயன்றுள்ளேன். அவர் காங்கிரஸை எந்த விதத்தில் பயன்படுத்துகிறார் என்பதையும் நான் எடுத்துக் காட்டினேன். இதுதான் இன்று எங்கள் வேலைத்திட்டமும் முறைகளும். இவற்றை விடச் சிறந்த முறைகளும் திட்டங்களும் இருந்தால் அவற்றை வரவேற்கின்றோம். காந்திஜி எந்த உயிரற்ற விதிக்கும் கட்டுப்பட்டவரல்லர். அவர் எப்பொழுதும் புது விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளத் தயாராய் இருப்பார். தேச நலனுக்கு எது சிறந்த திட்டமென்று நாங்கள் நம்புகின்றோமோ அதைப் பின்பற்றி, சுதந்திரப்

போராட்டத்தின் முன்னணியில் என்றும் நிற்போம். தேச விடுதலை என்ற ஒரே லட்சியத்திற்காக நாங்கள் எங்கள் உயிரை அர்ப்பணம் செய்துள்ளோமே தவிர, வேறெந்தக் கொள்கை வெறியோ, மூர்க்கப் பிடிவாதமோ எங்களுக்குக் கிடையாது.

கதரும் இயந்திரத் தொழிலும்

ராட்டினமும் கதரும் நம்முடைய முன்னேற்றத்தைத் தடைசெய்து, நம்மைக் கர்நாடக வழக்கங்களில் இழுத்துச் செல்கின்றன என்பதுதான் படித்தவர்களும், விசேஷ மாகச் சமதர்ம வாதிகளும் அடிக்கடி வற்புறுத்தும் ஆக்ஷேபம். மேல் நாடுகளின் செழிப்பைக் கண்டு இந்தியாவின் வறுமையையும் இயந்திரத்தொழில் மூலம் தான் தீர்க்க முடியுமென்று அவர்கள் கருதுகின்றனர். மேல் நாடுகளின் இயந்திரத் தொழில் வளர்ச்சியை சரித்திர ரீதியாக ஆராய்ந்து பார்க்க இந்த நண்பர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை போலும்! அவர்கள் அவ்வாறு ஆராய்ந்திருந்தால், இவ்வளவு பிடிவாதமாய்ப் பேச மாட்டார்கள்.

மேல் நாடுகளிலும் சரி, கீழ் நாடுகளிலும் சரி, இயந்திரத் தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பருவத்தி லும், அரசாங்க அதிகாரத்தைக் கொண்டிருந்த பிரபுக்கள் இந்த இயந்திரத் தொழில் முதலாளிகளுக்கு முதுகெலும்பாய் இருந்து வந்துள்ளனர். அது மட்டுமல்ல;

அநேக நாடுகளில் இந்த முதலாளிகளே அரசாங்கத்தைக் கைப்பற்றித் தாங்களே நடத்தி வந்தனர். அல்லது, தங்கள் கையாட்கள் மூலம் மறைமுகமாக நடத்தி வந்தனர். இன்றும் இதே நிலைமைதான் இருந்து வருகிறது. தற்கால அரசாங்கங்கள், மறைமுகமாகவோ நேர்முகமாகவோ, முதலாளி வர்க்கத்தினரால் தங்கள் வர்க்க நலனையே கருதி நடத்தப் படுகின்றன என்பதைத் தான் இந்தச் சமதர்ம வாதிகள் முக்கியமாய் கண்டிக்கின்றனர்.

ஒரு விவசாய தேசம், இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைய, அதிகாரமும், செல்வமும் ஒரு சிலர் கையில் குவியும்படி செய்வதைத் தவிர வேறு வழியே கிடையாது என்பது சரித்திரம் உணர்த்தும் உண்மை. சமீபகால ரஷ்ய சரித்திரமும் இதையே வலியுறுத்துகிறது. அங்கு ஒரு சிலர், அதிகாரத்தையும் நாட்டின் வளங்களனைத்தையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, இயந்திரத்தொழிலை வளர்த்துள்ளனர். சில வழிகளில் நாட்டின் விருப்பத்திற்கு மாறாகவே அத்தொழிலை வளர்த்துள்ளனர். முதலாளித்துவ நாடுகளின், இயந்திரத் தொழில் வளர்ச்சி முதலாளி வர்க்கத்தினர் நலனுக்காக நடைபெறுகிறது; ரஷ்யாவிலோ பாட்டாளி மக்கள் நலனைக் கருதி நடைபெறுகிறது. ஆயினும் அத்தொழிலை வளர்க்கக் கையாளப்பட்ட முறைகள் இரு நாடுகளிலும் ஒன்றுதான். தன் நலனைக் காக்கத் தீவிரமாக முனைந்துள்ள, ஒரு குறிப்பிட்ட பிரிவிடம் அரசியல், பொருளாதார அதிகாரம் அனைத்தும் சிக்கிக் கொள்கிறது.

இந்தியாவிலும் இத்தகைய பிரபுக்கள் ஆட்சிதான் நடந்து வருகிறது, ஆளும் வர்க்கத்தினர் அந்நியராய் இருப்பதால் அவர்கள் இங்கிலாந்து முதலாளிகளின் நலனைக் கருதிய முறையில் இந்தியாவை ஆள்கின்றனர்.

இந்திய முதலாளிகளின் நலன் புறக்கணிக்கப் படுகிறது. இந்திய முதலாளி வர்க்கத்தினர் அதிகாரத்துக்கு வந்து, அவர்களுக்குத் தேவையான மூலதனமும் தொழில் நிபுணத்துவமும் இருந்தால், அவர்கள் நிலைமை முன்னேறக் கூடும் ஆனல் அந்நியருக்கு, விசேஷச் சலுகைகள் தந்தாலொழிய, இந்திய சர்க்கார், மூல தனத்தையும் நிபுணர்களையும் சேகரிக்க இயலாது. இவ்வாறு தரப்படும் சலுகைகளால், இன்னும் வெகு காலத்திற்கு இந்தியாவின் பூரண அரசுரிமையைப் பணயம் வைத்ததாகும்.

தற்கால இயந்திரத் தொழிலுக்கு இன்றியமையாத இரண்டாவது அம்சம், அயல் நாடுகளுடன் வியாபாரத்தைக் கைப்பற்றுவதாகும். பிற்போக்கு நாடுகளிடமிருந்து மூலப் பொருள்களைப் பறித்து, இயந்திர உற்பத்திப் பொருள்களை அவற்றின் மீது சுமத்துவதன் மூலம் இந்த வியாபாரம் நடைபெறுகிறது. இப்பொழுது, இத்தகைய வியாபாரத்திற்கும் சுரண்டலுக்கும், வசதி குறைந்துள்ளது. அதனல், ஐரோப்பாவிலும, அமெரிக்காவிலும், ஆசியாவின் சில பாகங்களில் இயந்திரத்தொழில் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள தடைகளும் இடையூறுகளும் அதிகரித்து வருகின்றன. இந்த இடையூறுகளில் இருந்து தான் சென்ற இரண்டு உலக மகாயுத்தங்கள் நடைபெற்றன. இவ்வாறு இரண்டு மூன்று யுத்தங்கள் நடந்து விட்டாலோ, அதன் பின், இயந்திரத் தொழிலை விரும்பும் அளவிற்கு எந்த நாட்டிலும் நாகரிகம் பிழைக்காது.

இயந்திரத் தொழிலில் முன்னேறியுள்ள நாடுகளில் தான் வறுமை நீங்கி விட்டதா? ஒரு சில நாடுகளில் வறுமை நீங்கி விடும்போல் ஒரு காலத்தில் தோன்றியது. ஆனல் ஐரோப்பாவும், கீழ் நாடுகளும், மற்ற நாடுகளும் இயந்திரத்

தொழிலை வளர்த்தபோது, அந்த ஒரு சில நாடுகளின் நிலைமை மாறிவிட்டது. இன்று, இயந்திரத் தொழிலைப் பெருக்கியுள்ள எல்லா முதலாளித்துவ நாடுகளிலுமே, நிரந்தரமாகவும், என்றும் தீர்க்க இயலாதபடியும் வேலையில்லாத் திண்டாட்டம் பரவியுள்ளது.

முதலாளித்துவ முறையின் கீழ் உற்பத்தியும் விநியோகமும் நிலை தவறி இருப்பதால்தான் இந்தக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்று சிலர் வாதாடுகின்றனர். தேசியப் பொருளாதாரத் திட்டம் வகுத்து, சமதர்ம முறையை ஏற்றுக்கொண்டால் இந்த நிலைமை மாறும் என்று அவர்கள் கூறுகின்றனர். ருஷ்யா, அமெரிக்கா போல் எல்லா மூலப்பொருள்களையும் சொந்த நாட்டிலேயே, வைத்துக்கொண்டும், விரிந்த உள் நாட்டு வியாபாரத்தைக் கொண்டுள்ள பெரிய நாடுகளில் இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால், இங்கிலாந்து, ஜப்பான், போன்ற சிறு நாடுகளைப் பொறுத்தவரை, அவர்கள் அயல் நாட்டு வியாபாரம் முறிந்து விட்டால், தேசியப் பொருளாதாரத் திட்டத்தை அமுல் நடத்துவது சாத்தியமே இல்லை. அத் திட்டத்தை நடத்த வேண்டும் என்றால் அவர்கள் எல்லா வகுப்புகளின் வாழ்க்கைத் தரத்தையும் குறைக்க வேண்டியிருக்கும்.

சாதகமான நிலைமை ஏற்பட்டால் இந்தியாவிற்கு ஒரு தேசியப் பொருளாதாரத் திட்டம் வகுப்பது, கடினமென்றாலும் அசாத்தியமல்ல. அதற்குப் பூர்வாங்கமாக இரண்டு துறைகளில் புரட்சி நடக்க வேண்டும். ஒன்றின் மூலம், நமக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். மற்றொன்றின் மூலம், ஒரு தேசியப் பொருளாதாரம், அது பாஸிஸ முறையைப் பின்பற்றியதோ, அல்லது போல்ஷ்விக் முறையைப் பின்பற்றியதோ, நிலைநாட்டப்படவேண்டும். இந்த இரண்டு புரட்சிகளும்

நடந்தாலொழிய, நம் நாடு இயந்திரத்தொழிலில் முன்னேற வேண்டுமென்பது விரும்பத் தகுந்ததாய் இருந்தால் கூட சாத்தியமானதல்ல.

சமீபத்தில் சில நகரசபைகளில், பொருளாதாரத் திட்டம் வகுப்பது பற்றிப் பேச்சு நடந்தது. இப்பேச்சு அந்த நகரசபை அங்கத்தினர்களின் அறியாமையைத்தான் அம்பலப்படுத்துகிறது. சாதாரணமாகவே நகர சபையினர் புத்திசாலித்தனம், உலகப் பிரசித்தமானது. அதிலும் இந்தியா போன்ற அடிமை நாட்டில், நகர சபையிலேயே உண்மை அதிகார மொன்றுமில்லாமல் கேலிக் கூத்து நடக்கும்போது, நகர சபையினர் புத்திக் கூர்மை பற்றிச் சொல்லவா வேண்டும்? உற்பத்திக்கு மட்டுமென்று தனியாக ஒரு பொருளாதாரத் திட்டம் வகுக்க முடியாது. ஒன்று அல்லது இரண்டு இயந்திரத் தொழில்களை எடுத்துக்கொண்டு அவற்றிற்கென்று தனியாகவும் திட்டம் வகுக்க முடியாது. ஒரு தேசம் முழுவதையு மாவது எடுத்துக்கொண்டுதான் பொருளாதாரத் திட்டம் வகுக்க முடியும். அத்திட்டம், உற்பத்தி. விநியோகம் ஆகிய இரு துறைகளையும் தழுவியிருக்க வேண்டும். இவ்வாறில்லாவிடில், உண்மையான பொருளாதாரத் திட்டம் எதுவும் வகுக்க முடியாது.

இந்திய இயந்திரத் தொழிலின் சமீபகாலச் சரித்திரத்திலிருந்து, அதன் வளர்ச்சிக்குரிய வசதிகளும், அதற்குள்ள தடைகளும் புலனாகியுள்ளன. துணித் தொழிலுக்குச் சுதேசி இயக்கத்தி லிருந்து கிடைக்கும் ஆதரவு மட்டும் போதவில்லை; அது எப்பொழுதும் சர்க்கார் தயவை நாட வேண்டியிருக்கிறது. துணித் தொழில் பிரமுகர்கள் ஒழுங்காக நடந்து சர்க்காரின் திட்டங்களை ஆதரிப்பதாக உத்தரவாதம் தந்தாலொழிய அரசாங்கம் அவர்களுக்குச் சலுகை காட்டாது. சர்க்கா

ரின் திட்டங்களென்ன? ஒன்று லன்காஷையர் எஜமானர்களின் நலனைக் கவனிக்க வேண்டும். மற்றொன்று, ராஜ தந்திர விவகாரங்களை முன்னிட்டு ஜப்பானுக்கு இடைஞ்சல் செய்யாமலிருக்க வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களையும் மனத்திற் கொண்டு, சர்க்கார் வகுக்கும் எல்லா திட்டங்களுக்கும் துணித் தொழில் பிரமுகர்கள் ஆதரவளிக்க வேண்டும். ஒட்டாவா ஒப்பந்தமும், லங்காஷையருடனும் ஜப்பானுடனும் செய்துள்ள இரு ஒப்பந்தங்களும் இதற்கு உதாரணங்கள். சர்க்காரின் தயவினால் துணித் தொழிலுக்கு என்ன நன்மை கிடைத்ததோ, அதை விட இந்த ஒப்பந்தங்களால் ஏற்பட்டுள்ள கெடுதலே மிகவும் அதிகம். தொழிலே அழிந்து விடக் கூடுமென்று என்றுமிருந்த அபாயம் இன்றும் நீங்கின பாடில்லை. காங்கிரஸே தங்கள் உண்மை நண்பன் என்று உணர்வதற்கு வகையற்ற ஆலை முதலாளிகள், காங்கிரஸுக்கு எதிராகச் சர்க்காருடன் சேர்ந்து கொண்டதால் தான் இந்தத் தயவாவது கிடைத்தது.

மற்ற இந்திய இயந்திரத் தொழில்களைப் பொறுத்த வரையும் அதே கதி தான். யுத்த காலத்தில் சர்க்கார் தயவுடன் வளர்ந்த பல இயந்திரத் தொழில்கள், யுத்தம் முடிந்தவுடன் நிர்கதியாய் விடப்பட்டன. அத்தொழில்கள் வளர்ந்தால் பிரிட்டிஷ் வியாபாரத்துக்கு இடைஞ்சலேற்படுமென்று கருதப்பட்டது. இந்திய சர்க்காரின் வர்த்தக, நிதி, தொழில் கொள்கை இங்கிலாந்து முதலாளிகளால் தீர்மானிக்கப் படுகிறதென்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை அப்படித்தானே இருக்க முடியும்! தர்ம சிந்தையுடன் ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வரவில்லை. பிரிட்டிஷ் வியாபாரத்திற்கோ, சாம்ராஜ்யக் கொள்கைக்கோ பங்கம் வந்தாலும் அவர்கள் இந்திய

வியாபாரத்தையே வளர்ப்பார்கள் என்று எண்ணுவது அறிவினம்.

சர்க்கார் ஆதரவு பெற்ருே பெருமலோ, மக்கள் ஆதரவுடன், சென்ற நாற்பது வருஷங்களாக இந்தியாவில் இயந்திரத் தொழில் சற்று வளர்ந்து வந்துள்ளது. அதன் விளைவுகளென்ன என்று காண்போம் விவசாயத்தையே நம்பி வாழ்ந்தவர்கள்

1891-ல் *61* சத விகிதம்	*1911*-ல் *71* சத விகிதம்
1901-ல் *66* சத விகிதம்	*1921*-ல் *72·8* சதவிகிதம்

1931ஆம் வருஷப் புள்ளி விவரம் ஜன சங்கியை அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆனல் அறிக்கையில் உள்ள மற்ற புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தால் அது 73 சத விகிதம் என்பது தெரியவரும்.

இந்தப் புள்ளி விவரங்களில் ஆழ்ந்த உண்மை அடங்கி இருக்கிறது. நிலத்தையே நம்பி வாழ்வோர் எண்ணிக்கை படிப்படியாய் உயர்ந்து வருவது இதிலிருந்து தெரிகிறது. தற்கால ஆட்சிமுறையின் கீழ், இந்தியா இயந்திரத் தொழிலில் வளர்ச்சி அடைய வேண்டுமென்றல் பிரளய காலம் வரை காத்திருக்க வேண்டுமென்பது இதிலிருந்து புலப்படும்.

மேலும், இயந்திரத்தொழில் பற்றிப் பேசுவோர், புதுத் தொழில்கள் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், தள்ளாடித் தடுமாறிக் கொண்டிருக்கும் பழைய தொழில்களில் கவனம் செலுத்துவது சிலாக்கியம். தேசிய சர்க்கார் இல்லாமல், உண்மையான தொழில் வளர்ச்சி ஏற்பட முடியாது. தேசிய சர்க்கார் ஏற்படும் வரை, பட்டினியால் வாடும் நம் தேச மக்களுக்கு உதவி புரிய வழியில்லாமல் நாம் காத்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. இயந்திரத் தொழில் வளர்ச்சியின்

மூலம் தான் பாமர மக்களுக்கு நன்மை செய்ய முடியு மென்றால் நாம் காத்திருக்க வேண்டியதுதான்.

ஆயினும், அதற்கிடையில் இக் கொடும் வறுமை யைத் தீர்க்க ஒன்றும் செய்யாமல் இருப்பதென்பது கயமை. பாமர மக்களின் வறுமையை நீக்க வேண்டு மென்ற ஆர்வம் கொண்டவர்கள்தான் சுயராஜ்யத்திற் காகப் பாடுபட முடியும். சுயராஜ்யத்திற்காக உழைக் கும் போதே, பாமர மக்களின் தரத்தை ஒரு சிறிதாவது உயர்த்த அவர்கள் பாடுபடாவிடில், தங்கள் இலட்சியத் திற்கே துரோகம் செய்தவர்களாவர். ஏழைகளுக்குச் செய்யும் சேவையே, சுயராஜ்ய சேவை. இன்றைய நிலைமையில், இந்தச் சேவை செய்வதற்குச் சிறந்த வழி சர்க்காவும் கதரும் தான். இத்திட்டத்தின் மூலம் நிர்மாண ஊழியர்கள், பாமர மக்களுடன் நெருங்கிய உறவு கொள்ளவும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. இத்தகைய உறவு, ஓர் தேசியப் புரட்சிக்கு மிகவும் இன்றியமையாத தாகும்.

காந்திஜியின் பெயரையும் அவர் கருத்துக்களையும் பற்றி நான் இங்குக் குறிப்பிடாமல், கதர் பற்றி விவாதம் செய்துள்ளேன். கதர்த் திட்டத்தை எதிர்ப்பவர்கள் பெரும்பாலும், இயந்திரங்கள், மேல் நாட்டு நாகரிகம், மதம் முதலியவை பற்றிக் காந்திஜி கொண்டுள்ள கருத் துக்களை இதில் இழுத்து விட்டுத் தெளிவாக இருக்கும் பிரச்னையைக் குழப்புகின்றனர். அவ்வாறு செய்யாமல், கதர்த் திட்டத்தின் பொருளாதாரத் தத்துவத்தை, தர்க்க ரீதியாகவும் சரித்திர ரீதியாகவும் ஆராய வேண்டியே நான் இங்கு காந்திஜியின் பெயரை இழுக்காமல் இருந்தேன்.

குடிசைக் கைத்தொழில்கள்

இயந்திரத்தொழிலின் மிகைப்பட்ட உற்பத்தி முறையினால், மனிதன் இயந்திரத்தின் அடிமையாகி விட்டான். செல்வம் ஓர் சிறுவர்க்கத்தின் கையிலேயே சிக்கும்படி செய்துள்ளதால், வர்க்க விரோதமும் போரும் மூண்டு சமூகம் நிலையற்று புரட்சிகளிடையும் எதிர் புரட்சிகளிடையும் பிய்க்கப் படுகிறது. இயந்திரத் தொழில் முறையினால் ஏற்பட்டுள்ள சமூகத் திங்குகளும் ஒழுக்கச் சீர் கேடுகளுமோ சொல்லில் அடங்காதவை.

ஆனால் அதிகாரம் இயந்திரங்களின் சொந்தக்காரர்கள் கையில் இல்லாமல், விவேகத்துடன் பொதுநலனுக்கு உழைப்போர் கையில் இருந்தால், இக்கெடுதலைத் தவிர்க்க முடியும். விவேகமுள்ள சர்க்கார், ஒழுங்கான முறையில் உற்பத்தியை நடத்தினால், ஏற்றத்தாழ்வுகளை நீக்க முடியும். ஏற்றத் தாழ்வுகள் நீங்கினால், சமூக ஒழுக்கச் சீர்கேடும் நீங்கும். உற்பத்தியும், விநியோகமும், தனிப்பட்டவர் லாபத்திற்காக நடக்காமல், பொது நலனைக் கருதி நடந்தால், சமூகத்தில் விஞ்ஞானத்தின் நன்மைகளை

அடைந்து, கெடுதல்களை நீக்க முடியும். இயந்திரத்தை மனிதனின் கருவியாக்க முடியும், ஆனால் பொது நலப் பற்றும் விவேகமும் உள்ள ஓர் சர்க்கார் நிறுவப் படும் வரை, இன்று சமுதாயத்தை வாட்டும் கெடுதல்கள் நீங்கு மென்று எண்ணுவது வீண்.

தொழிற்சாலைக் கட்டுப்பாடு சட்டங்களை எவ்வளவு தீவிரமாகத்தான் இயற்றினாலும், முதலாளி தத்துவ முறையினால் ஏற்படும் கெடுதல்களையும் நீக்குவது அசாத் தியம் என்பதை அனுபவம் நமக்கு நன்கு உணர்த்தியுள் ளது. அந்த ஏற்றத்தாழ்வுகளினால் போட்டி, பொறாமை, பகைமை, வர்க்கப் போர் முதலியவை மூண்டு கொண்டே இருக்கும். விஞ்ஞானம் மனித சமுதாயத்தின் முன் னேற்றத்திற்கும் நன்மைக்கும் ஏற்றமுறையில் மக்கள் வாழ்வைப் பண்படுத்த வேண்டுமென்றால், அது உற்பத்தி யைக் கட்டுப்படுத்துவதோடு, கொள்முதல், விநியோகம், பரிவர்த்தனை, விஞ்ஞானம் முதலியவற்றையும் கட்டுப் படுத்துதல் வேண்டும்.

இன்று, முதலாளித்துவ முறைப்படி, பொது நலனுக் குக் கெடுதலான பொருள்களை உற்பத்தி செய்வதில் தான் பயன்படுகிறது. புது இயந்திரங்களையும் உற்பத்தி முறைகளையும் கண்டு பிடித்ததோடு விஞ்ஞானம் நின்று விட்டது. இந்த இயந்திரங்களையோ, ஒரு சிறு வர்க்கத் தினரே பெரும்பாலும் நேர்மையற்ற முறையில் தன் வசப்படுத்திக் கொண்டனர். மனித சமுதாயம் விஞ்ஞானத்தால் பலன் அடைய வேண்டுமென்றால், சமூகத்திற்கு உபயோககரமான பொருள்களை வேண்டிய அளவில் உற்பத்தி செய்துவிட்டு, வேண்டாத கெடுத லான பொருள்களின் உற்பத்தியை நிறுத்தவேண்டும். அதுதான் வருங்காலத்திலும் நன்மை பயக்கும். தான் சிருஷ்டித்துள்ள பொருள்களின் விநியோகம், பரிவர்த்

தனை, கொள் முதல் முதலியவற்றிலும் விஞ்ஞானம் உதவ வேண்டும்.

இன்று பௌதிகம், ரசாயனம் போன்ற விஞ்ஞான சாஸ்திரங்களால் இயற்கையைக் கட்டுப்படுத்த முடிகிறது. அதேபோல், சமூக அரசியல் சாஸ்திரங்களைப் பயன்படுத்தி, ஓர் பொருளாதாரத் திட்டத்தை வகுப்பது சாத்தியம். தொழிற்சாலையில் மட்டும் விஞ்ஞானத்தைப் புகுத்தாமல், சமூகம், பொருளாதார வாழ்க்கை அனைத்தையும் விஞ்ஞானத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். ஒரு துறையில் மட்டும் விஞ்ஞானத்தை உபயோகிப்பதால், பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல, சமூக, அரசியல் துறைகளிலும் ஒரே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இயந்திரமும் தொழிற்சாலையும் வருவதற்கு முன், குடிசைத் தொழில்களைக் கொண்டு நடந்துவந்த நமது விவசாயப் பொருளாதார முறை மிகவும் கட்டுப் பாடாகவும், முதலாளித்துவ முறையைவிடச் சமத்துவமாகவும், நடந்து வந்தது. பழைய பொருளாதார முறைகளைக் கையாண்டு வரும் தேசங்களில் இன்னும் அதிகக் குழப்பத்தைப் புகுத்துவது நியாயமா என்ற கேள்வி எழுகிறது. பழைய முறையிலாவது சம்பிரதாயக் கட்டுப்பாடும், ஒழுக்கம், நீதி முதலியவற்றின் கண் காணிப்பும் இருக்கின்றன.

ஆகவே இயந்திரத்தொழில் முறைமீது ஒரு துவேஷமும் இல்லாத ஒரு சீர்திருத்த வாதிகூடக் கேட்கும் கேள்வி இதுதான்: இன்னும் அதிக இயந்திரங்களைப் புகுத்திக் குழப்பத்தையும், அசுத்தம், சமூக ஒழுக்கச்சீர்கேடு, வர்க்கப் போராட்டம், முதலியவற்றையும் அதிகரித்து விட்டு, நிலைமையைச் சரிப்படுத்துவதற்காக ரத்த வெள்ளம் பெருகும் ஒரு புரட்சிக்காகக் காத்திருப்பது அவசியமா? பூரணமான நலனைப்பயக்கும் சீரான

திட்டத்தை வகுப்பது சாத்ய மாகும்வரை, பழைய முறையின் கீழ் வசிப்பதே சிறந்த தல்லவா? அதே சமயத்தில் பழைய முறையில் நாம் எவ்வளவு புத்துயிரையும் வேகத்தையும் புகுத்த முடியுமோ, அவ்வளவையும் புகுத்திப் பயன்பெற முடியாதா? முடியுமென்ற நம்பிக்கையில் தான் கிராமக் குடிசைக் கைத்தொழில் புனருத்தாரண இயக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இயந்திரத்தொழில் முறையில் நம்பிக்கை யுள்ளவர்கள் முதலில் சமூக பொருளாதாரத் துறைகள் அனைத்தையும் விஞ்ஞானக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவர முடியும் என்பதை நிரூபிக்கட்டும். '

இந்தியாவைப் பொருத்தவரை முதலாளித்துவச் சுரண்டலி லிருந்து தொழிலாளரைக் காப்பதற்கு மற்ற சுதந்திர நாடுகளுக்கு உள்ள அதிகாரம்கூட, நமக்குக் கிடையாது. காந்திஜியின் தலைமையின் கீழ் சாத்வீகம், சமரசம் ஆகியவற்றையே கொள்கைகளாகக் கொண்டு நடக்கும் அஹமதாபாத் தொழிலாளர் சங்கத்தினுல்கூட, தொழிலாளர்களின் நியாயமான, நிதானமான கோரிக்கைகளைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. குறுகிய நோக்கமும் கண்மூடித் தனமான பேராசை வெறியும் உந்த, முதலாளிகள் தொழிலாளர் சம்பளத்தைக் குறைத்து வருகின்றனர்.

இவ்வளவிற்கும் அஹமதாபாத் ஆலைகளின் எண்ணிக்கையும் அவர்கள் வருஷா வருஷம் கொள்ளையடிக்கும் லாபமும் கணக்கு வழக்கின்றி அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. சுதேசி இயக்கத்தினுல் கிடைக்கும் ஆதரவால் இந்த ஆலைகளுக்கு நன்மை ஏற்படுகிறதென்ற போதிலும், அவை இம்மாதிரிச் செய்து வருகின்றன. இந்த லாபத்தை எல்லாம் முதலாளிகள் விழுங்கி விட்டுக் காங்கிரஸுக்குத் தந்துள்ள வாக்குறுதி

களையும் மீறியுள்ளனர். சுதேசிப்பற்றும் அந்நிய நாட்டுச் சரக்கு பகிஷ்கார இயக்கமும், தொடங்கின காலம் முதற்கொண்டு, ஆலை முதலாளிகள், மிகக் கேவலமான முறையில் தேசத்துக்குத் துரோகமாக நடந்து வந்துள்ளனர். முடிவில் அது அவர்களுக்கு அழிவையே தேடும். பிரிவினைக் கிளர்ச்சியின்போது, அவர்கள் விலைவாசிகளை உயர்த்திய அளவில், சுதேசி இயக்கமே அழிந்து விடும் போலிருந்தது.

1921 முதற்கொண்டு அவர்கள், கனத்த ரகத் துணியை உற்பத்தி செய்து, தங்களுக்கு ஆதரவளித்து வந்த கதர் இயக்கத்துடனேயே போட்டியிடக் தொடங்கி விட்டனர். கதர் அணியாதவர்கள், தாங்கள் சுதேசித் துணி அணிந்து வருவதாகச் சமாதானம் கூறினர். சில ஆலைகள், தாங்கள் உற்பத்தி செய்துவந்த துணியையே கதர் என்று சொல்லி வந்தன. 1932 முதற் கொண்டு இந்த முதலாளிகள் பகிரங்கமாய்த் தேசத் துரோகம் செய்தனர். முன்பு காங்கிரஸுடன் அவர்கள் செய்திருந்த ஒப்பந்தங்களை எவ்வளவு இறுமாப்புடனும் அகங்காரத்துடனும் மீறினர், என்பதைப் பொதுஜன ஊழியர்கள் நன்கு அறிவர். தேசிய இயக்கத்திற்குச் சேவை செய்வதே முடிவில் தங்களுக்கும் நன்மை என்பதை மறந்து, கண்மூடித் தனமான சுயநலப் பேராசைக்குப் பலியாயினர். அசெம்பிளியில் ஆலை முதலாளிகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த பிரதிநிதி, காங்கிரஸை சர்க்கார் நசுக்கிவிட வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு வந்தார். ஓட்டாவா ஒப்பந்தத்தினாலும், ஜப்பானுடனும் லங்காஷையருடனும் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தினாலும், அவர்களுக்குத் தேச நலனைக் காக்கவும் யோக்யதை கிடையாது. தங்கள் நலனைக் காத்துக் கொள்ளவும் திறமை கிடையாது என்

பதை நிரூபித்து விட்டனர். துணித்தொழிலை நான் ஓர் உதாரணத்திற் காகத்தான் குறிப்பிடுகின்றேன், சர்க்கரைத் தொழில் முதலிய எல்லாத் தொழில்களிலும் பேராசைக்காகப் பொது நலன் பலியிடப் படுவதைத் தான் காண்கின்றோம்.

ஒப்பந்தங்களை பிறரும் கௌரவிக்கும்படி செய்யவோ, தொழிலாளரையோ, கொள்முதல் செய்வோரையோ காப்பாற்ற நமக்கு அதிகார மில்லாதபோது மிகுதியான இயந்திரத் தொழில் உற்பத்தி முறைக்கு உதவி செய்வது பற்றிப் பேசுவதெல்லாம் வீண். இயந்திரத் தொழிலுக்கு நாமும் எவ்வளவோ உதவி செய்து பார்த்தாகி விட்டது. அந்நிய சர்க்காரிட மிருந்து அதைக் காப்பாற்றினோம்; பொது வுடைமையினாலோ, புரட்சிகரமான அபேதவாதத்தாலோ, தொழில்கள் அனைத்தும் அழியாமலும் நாம் காப்பாற்றினோம்.

இவை அனைத்துக்கும் நமக்குக்கிடைத்த பிரதிபலன், துரோகம் தான். இயந்திரத் தொழில் நிலைமை இவ்வாறென்றால் வர்த்தகத் துறையிலோ இன்னும் மோசம். மொத்த வியாபாரிகளும் சில்லரை வியாபாரிகளும், பல முறை அந்நிய சரக்குகளைச் சுதேசி சரக்குகள் என்று சொல்லி விற்றதுண்டு.

நிலைமை இவ்வாறிருக்க இயந்திரத் தொழிலை நாம் ஆதரிப்பதென்பது நம் அழிவை நாமே நாடிக் கொள்வதாகும். அதை ஆதரித்துப் பேசும் நண்பர்கள் முதலில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டு அதன் பின்னர், விவசாயி, தொழிலாளி கொள் முதல் செய்வோர் ஆகியோர் நலனைக்காக்க அந்த அதிகாரத்தை உபயோகிப்பது தான் நன்மை. பாமர மக்கள் நலனுக்கு ஒவ்வாத முறையில் உற்பத்தி செய்வோர் அனை

வரையும் தண்டிக்கும் சக்தியை முதலில் அவர்கள் பெற வேண்டும். அந்த அதிகாரத்தைப் பெருமலேயே அவர்கள் விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசுவார்களாயின், காந்திஜி எவ்வளவு பித்தர் என்று சொல்கிருர்களோ, அதைவிடப் பன்மடங்கு பித்தர்களாக அவர்கள் ஆகி விடுவார்கள்.

அவராவது எதிலும் பாமர மக்கள் நலனைக் கவனிக்கிருர். இதில் முதலாளி வர்க்கத்தினர் ஒத்துழைப்பையும் அவர் நாடுகிருர். ஆனல் அந்த முதலாளிகளோ பேராசையிலும் பண வெறியிலும் மயங்கி அதை நிராகரித்தனர். எந்த ஏணி மீதேறி அவர்கள் உயர்ந்த நிலையை அடைந்தனரோ, அந்த ஏணியையே அவர்கள் உதறித் தள்ளிவிட்டனர். இதற்குச் சில விதிவிலக்குகள் இருக்கலாம்; ஆனல் அவை வெகு சிலவே.

போதிய அதிகாரம் இல்லாதவரை இவை எங்கும் நடக்கும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனல் பாமர மக்களும் நடுத்தர வகுப்பினரும் தங்கள் அடிமைத்தனத்திற்குத் தாங்களே உடந்தையாகவும் உதவியாகவும் இருக்கக் கூடாதென்பது தான் அதிலிருந்து தெரிகிறது. ஏழைகள் இன்னும் உழைத்து உழைத்துப் பணக்காரனிடம் அதிகமான செல்வம் குவியும்படி செய்வதில் பலனில்லை. காருக்குமேல் காரும், பங்களாவிற்கு மேல் பங்களாவும் அடுக்கிக் கொண்டே போவதில் பலனில்லை. செல்வம் குவிந்து கொண்டிருப்பதும், பணம் அதிகம் இல்லாத ஏழைகளிடம் இருக்கும் பணமும் பறிக்கப்படுவதுமான நிலைமை ஏற்படக்கூடாது. பணக்கார முதலாளி வலையில் விழாமல், நாம் அதே சமயத்தில், தேசத்தின் உயிர் நாடியான சுதேசியையும் விட்டு விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஆகவே பாமர மக்கள் நலனை விரும்பும் ஒவ்வொரு தேச பக்தரும் குடிசைத் தொழில்களை ஆதரிக்கவேண்டும். நாம் அதிகாரத்தைக் கைப்பற்றி பாமர மக்களின் பொது நலனுக்கு உகந்த முறையில் உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை, கொள் முதல் முதலியவற்றை ஏற்பாடு செய்யும்வரை குடிசைக் கைத்தொழில் முறையே சிறந்த முறை.

நிர்மாண வேலையும் புரட்சியும்

சமதர்ம வாதிகளிடையும் பொதுவுடைமை வாதிகளிடையும் ஒரு சிலர் பின்வருமாறு வாதம் செய்கின்றனர் :—

'சர்க்காவும், கிராமக் கைத் தொழில்களும், பொதுவாகக் காங்கிரஸின் நிர்மாணத் திட்டமும் ஓரளவிற்கு மக்களுக்கு நன்மை செய்கின்றன ஆனாலும் பாமர மக்களின் வறுமை, அடிமைத்தனம், இழிநிலை, ஆகியவை ஒரு புரட்சி மூலந்தான் நீங்க முடியும் அவர்கள் நிலையை ஓரளவு உயர்த்தும் அரைகுறைச் சீர்திருத்தங்கள் மக்களுக்கு லாகிரிபோல் ஆகிவிடுகின்றன. உண்மைப் பிரச்னையை-புரட்சிப் பிரச்னையை அவர்கள் மறக்கும்படி செய்து விடுகின்றன. அதிருப்தி எனும் தீயை அணைத்து விடுகின்றன. அடிமைத் தனத்திற்கே அவர்கள் பழக்கமாகி விடும்படி செய்கின்றன. எல்லா அமைப்புகளிலும் அடிப்படையாக உள்ள வர்க்கப் போராட்டத்தை அவர்கள் மறந்து விடும்படி செய்கின்றன. மக்கள் சொல்லொணுத் துயரங்கள் அனுபவிக்க நேர்ந்து இனியும்

சகிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டால் தான், புரட்சி எழும்.'

எவ்வளவுக் கெவ்வளவு அநீதி நடந்து வந்ததோ அந்த அளவிற்குத் தண்டனையும் கடுமையாக இருக்கும். புரட்சியின் பயனும் எல்லாம் அடியோடு மாறுதலடையும். ஆகவே இப் பாமர மக்களுக்கு ஓரளவு நன்மை பயக்கும் சீர்திருத்தங்களையும் நாம் புகுத்தாமலிருக்க வேண்டும். அவ்வாறு, வேண்டுமென்றே சீர்திருத்தங்களைப்புகுத்தாமலிப்பதால், வறுமை இன்னும் அதிகமாகும்; இழிநிலையி இன்னும் மோசமாகும்; உயிர்ச் சேதம் கூட அதிகம் ஏற்படக் கூடும். இவையெல்லாம் அனுபவித்துத் தீர வேண்டியவை என்பதை உணர்ந்து, மக்கள் இவற்றைக் கலங்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். இக்கஷ்டம், பிரசவ வேதனை போன்றது; வைத்தியர் சிகிச்சை செய்ய உபயோகிக்கும் கத்தி போன்றது. இழிவிலும் இன்னலிலும் எவ்வளவு அனுபவிக்க முடியுமோ, அவ்வளவையும் அனுபவித்த பின்தான், மனித சமுதாயம் எழுச்சியுற்றுத் தன் தளைகளைத் தகர்க்க முடியும். இதுதான் சில சமதர்ம வாதிகள், பொதுவுடைமை வாதிகள் ஆகியோர் வாதம்.

ஒரு புரட்சி ஏற்பட்டு, எல்லாம் அடியோடு மாறினாலொழிய, மக்களை அழிவிலிருந்து காக்க முடியாது என்ற ஓர் நிலை சமுதாயத்தில் ஏற்பட்டு விடுவது சாத்தியம் தான். அத்தகைய நிலைமையில், அடிப்படையே உளுத்துச் செல்லரித்துப் போயிருக்கும் நிலையில், மேல்வாரியாகச் செய்யப்படும் சீர்திருத்தங்களால் நிரந்தர நன்மை ஒன்றும் இருக்க முடியாது. நீதி, நியதி எல்லாவற்றையும் அடியோடு மாற்றினால் தான் அத்தகைய நிலைமைக்கு நிவாரணம் ஏற்படக் கூடும். பழைய அமைப்பு மிகவும் செல்லரித்துப்போய், காலப் போக்குக்கு ஒவ்வாததாயிருந்தால், படிப்படியாக மாறுதல் செய்வதால் பலனில்லை.

மல் போகக்கூடும். அதனால் சமுதாயம் இன்னும் சீரழிவு தான் அடையும். இத்தகைய நேரத்தில், வைத்தியர் தமது கத்தியால் ரணத்தைப் பீற வேண்டியிருக்கும்: அதாவது புரட்சி ஏற்படுவது அவசியமாகலாம்.

இவையெல்லாம் உண்மைதான். ஆனால், 'இதைவிட மோசமான நிலை ஒன்றிருக்க முடியாது' என்ற நிலைமை ஏற்பட்டபின்.தான், இழிநிலையின் எல்லையை அடைந்த பின் தான், புரட்சி ஏற்படுமா என்பது சர்ச்சைக் குரியது. புரட்சிகளின் சரித்திரங்களை ஆராய்ந்தால், இத்தகைய நிலை அவசியமில்லை என்பது புலனாகும். பல சமயங்களில், புரட்சிக்கான சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் சாதகமாயிருந்தபோதும், ஏதாவது ஒன்று இல்லாத குறையால்' புரட்சி நேரிடாமல் இருந்துள்ளது. வேறு சில சமயங்களில் நிலைமை அதிக மோசமாகும் வரை, புரட்சி காத்திருக்கவில்லை. உணர்வும் வீறும் கொண்ட ஒரு சிலரோ, ஒரு சில தொகுதியினரோ, எழுச்சியுற்று புரட்சிக்கனலை மூட்டியுள்ளனர். இன்னும் சில சமயங்களில், அரை குறைச் சீர்திருத்தங்கள் நடந்து கொண்டிருக்கும்போது ஓரளவு அவற்றின் பயனாகவே, புரட்சி ஏற்பட்டதும் உண்டு.

ஆதிகாலத்தில், அடிமைகளின் நிலையை விடக் கேவலமான நிலை எதுவும் இருந்திருக்கவே முடியாது. எண்ணிக்கையிலோ, அவர்கள் தங்கள் எஜமானர்களை விடப் பன் மடங்கு அதிகமாய் இருந்தார்கள். அப்படியிருந்தும் புரட்சி எழவில்லை. சமீப காலத்திலோ, அமெரிக்காவில் இருந்த நீக்ரோக்கள் நிலை, மனிதர் அனுபவிக்கக்கூடிய அவமானத்தின் எல்லைக்கும் அப்பாற்பட்டிருந்தது. ஆயினும் நீக்ரோ விடுதலையடைந்தது. அவனுடைய சொந்த முயற்சியாலோ, கிளர்ச்சியாலோ அல்ல. புராதன ரோமாபுரியில் ப்ளிபியன்கள் நிலை,

இன்று ஐரோப்பாவிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் நிலையை விட மோசமாக இருந்தது. ஆயினும் அவர்களிடை, ஒரு சில விவசாயிகளின் எழுச்சிகளே நடைபெற்றன. அவையும் ரத்தவெள்ளத்தில் மூழ்க்கடிக்கப் பட்டன.

சமீபகால சரித்திரத்தில், மன்னர்களையும் நிலச்சுவான்தார்களையும் எதிர்த்து முதலாளிகளும் நடுத்தர வகுப்பினரும் புரட்சிசெய்தனர். ஆனால் புரட்சிக்கு முன்பு அவர்கள் நிலமோசமாய் இருந்ததென்று சொல்வதற்கில்லை. அவர்கள் வசதியான நிலைமையில் தான் வாழ்ந்துவந்தார்கள். மேலும் அவர்கள் புரட்சி செய்த நேரத்திலேயே அவர்களின் நிலைமை இன்னும் உயர்ந்து கொண்டிருந்தது. செல்வத்திற்கேற்றவாறு சுதந்திரமும் அதிகரித்தது. அப்படியிருந்தும் அவர்கள் புரட்சி செய்தார்கள். அமெரிக்கப் புரட்சியும் வறுமையிலிருந்து எழுந்ததல்ல. தங்கள் அரசியல் பொருளாதார வாழ்வை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள உரிமை வேண்டும் என்பதை நிலைநாட்டவே அப் புரட்சி எழுந்தது.

நம்முடைய சமதர்மவாதிகள் வாதத்திற்கு பிரெஞ்சுப் புரட்சியை ஆதாரமாக எடுத்துக் காட்டலாம். ஆனால் உண்மையில் அந்த உதாரணமும் அவர்களுக்குச் சாதகமாயில்லை. விவசாயிகள், நடுத்தர வகுப்பினர், ஆகியோர் நிலை உண்மையில் முன்னேறிக் கொண்டிருந்தது. சகிக்க முடியாத நிலைமையினால் புரட்சி ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. மக்கள் முன்பு பொறுமையுடன் சகித்துக்கொண் டிருந்ததையே அப்பொழுது சகிக்க மறுத்ததால் தான் புரட்சி எழுந்தது. சுதந்திரம், சமத்துவம், ஆகியவை தங்கள் பிறப்புரிமை என்று மக்கள் நம்பினர். அவர்கள் கொள்கைக்கும், அவர்கள் உண்மையில் இருந்துவந்த நிலைக்கும், சூழ் நிலைக்கும்

வெகுதூரமிருந்தது. அக் கொள்கைகள் அக்காலத்தில் சரியாகவும், ஒழுங்காகவும் உருவாக்கக் கூடவில்லை. அவற்றைப் போதித்த தத்துவ அறிஞர்களிற் சிலருக்கு அக் காலப் போக்கிலும் நாட்டு நடப்பிலும் சற்றும் சிரத்தை கூட இல்லை. அப்படியிருந்தும் இந்த பிரெஞ்சுப் புரட்சி, சரித்திரத்திலேயே நிகரற்ற ஒரு எழுச்சி என்று தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

பாமர மக்களின் பொருளாதார நிலைமை மிக மோசமாயிருந்ததால் எழுந்த புரட்சிக்கு ஒரே ஒரு உதாரணம், சமீப காலத்தில் நடந்த ரஷ்யப் புரட்சிதான், ஆனாலும் அந்தப் பொருளாதார நிலைக்கு முக்கிய காரணங்கள், யுத்தத்தால் ஏற்பட்டிருந்த களைப்பும், அராஜகமும் ஆகும். யுத்தத்திற்கு முன்பு, நிலச்சுவான்தார்கள் ஆதிக்கத்தின் கீழிருந்த குடியானவர்கள், அதிலிருந்து விடுவிக்கப் பட்டதால், விவசாயிகள் நிலை சற்று உயர்ந்திருந்தது. மேலும் அக்காலத்தில், மத்ய ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும், பொதுவாக அதே பொருளாதார நிலைதான் இருந்தது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளின் நிலைமை ரஷ்யாவின் நிலைமையை விட மோசமாயிருந்ததென்று கூடச் சொல்லலாம். அப்படியிருந்தும் அங்கு புரட்சி ஒன்றும் எழவில்லை. மத்ய ஐரோப்பாவிலுள்ள நாடுகள் பல இன்னும் அதே மோசமான நிலையில் தான் இருக்கின்றன. அப்படி யிருந்தும், புரட்சி எழுவதாய்க் காணோம்.

பாரபக்ஷமற்று, ரஷ்யப் புரட்சியை ஆராய்வோர் அப் புரட்சியின் வெற்றியில், அதிர்ஷ்டம், அல்லது தற்செயலாய் நேர்ந்த சம்பவங்கள், ஆகியவற்றிற்கு எவ்வளவு பங்குண்டு என்பதை உணரமுடியும். நெருக்கடியான பல கட்டங்களில், தப்பித் தவறி, எங்காவது ஒரு கோளாறு ஏற்பட்டிருந்தால், புரட்சி முழுவதும் தோற்

றிருக்கும். சில சமயங்களில், புரட்சித் தலைவர்கள் வகுத்த சில திட்டங்கள் தோற்றதாலேயே புரட்சி வெற்றி பெற்றதென்று கூறவேண்டும்.

சரித்திர பரிணாம முறைக்கு மேனாட்டுச் சரித்திரமே சிறந்த உதாரணம் என்று கருதப்படுவதால், நான் மேல் நாட்டுப் புரட்சிகளில் இருந்து உதாரணங்களைக் கையாண்டுள்ளேன். ஆசிய நாடுகள் சரித்திரமோ, மேடு பள்ளங்கள் நிறைந்தது. அதில் எந்த ஒரு திசையில் முற்போக்கு ஏற்பட்டது என்று திட்டமாகச் சுட்டிக் காட்டுவது சாத்தியமில்லை. ஒரு சமயம் முன்னேற்றமும் செழிப்பும் காணப்படுகின்றன. மற்றொரு சமயம் சீரழிவும் கேடும் காணப்படுகின்றன. அப்படி யிருந்தும், ஆசியப் புரட்சிகளிலிருந்து சில உதாரணங்கள் எடுத்துக் காட்டுவதும் பொருந்தும். இப் புரட்சிகள் அநேகமாய், தனிப்பட்ட நபர்களின்-அவர்கள் மேதைகள், அல்லது அரசியல் தலைவர்கள் அல்லது மதாசாரியார்கள் ஆயினும் சரி-வாழ்க்கையுடன் பிணைக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.

பௌத்த, கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களைவிட எல்லாத் துறைகளிலும் மகத்தான புரட்சி ஏற்படுத்துவது எதுவும் இருக்க முடியாது. ஆனால் புத்தர், ஏசுநாதர், குருநபி ஆகியோர் பிறந்திருக்கா விடிலோ, இந்தியாவிலும் பாலஸ்தீனத்திலும், அரேபியாவிலும் மற்ற நாடுகளிலும், வாழ்க்கை சற்றும் மாறுதலின்றி நடந்திருக்கும். அலக்ஜாந்தர், ஜூலியஸ் ஸீஸர், கான்ஸ்டன்டைன், அக்பர், சிவாஜி போன்ற அரசியல் தலைவர்களும் மேதைகளும் இருந்தனர்.

இத் தலைவர்கள் தங்கள் தலைமையை நிலை நாட்டுவதற்குச் சாதகமான சூழ் நிலை இருந்தது என்பதும் முக்கியமான காரணம் தான். ஆனால் சூழ் நிலை எவ்

வளவு முக்கியமாக இருந்ததோ, அவ்வளவு முக்கியம் அந்தத் தனிப்பட்ட தலைவர்களும். அத் தலைவர்கள் தோன்றியிராவிடில், அதே சூழ் நிலை யிருந்தபோதிலும், சமூகம் வருடக்கணக்காக அதே போக்கில் தான் சென்று கொண்டிருக்கும். இப் புரட்சிக ளெல்லாம்—இவை புரட்சிகளென்பது பற்றி யாரும் சந்தேகப்பட முடியாது-சகிக்கமுடியாத பொருளாதார நிலை யிலிருந்தோ, மோசமான சூழ் நிலை யிலிருந்தோ எழுந்தவையல்ல. அவற்றிற்குக் காரணங்கள் பல: பல தரப்பட்டவையும் கூட; அதே போல் தலைவர்களும், அவர்களைச் சுற்றியிருந்த சூழ் நிலையும் பல தரப்பட்டவையா யிருந்தன.

இந்தியாவில் ஹரிஜனங்கள் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். சரித்திரம் தோன்றிய நாள் முதற்கொண்டே, மனித சமுதாயத்தில் பெரும் பகுதியினராகிய இவர்கள் வசித்து வந்துள்ள கேவல நிலைக்கு, ஒப்பான ஒரு நிலையை தற்காலத்திலும் சரி, பண்டைக் காலத்திலும் சரி, காணமுடியாது. அப்படியிருந்தும் புரட்சி எழுந்த பாடில்லை. இப்பொழுது நடந்து வரும் கிளர்ச்சிகூட அவர்களால் ஏற்பட்டதல்ல. அது மேல்வகுப்பினர் ஆரம்பித்துள்ள கிளர்ச்சியே. அமெரிக்காவில் நீக்ரோக்கள் விடுதலையும் இதே போன்றது தான். நீக்ரோக்களிடையும் தீண்டாதாரிடையும் இன்று என்ன உணர்ச்சியும் எழுச்சியும் இருக்கின்றதோ அதற்கு அவர்களே காரணமல்ல; அவர்கள் முன்னேற்றத்திற்காக வேலை செய்துவரும் மேல் வகுப்பினரே' காரணம்.

குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களோ, ஒருவித சூழ் நிலையோ ஏற்பட்டால் புரட்சி எழுவது நிச்சயம் என்ற விதி ஏற்படுத்த முடியாதென்பது, மேலே காட்டிய சரித்திர உண்மைகளிலிருந்து விளங்கும். அத்தகைய நிச்சயம் ஒன்றும் கிடையாது. புரட்சிக்குக் காரணங்கள்

என்று சரித்திர நிபுணர்கள் கூறும் காரணங்கள் எல்லாம் புரட்சி நடந்தபின் கூறப்படுபவையே. அப்பொழுதுகூட அக்காரணங்கள் பலவாகவும் பலதரப்பட்டனவாகவும் இருக்கின்றன; இக்காரணங்கள் காலத்தின் போக்கோடும், புரட்சியில் முக்கியப் பங்கெடுத்த தலைவர்களோடும் பிணைக்கப்பட்டவை. இவற்றிற்கெல்லாம் பொதுவாக சில விதிகளைக் கண்டு பிடித்துப் புரட்சி ஏற்படுவதற்கு இவைதான் இன்றியமையாத நிபந்தனைகள் என்று கூறுவது சாத்தியமில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் ஒப்பற்ற சம்பவங்களாகும். சில காரணங்கள் பொதுவாயிருந்தாலும், அவை மக்களின் மனோநிலையையும், கொள்கை உறுதியையும் பொறுத்த காரணமாயிருக்குமேயொழிய, வெளி சூழ்நிலையிலுள்ள காரணங்களாக இருக்கமாட்டா.

இத்தகைய பொதுவான காரணங்களில் ஒன்று, மக்கள் என்ன நிலைமை இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனரோ அதற்கும் உண்மையில் உள்ள நிலைமைக்கும் உள்ள வித்தியாசம் சூழ்நிலையும் பொருளாதார நிலைமையும் சகிக்க முடியாதபடி மோசமாயிருக்க வேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. அக்காலத்தில் வாழும் மக்களுக்குத் தங்கள் அபிலாஷைகளுக்கும், பிரத்யக்ஷ நிலைமைக்கும் வேறுபாடும் முரண்பாடும் இருப்பதாகத் தோன்றினல் போதும்.

இந்த வேறுபாடு மிகப் பெரிதாக இருந்தால் புரட்சி ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம். கீழ் நாட்டிலும் சரி, மேல் நாட்டிலும் சரி, நடந்த பல மத அரசியல் புரட்சிகள் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன. மகத்தான மாறுதல்கள் ஏற்படுவதற்கு முன்னர் எப்பொழுதும் மக்களிடை மிகுந்த மன அதிருப்தியும் பரபரப்பும் ஏற்படும். பொருளாதார காரணங்களுக்குப் முக்கியத்

துவம் தரப்பட்டுள்ள சமீப காலத்திய போக்கு. ஐரோப்பியத் தொழிலாளரின் இன்றைய நிலைமை, ஒரு நூற்றுண்டுக்கு முன்னிருந்த அவர்கள் முன்னேர்களின் நிலைமையை விட எவ்வளவோ உயர்ந்தது. ஆயினும் அந்த மோசமான நிலைமையையும் அவர்களின் முன்னேர்கள் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தனர். ஏனென்றுல், அந் நிலைமைதான் தமக்கு விதிக்கப்பட்ட நிலைமை என்றும் அதை மாற்ற யாராலும் இயலாதென்றும் அவர்கள் நம்பினூர்கள். நியமிக்கப்பட்ட நியதியே நியாய மாகவும் நீதியாகவும் இருக்கும் என்றும் அவர்கள் நம்பினுர்கள்.

நியாயம், சமத்துவம், மனிதரின் அடிப்படை உரிமைகள், ஆகிய கொள்கைகள போதிக்கப் பட்டதனுல் எழுந்துள்ள உணர்வின் பயனுகவும், விஞ்ஞான அறிவு பெருகியுள்ள நன் பயனுகவும், அந்நிலைமை ஆண்டவனுல் விதிக்கபபட்டதல்ல வென்றும், அதை அனுபவித்தே தீர வேண்டுமென்ற அவசியமில்லை என்றும், அதை மாற்று வது அசாத்தியமல்ல வென்றும் மக்கள் உணர்ந்து வருகின்றனர். அந் நிலைமைக்குச் சற்றும் நியாயமில்லை என்பதை அவர்கள் கண்டு விட்டனர். அந் நிலைமையைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கும் படி செய்த கொள்கைகளும் விசுவாச உணர்ச்சிகளும் பிணைப்புகளும் இன்று முறிந்துவிட்டன.

இன்று முதலாளிக்கும் தொழிலாளிக்கு மிடையே யுள்ள தொடர்பு வர்த்தகத் துறையில் மட்டும் தான், இருவரும் பேரம் பேசி முடிவு செய்து கொள்ளப்பட்டது. பெரிய தொழிற்சாலைகளிலோ முதலாளிக்கும் தொழி லாளிக்கும் தொடர்பே இல்லாமல் போய்விட்டது. சூழ்நிலையையும் பொருளாதார நிலையையும் பொறுத்த வரை இன்றுள்ள நிலை, முன்பிருந்த நிலையைவிட

மோசமானதல்ல. ஆனால் சற்று அபிவிருத்தி அடைந்துள்ள இந்த நிலைமையையும் மக்கள் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கத் தயாராகவில்லை. நிலைமை மோசமாகவில்லை; ஆனால் மக்கள் கொள்கைகளும் மதிப்புகளும் வாழ்க்கை நோக்கும் மாறிவிட்டன. நீதி, அநீதி, நியாயம், அநியாயம், உரிமை, கடமை, ஆகியவைகளைப் பற்றி அவர்களுக்கிருந்த கொள்கைகளில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு விட்டது. மக்களுடைய அபிலாஷைகளுக்கும் பிரத்யக்ஷ நிலைமைக்கும் வேறுபாடு ஏற்படும் போது, சமுதாயத்தில் நெருக்கடியும் மாறுதலும் ஏற்படுகின்றன. சமுதாய நியதியும் வாழ்க்கை முறையும் அடிப்படையிலேயே அசைந்து கொடுக்கின்றன. சமுதாயத்தை மீண்டும் ஒரு நிலைக்குக் கொண்டுவர, புரட்சி ஏற்படலாம்.

இப்பொழுதிருக்கும் நிலைமையை விட உயர்ந்த நிலைமை ஏற்படுவது சாத்தியம் என்று மக்கள் மனத்தில் ஒரு நம்பிக்கை பிறப்பது, புரட்சிக்கு மற்றொரு காரணம். இந்த நம்பிக்கை மனித சமுதாயமே எழுச்சி யுறும்படி போர் முரசு கொட்டுகிறது. ''மோக்ஷலோகம் நெருங்கி விட்டது. நீங்கள் ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்'' என்று ஒரு தீர்க்க தரிசி அழைத்தது போன்றது, இந்த நம்பிக்கையின் அழைப்பு. இந்த நம்பிக்கையை, தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்த்தால், இதற்கு அடிப்படையாகக் காரண, காரியவிதி அவ்வளவாக இருக்காது. இந்த நம்பிக்கை, பக்தியில் வேரூன்றியது. முன்னேறிக் கொண்டே வரும் மனித சமுதாயத்தின் ஒரு பகுதியினரை ஆட்கொள்ளும் உணர்வு, உற்சாகம், ஆர்வம் ஆகியவற்றின் விளைவே அது.

ஒரு தலைவரின் சக்தி இந்த எழுச்சிக்குக் காரணமாயிருக்கலாம். அல்லது பொருள் செறிந்த நம்பிக்கை

யூட்டும் ஒரு கோஷம் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஒரு முக்கிய நிகழ்ச்சி, அல்லது சம்பவமும் காரணமாக இருக்கலாம். தலைவரை, மிகவும் பார பக்ஷமற்ற முறையிலும் நுணுக்கமாகவும் ஆராய்ந்து பார்த்தால், அவர், பித்துப் பிடித்தவராகவோ, கோமாளியாகவோ, வெறியராகவோ, அகங்காரம் படைத்தவராகவோ, கெட்ட நோக்கம் கொண்டவராகக் கூடவோ இருக்கலாம். கோஷத்தை ஆராய்ந்து பார்த்தால், பாதி உண்மையாகவும் பாதி புரட்சியாகவும், மக்களை ஏய்க்கக் கூடியதாகவும் அவர்களைக் கவர்ந்து, அடிக்கடி உச்சரிக்கப்படும் காரணம் பற்றி அவர்களுக்கு ஒரு போதை ஊட்டுவதாகவும் கூட இருக்கலாம். 'மனிதனின் பிறப்புரிமைகள் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' போன்றவை இத்தகைய கோஷங்கள்.

சம்பவத்தை ஆராய்ந்து பார்த்தாலோ, அதற்கு அந்த தேசத்தையும் காலத்தையும் கடந்து ஒருவித முக்கியத்துவமும் இல்லாமலிருக்கலாம். ஆயினும் மனிதன் மனத்தில் நம்பிக்கை பிறக்கிறது. எப்படிப் பிறக்கிறது என்பதை, மனோ தத்துவ நிபுணர்கூட ஆராய முடியாமலிருக்கலாம். மனித சமுதாயம் உயர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கும் போதே இந்த நம்பிக்கையும் பிறக்கக் கூடும். பொதுவாக, நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுவதுடன்; நம்பிக்கையும் உயர்கிறது.

இன்று தொழிலாளருக்குள்ள நம்பிக்கை இத்தகையதே. 19-ம் நூற்றுண்டில் தருமசிந்தை கொண்டிருந்த தத்துவ அறிஞர்களும், மகான்களும், நீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளைப் போதித்ததன் பயனுகச் சாதிக்கப்பட்டுள்ளவையும், தொழிற் சங்கங்கள், தங்கள் முயற்சி, போராட்டம், தியாகம், ஆகியவற்ருல் சாதித்துள்ளவையும் இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாயுள்ளன. நிலைமை

உயர உயர, நம்பிக்கையும் உயர்கிறது. தளர்வு, சோர்வு, கதி கலங்கிய நிலை, ஆகியவற்றிலிருந்து பிறப்பதல்ல இந்த நம்பிக்கை. ஒரு இலட்சியக் கனவை, ஒரு ஆதர்ச உலகைக் கண்டதால் ஏற்படும் எக்களிப்பு. வலிமை, ஆகியவற்றிலிருந்து பிறப்பது இந்த நம்பிக்கை. இப்பொழுதுள்ள நிலைமை மிகவும் மோசமென்பதால் எழுவதல்ல இந்த நம்பிக்கை. வானவில் போன்ற வருங்காலம் தோன்றிப் பிரகாசித்து, மக்களை ஆகர்ஷிப்பதால் எழுவது இந்த நம்பிக்கை.

அரசியல், மத, அல்லது சமூக புரட்சிகளில் மற்றொரு முக்கிய அம்சமும் காணப்படுகிறது. அது தான், ஒரு தலைவரிடமிருந்து பிறக்கும் தத்துவம், புது எண்ணம், புது மார்க்கம், புது நம்பிக்கை. அந்தத் தத்துவத்தை, மனிதர் முயற்சியில் சாத்தியமான அளவிற்கு, அத் தலைவர் தமது வாழ்க்கையிலேயே வாழ்ந்து காட்டுகிறார். அத் தத்துவத்திற்காகவே அவர் உயிர் வாழ்கிறார். அவர் இலட்சியம், அவர் வாழ்க்கை, நடத்தை, அனைத்தையும் நிர்ணயிப்பது அந்த உயிர்த் தத்துவமே. அவ் வேலையிலேயே அவர் ஆழ்ந்து விடுகிறார். அதிலேயே, அவர் ஒரு வெறிபிடித்தவர் போலாகி விடுகிறார். எந்த இன்னலையும் இடையூறையும் அவர் பொருட்படுத்துவதில்லை; எந்தத் தியாகத்திற்கும் அவர் தயங்குவதில்லை. மரணத்தைக் கண்டும் அவர் மலைப்பதில்லை. அந்த இலட்சியத்தைத் தவிர்த்து அவருக்கு வாழ்க்கையுமில்லை, அதுவே அனைத்தும்.

அத்தகைய இதய எழுச்சி கொண்ட மனிதர் எதற்கும் துணிந்தவர். பிறரை ஆகர்ஷிக்கும் சக்தியும் அவரிடம் அமைந்திருக்கிறது. அனைவரையும் வசியப்படுத்தித் தம்முடன் அழைத்துச்செல்கின்றார். அவர் சொல்வது நியாயமா, உண்மையா என்பதைப் பற்றி அக்கறை இல்லை.

அவர் சக்தியால் கட்டுண்டு அவரைப் பின் பற்றுகின்றார்கள். தம்மிடத்தும், பிறரிடத்தும், அவர் ஒரு ஆர்வத் துடிப்பை உண்டாக்குகிறார். அது ஒரு வெறிபோல் பரவிப் பற்றிக் கொள்கிறது அந்த சமயத்தில் அவரே உன்னதத் தலைவர்; அவர் சக்திக்கு மேம்பட்டது வேறெதுவும் கிடையாது. அவர் எந்த எண்ணத்தை எழுப்பினாரோ, அது வெற்றி பெற்றுக் கைகூடி விட்ட பின்னரும், அவர் வாழ்ந்தால் அவருக்கு முன்பிருந்த சக்தி மட்டுமல்ல, மதிப்பும் மறைந்து விடுவதைக் காணலாம். மிருக உலகில் அவருக்கு முன்பிருந்த ஸ்தானத்தையே அவர் மீண்டும் அடைகிறார். அவரிடமிருந்த நற்குணமும் மேன்மையும் மறைந்து விடுகின்றன. அவர் முன்பு செய்த அதிசயச் செயல்களை இனியும் செய்வது சாத்தியமில்லாது போகிறது. அவர் வேலை முடிந்த பின், அவரும் மறைந்து விடுகிறார்.

ஆனால் வேலை முடிவதற்கு முன்போ, அவர் ஒரு மந்திர சக்தி படைத்த அதிசயப்பிறவி போலுள்ளார். அந்நேரத்தில் கத்தியும் குண்டும் அவரைக் காயப்படுத்த முடியாது. எதிரிகளின் சூழ்ச்சி யெதுவும் அவரிடம் பலிப்பதில்லை. அவரை ஏதோ ஒரு அபூர்வசக்தி காத்து வருவது போலிருக்கிறது. அவரே தமது உயர்ந்த ஸ்தானத்திலிருந்து விலக முயற்சித்தாலும், அது சாத்தியமில்லாது போகிறது. மாற்ற முடியாத, மறுக்க முடியாத, ஒரு விதி அவரை அழைத்துச் செல்கிறது. அவர் பணிமுடியும்வரை, அவருக்கும், அவர் எதிரிகளுக்கும் சரி, சகாக்களுக்கும் சரி, ஓய்வோ நிம்மதியோ தருவதில்லை. முதலில் அவர் பணி பூர்த்தியாக வேண்டும். புரட்சிகளை உண்டாக்கும் வீரர்கள் இத்தகையவரே.

ஆகவே புரட்சி ஏற்படுவதற்குச் சில இன்றியமையாத நிபந்தனைகளோ, காரணங்களோ இருக்குமாயின்

அவை பிரதானமாய், மக்கள் மனோநிலையையும் கொள்கை களையும் பொறுத்த காரணங்களாக இருக்குமேயொழிய சூழ்நிலையையோ பொருளாதார நிலையையோ பொறுத் தனவாய் இருக்கா. சூழ் நிலையும் பொருளாதார நிலையும் புரட்சி ஏற்படுவதற்குப் புகைப் படலம் போன்றவையே யொழிய காரணமாகா. பொருளாதார நிலையே புரட் சிக்குப் பிரதான காரணம், என்று அதன் முக்கியத் துவத்தை மிகைப்படுத்தியது மார்க்ஸீய சித்தாந்தம். புரட்சியென்ற பதத்தில் பொருளாதாரம் மட்டும் அடங் கியதாகாது; அதில் பொருளாதாரம் பிரதானம் என்று கூடச் சொல்வதற்கில்லை. புரட்சிக்கு, மக்கள் மனோ நிலையும் கொள்கைப் பக்குவமும் முக்கிய மென்பதால் தான், கொள்கைகளைப் பரப்பி, அவற்றின் தத்துவத்தைப் போதித்து விளக்குவதன் அவசியத்தை, இன்றையப் புரட்சித் தலைவர்கள் வற்புறுத்துகின்றனர்.

புரட்சியின் பயனாகவும், அதனால் ஏற்பட்ட நிலைமை யையும் விளைவுகளையும் மாற்றவும் ஒரு எதிர்ப்புரட்சி ஏற்படக்கூடும். இந்த எதிர்ப் புரட்சியின்போது, கொள் கைக்கும் எண்ணங்களுக்கும் உள்ள அபாரசக்தி நன்கு புலப்படும். ஒரு பழைய வைதிக தத்துவத்தையும், கர்நா டகக் கொள்கையையுமே கொண்டு, அவற்றிற்கு ஒரு புது அர்த்தமும், வியாக்கியானமும் கொடுப்பது எதிர்ப் புரட்சித் தலைவர்களின் வேலை. புரட்சி ஏற்படும்போது எந்த சூழ் நிலையும், பொருளாதார நிலையுமிருந்தனவோ, அவை இருக்கும்போதே, எதிர்ப் புரட்சி ஏற்படுவது முண்டு. வேறுபட்ட கொள்கை, எண்ணம், தலைவர்கள், இவர்களால் தான் மாறுதல் ஏற்பட்டு விடுகிறது. ஆத லால்தான் ஒரு புரட்சி ஏற்பட்ட பின், புரட்சி சர்க்கார் முந்திய சர்க்காரை விட, பொதுஜன அபிப்பிராயம் மீதும் பிரஜா உரிமை மீதும் அதிகக் கடுமையான கட்டுப்

பாடும் கண் காணிப்பும் செலுத்துகின்றது தன் கொள்கையை எதிர்ப்போரையும் அதிலிருந்து வேறு படுவோரையும் புரட்சி சர்க்கார் கடுமையாகத் தண்டிக்கிறது. மதத் துரோகத்திற்கு மரண தண்டனை விதிப்பது தகுமென்பது போலவே இதுவும் மதிக்கப்படுகிறது.

எந்த வேறுபாட்டையும் அரசாங்கம் சகிக்கும்; ஆனால் கொள்கை வேறுபாட்டை அது சகிக்காது. புரட்சி ஏற்படுத்துவதில் தன்னுடன் ஒத்துழைத்த தோழர்களிடையே, அபிப்பிராய பேதமேற்பட்டு விட்டால் கூட, அரசாங்கம் கடுமையான தண்டனையையே விதிக்கும். தண்டனை கடுமையாக இருக்கும் என்பது மட்டுமல்ல, துரிதமாகவும் விதிக்கப்பட வேண்டும். ஏனெனில், தொத்து நோயைவிட மிகத் துரிதமாகப் பரவக்கூடியது ஒரு புது எண்ணம். வியாதிக் கிருமிகளை விட வேகமாகப் பரவிப் பெருகுகின்றன கொள்கைகள்; இவற்றின் விளைவுகளும் வியாதிகளைவிடக் கொடியன. புது எண்ணத்தின் பலனால், அதிகாரத்திற்கும் பதவிக்கும் வந்துள்ளவர்கள், முந்திய அரசாங்கத்தினரை வி... அதிகாரத்தின் வலிமையையும் அடக்குமுறை பலத்தையும் உணர்ந்து அவற்றை முன்னிலும் அதிகமாகப் பிரயோகிக்கின்றனர். புரட்சிக்கு முன்னிருந்த கொள்கைக்கோ அதிக பக்க பலம் தேவையில்லை. மக்கள் மனத்தில், இயற்கையாகவே, மாறுதல் மீது ஒரு வெறுப்பு உள்ளது. அந்த வெறுப்பும், சம்பிரதாயமும், சமூகத்தின் தேக்கமும் பழைய கொள்கைக்குப் பக்கபலமா யிருக்கின்றன. மேலும் அதனால் உயர் நிலைக்கு வந்து செல்வமும் செல்வாக்கும் பெற்றிருக்கும் வர்க்கத்தினரும் அதற்கு ஆதரவா யிருக்கின்றனர்.

புது கொள்கைக்கோ இந்த பக்க பலங்கள் கிடையா. சம்பிரதாயம், சமூகத்தேக்கம், அதிகார வர்க்கம், மனி

தருக்குச் சுபாவமாகவுள்ள பிற்போக்கு, இவற்றையெல் லாம் மீறி, வீழ்த்திய பின்னரே புரட்சி வெற்றி பெற் றது. இவற்றிற்குப் பதிலாகப் புதிய பக்க பலங்களைச் சிருஷ்டிக்கவும் அதற்குப் போதிய அவகாசமில்லை. ஆகவே அது அடக்குமுறை பலத்தைப் பிரயோகிக்கத் தொடங்குகிறது. அதிலும், சர்க்கார் துரிதமாக நட வடிக்கை எடுத்துக் கொள்ளாவிடில், புதுப்புரட்சி சர்க் கார் கவிழ்ந்து விடும். ஆப்கனிஸ்தானத்தில் அது தான் நடந்தது. அமனுல்லா சற்றுத் தயங்கினர். தம் சொந்த நாட்டுச் சோதரரின் ரத்தத்தைச் சிந்துவதற்கு அவர் துணியவில்லை. ஆனல் லெனின், கமால்பாஷா, முஸோ லினி, ஹிட்லர், ஸ்டாலின், ஆகியோர் அதில் சற்றும் தயங்காமல் கடுமையாக இருந்தனர்.

ஆனலும், வாதத்திற்காக, புரட்சிக்குப் பொருளா தார நிலையும் சூழ்நிலையுமே பிரதான காரணமென்று வைத்துக் கொள்வோம். அதை ஒத்துக்கொண்டால் கூட, புரட்சி எந்தச் சமயத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில், ஏற்படுமென்பதைப் பொருளாதாரம், அரசியல், சரித் திரம், இவற்றைப் பயின்றோரும் நிச்சயமாகக் கணித்துக் கூற முடியாது. புரட்சி எந்த நிமிஷத்திலும் திடீரென ஏற்படக் கூடும். நீண்டகாலம் அது வராமலும் இருக் கக் கூடும். அதற்குள் சமூகம் ஒரு புதிய நிலையை அமைத் துக் கொள்ளவும் கூடும்.

இந்த நிலைமையில், உடனடியாகவுள்ள இன்னல்களை அவ்வப்போதே தீர்க்க முயற்சிக்காமல், இறுதிப் புரட் சிக்குக் காத்திருப்பதென்பது மிகவும் குறுகிய திருஷ்டி கொண்ட செயலாகும். ஒரு ஊரின் பொதுவான சுகா தார உயர்விற்காகவே, தாம் திட்டம் வகுத்துக் கொண் டிருப்பதாகவும் அதனல், ஒரு தனிப்பட்ட நோயாளிக்கு உடனடியாகச் சிகிச்சை செய்யவேண்டிய அவசியமில்லை

யென்றும் காரணம் கூறி, ஒரு வைத்தியர் நோயாளிக்குச் சிகிச்சை செய்ய மறுத்தால் என்ன விபரீதம் ஏற்படுமோ, அது தான் இக் கொள்கையினாலும் ஏற்படும். வைத்தியரின் உண்மையான கடமை ஊரின் பொதுவான உயர்விற்குத் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கும் போதே, நோயாளிகளுக்கு உடனடியான சிகிச்சையும் செய்வதே யாகும். இல்லாவிடில் அவர் தமது கடமையிலிருந்து தவறியவராவர் வைத்தியர் தர்மத்துக்கே விரோதமாக நடந்து கொண்டவராவார். அவரது விபரீத நடத்தையால், வைத்தியத் துறை மட்டுமல்ல, பொது மக்களுமே பாதிக்கப் படுவார்கள்.

அது போலவே, நம்மைச் சுற்றிலும் உள்ள இன்னலையும் வறுமையையும் அசட்டை செய்வது, பொது மக்களிடமும் சீர்திருத்த வாதிகளிடையும் உள்ள உன்னத உணர்ச்சிகளையும் மனிதத் தன்மையையும் மழுக்கி விடும். அத்தகைய இழி நிலைக்கு மக்கள் பழக்கமாகி விடுவார்கள்; அந்த நிலையை நீக்குவது பற்றி அவர்களுக்கு உதிக்கவே செய்யாது. இந்தகைய கொள்கை முடிவில் மனிதர்களைக் கருவிகளாகவும் இயந்திரங்களாகவும் ஆக்கிவிடும். ஒரு கொள்கை வெற்றி பெறுவதென்றால், அதற்காக எத்தனை உயிர்கள் பலியாயினும் கவலையில்லை என்ற நிலை ஏற்பட்டு விடும் அறிவுக் கூர்மை வாய்ந்தவர்கள் வகுக்கும் திட்டங்களுக்குப் பொதுமக்கள் பலியாக வேண்டும்; அந்தச் சூத்திரதாரிகளின் கையில் வெறும் பொம்மைகளாகவே மக்கள் ஆகி விடுவார்கள், அந்தத் திட்டம் வகுக்கும் மேதைகளோ சரியாக வுமிருக்கலாம், தவறுகளும் செய்யலாம். ஆகவே இத்தகைய நிலைமையில் மனிதனுக்கு மனித னென்ற மதிப்பே இல்லாமல் போகும். இத்தகைய அபாயகரமான எண்ணங்களால் தான், கொலைகளும். பயங்கர ஆட்சிகளும், சூழ்ச்சி

களும் நேர்ந்துள்ளன. இப்பொழுதும் இந்த எண்ணங்களுக்குப் பலியாகின்றவர் எண்ணற்றவர். மிருகத்தனமான அடக்குமுறையின் ஆயுதங்கள் இப்பொழுது முன்னிலும் கடுமையாக வுள்ளன. இவ்வாறாக மனித உயிருக்கிருந்த மதிப்பு பறிக்கப்பட்டு விட்டது.

"கொடுங்கோல் மன்னர், யதேச்சாதிகாரிகள், ஆக்ரமிப்புக்காரர்கள், வெறியர், ஆகியோரும் தங்கள் சுயநலப் பேராசைக்காக, மக்களைக் கைப்பாவையாகத் தானே பயன்படுத்துகின்றனர்; அப்படியானால் நல்ல காரியங்களைச் சாதிக்க அவர்களை நாமேன் கருவிகளாக உபயோகிக்கக் கூடாது? என்று சீர்திருத்த வாதி வாதம் செய்தால் அது வீண் குதர்க்கமாகும். மேலே சொன்ன கயவர்கள் மக்களைக் கருவிகளாக வெளிப்படையாக உபயோகிக்கின்றனர். அவர்கள் உதாரணத்தை சீர்திருத்த வாதி பின்பற்ற முடியாது. சீர்திருத்த வாதி, உத்தம நோக்கங்களுடன், உன்னத இலட்சியத்திற்காக, உழைக்கின்றவர். நீதி, கருணை, மனிதத் தன்மை, உயிருக்குள்ள மதிப்பு, ஆகியவற்றை அவர் எப்பொழுதும் மக்கள் முன் ஆதர்சமாக வைத்திருக்க வேண்டும். அவர் மற்றவர்களை விட, உயர்ந்த, சிறந்த வழியைப் பின்பற்றிப் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும்.

புரட்சிக்குப் பொருளாதார நிலையும் சூழ் நிலையுமே காரணம் என்பதைக் கொண்டு இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். மோசமான நிலைமை அப்படியே இருக்கவும் இன்னும் சீர்கெடவும் இடம் கொடுக்க வேண்டும். இச் சீர்குலைவைக் கண்டு நாம் சந்தோஷப்படவேண்டும். இக் கஷடங்களை நீக்க நாம் ஒரு சிறு முயற்சி எடுத்துக் கொண்டாலும் அந்த அளவிற்குப் புரட்சிக்காகத் திரண்டுவரும் சக்தியை மழுங்கும்படி செயதவராவோம். ஆகவே, நாம் புரட்சியில் உண்மையான ஆர்வம் கொண்

டிருந்தால் எல்லாக் கெடுதல்களையும் விபத்துக்களையும் விரும்பி வரவேற்க வேண்டும். அதுமட்டுமல்ல; நிலைமையை மோசமாக்கவும் அதன்மூலம் அதிருப்தியையும் மனக் கசப்பையும் வளர்க்கவும் நாமே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மக்கள் கஷ்டங்களை அதிகமாக்கிப் புரட்சிக்கு ஆயத்தம் செய்வதற்காகக் காலித்தனம் செய்ய வேண்டும். இந்தக் காலித்தனத்தை உண்மையில் நாமே மூட்டிவிட்டு, அதன் பழிமட்டும் அதிகார வர்க்கத்தினர் மீது சாரும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்த வர்க்கத்தின் மீதும் அரசாங்கத்தின் மீதும் மக்களுக்கு மனக்கசப்பு அதிகரிக்கும். முடிவில் அந்த ஆட்சியை வேரோடு களைய, புரட்சி எழும். அதிகாரிகள் மீது கோபத்தை வளர்க்க, தந்திரமாகப் பொய்ப் பிரசாரம் செய்து அவதூறு பரப்பலாம். அதன் மூலம் புரட்சிக்கு மேலும் வசதி செய்தவர்களாவோம். நல்ல காரியத்தைச் சாதிப்பதற்காக எந்தக் கெட்ட சாதனத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாமென்ற குதர்க்கம் நிலைநாட்டப்படும்.

இன்று அரசியல் துறையிலும் பொது வாழ்விலும் இந்தக் குதர்க்கமும் கொடுமையும் தான் நடந்து வருகின்றன. இவ்வளவும் செய்வது நியாயம்தான் என்ற சித்தாந்தத்தை அவர்கள் வெளிப்படையாக ஆதரிக்கவில்லையே யொழிய, நடத்தை இதை அனுசரித்தது தான். பண்டை நாட்களிலோ, பொது வாழ்வையும் மனிதர் நடத்தையையும் நிர்ணயிப்பதற்குச் சில அடிப்படையான நீதிகளிருந்தன. எத்தகைய கொடுங்கோல் மன்னனும், சீர்திருத்த வாதியும் அந்த நீதிக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். நல்ல காரியத்திற்குக்கூடக் கெட்ட சாதனங்களைக் கடைப்பிடிக்கக் கூடாதென்ற, ஒரு சமூக மனச்சாட்சி சம்பிரதாயத்தால் பிறந்திருந்தது. நெருக்கடியான

சமயங்களில், நிலைமையின் நிர்ப்பந்தத்தினால் இந்த மனச் சாட்சி மீறப்பட்டதுண்டு. ஆனாலும் அது தற்காலிக மாகவே யிருந்தது. ஒழுக்கம், சம்பிரதாயம், மதம், என் மூட பழக்க வழக்கங்களிலும் ஆசாரங்களிலும் கூட இந்த அடிப்படை நீதிக்கு அஸ்திவாரம் இடப்பட் டிருந்தது.

ஆனால் இன்றோ மக்களின் ஒழுக்கமே சந்தேகப்படும் படியா யிருக்கிறது; மதமோ, காலத்துக்கு ஒவ்வாத கர்நாடகக் கட்டுப்பாடு என்று மதிக்கப்படுகிறது. மூட நம்பிக்கைகள் மறைந்து விஞ்ஞான அறிவு பெருகு கின்றது. பழக்க வழக்கங்களோ, சதா மாறிக்கொண்டே யிருக்கின்றன. இக் காலத்தில் இத்தகைய அபாயகர மான எண்ணங்களும் மனிதரிடை சீர் குலைவு ஏற்படுத் தும் போக்குகளும் பரவினால் மனித சமுதாயத்தில் எதற்குமே மதிப்பில்லாத ஒரு நிலை ஏற்பட்டு விடும், எது வெற்றி பெறுகிறதோ, அதுவே நீதி; வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற நிலையேற்பட்டுவிடும். இத்தகைய நிலைக்குரிய சின்னங்கள் ஏற்கெனவே புலப்பட்டு வருகின் றன. (இத்தகைய நிலையை ஆதரிக்கும் ரஷ்ய சித்தாந்தத் திற்கு 'நிஹிலிஸம்' என்று பெயர்.) போட்டி, பேராசை, பகைமை ஆகியவற்றால் மனித சமுதாயம் எவ்வளவு சீர் குலைய முடியும் என்பதற்கு உலக யுத்தமே போதிய அத்தாட்சி. அத்தனை கொடுமைகளும் வெற்றியின் பெயரால் நடந்தன. ஆதலால் தான், இலட்சியமும் சாதனமும் ஒன்றோடொன்று இணைபிரியாது பிணைக்கப் பட்டவை யென்று காந்திஜி கூறுகின்றார்.

நெருக்கடியான சமயங்களில், அனைத்தையும் தர்மம் என்ற தராசில் வைத்து நிறுத்துப் பார்த்து, நிதானித்து நடக்க மக்களுக்கு அவகாசமில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியதுதான். சிந்தனைக்கு நேரமில்லாமல்,

நாம் செயலில் இறங்கி விடுவோம். மனிதனுடைய முக்கியத் தொழில் செயல். செயலுக்கு அடிகோலுவதே சிந்தனை. ஆகவே, செயலெனும் வெறியில் மனித சமுதாயம் சிக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் போதே சிந்தனை செய்யவும் நாம் முயலவேண்டும். நெருக்கடியான நேரங்களில், சற்று முன்னும் பின்னுமாகக் கணக்குப் போட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது தான்.

இன்றோ, வருங்காலத்திலோ, சமுதாயத்தின் வாழ்வைக் காப்பதற்காக, ஒரு சில உயிர்களைப் பலியிடுவது அவசியம் தான். ஆயிரக்கணக்கான மக்கள் பின் தொடர ஆயிரக் கணக்கான மைல்கள் முன்னேறிச் செல்லும் மகாத்மா தம்முடன் வருவோரில் ஒரு சிலர் தள்ளாடுவதையும் ஒரு சிலர் நொண்டுவதையும் கவனிக்க முடியாது தான். அவர்களைக் கவனிப்பதற்காக அவர் தயங்கினுல். அனைவருக்கும் கேடுவிளையும். புரட்சியின் மிக நெருக்கடியான கட்டத்தைச் சமாளித்துக் கொண்டிருக்கும் லெனின், அடிப்படையான புரட்சிப் பிரச்னையில் ஈடுபட்டிருக்கும் தம் மனம், பஞ்சப் பிரச்னையால் கலையவோ, நிலைகுலையவோ இடம் கொடுக்க முடியாது.

ஆனுல் வாழ்வதா, வீழ்வதா என்ற போராட்டம் நடக்கும் நேரங்களுக்குத் தான் இது பொருந்தும், இதையே ஒரு பொதுவான விதியாக்கி, சாதாரணமான காலத்திலும் இதன்படியே நடந்தால், நாசம் நேரிடுவது நிச்சயம். நெருக்கடி மிகக் கடுமையாக இருக்கலாம்; எல்லாம் நிலையற்றிருக்கலாம்; ஆயினும் ஒரு புரட்சியின் நடுவே மக்கள் இருந்தாலொழிய, இதுபோல் சூழ்நிலையிலுள்ள கஷ்டங்களையும் கொடுமைகளையும் அசட்டை செய்வதென்பதும், வறுமை, பிணி, மரணம் முதலியவற்றைக் கண்டும் கலங்காமலிருப்பதும் இயற்கைக்கும் நீதிக்கும் விரோதம். புரட்சியின் நெருக்கடி

யான கட்டமொன்றில் இருந்தால், ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டால், அனைத்தும் தோல்வியுறும் என்ற அபாய மிருக்கும்போது, மக்கள் சூழ் நிலையைக் கண்டு மலைக்காமல், மனம் கலையாமல், போராட்டத்திலேயே ஈடுபட்டிருப்பது நியாயம் தான். மற்ற நேரங்களில், அது நியாயமாகாது. நோய் வரும்போது சாப்பிட வேண்டிய மருந்தை, சாதாரண காலத்திலும் உணவாக உபயோகிப்ப தென்பது முடியாது.

மேலும், புரட்சி எப்பொழுது நேரிடுமென்றோ யாராலும் கணித்துக் கூற முடியாது. மறு கணமே எழலாம்; இல்லையேல், அரை நூற்றாண்டு ஆகியும் வராமலிருக்கலாம். புரட்சி ஏற்படும் வரை, சிறு பிரச்னைகளையும் சூழ் நிலையிலுள்ள இன்னல்களையும் தீர்ப்பதில் சக்தியை விரயம் செய்யக்கூடாது என்று வாதாடுவது மக்களின் உண்மையான ஊழியனுக்கு அழகல்ல. ஒரு தலைவர், தம் தலைமுறை யினருடைய வாழ்க்கையுடன் விளையாட முடியாது. மிகவும், நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் அவர் நடந்து கொள்வது அவசியம். புரட்சிக்கு ஆயுத்தம் செய்வது அதனால் தடைப்படும் என்றாலும் கூட, மக்களின் அன்றாட இன்னல்களைத் தீர்க்க, உடனடியாக, நிவாரண நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது அவர் கடமையாகும் பீஹாரில் பூகம்பம் நேர்ந்தபோது அங்கு, சட்டமறுப்பு இயக்கம் உடனே நிறுத்திவைக்கப் பட்டது. இயக்கத்தின் எதிரிகளாகிய, சர்க்கார் கூட உடனே எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்தனர். சர்க்காரே, அவ்வளவு செய்த தென்றால், தேச பக்தர்கள் கடமை இன்னும் அதிகமா யிருக்குமல்லவா?

ஆகவே சீர்திருத்த வாதிகளும் நல்ல வைத்தியர்களைப் போல், ஏக காலத்தில் இரண்டு கடமைகளைச் செய்ய வேண்டும். வர விருக்கும் புரட்சிக்காக மக்களை ஆயத்

தம் செய்யும் போதே. உடனடியான பிரச்னைகளையும் அவ்வப்போது தீர்த்துவர வேண்டும். இப் பிரச்னைகளைத் தீர்ப்பதே, புரட்சிக்கு ஒரு சிறந்த பயிற்சியாகும். மேலும், இவற்றைத் தீர்ப்பதால் தலைவர்களுக்கு மக்களிடை செல்வாக்கு ஏற்படும். ஒரு இயக்கத்திலுள்ள தொண்டர்களை, இரு பிரிவினராகவும் பிரிக்கலாம். அன்றாடப் பிரச்னைகளையும் உடனடியான குறைகளையும் கவனிப்போர் ஒரு பிரிவினர்; புரட்சிக்கு, சூழ்நிலையை ஆயத்தம் செய்வோர் இரண்டாவது பிரிவினர். புரட்சி ஏற்பட்ட பின், போராட்டத்தில் எவருடைய சேவை அதிகம் என்று நிதானித்துத் தீர்ப்பு கூற, சரித்திர அறிஞர்கள் ஆராயும்போது, உடனடியான குறைகளைக் கவனித்தோரின் சேவை பெரிது என்பதைக் காணவும் கூடும். திரை மறைவில் நின்று, சிறு பணிகள் செய்து வந்த ஊழியர்களுக்கே, பெரும் கௌரவமும் பெருமையும் கிட்டவும் கூடும்.

பர்டோலி சங்கங்கள், விவசாயி, கிராமவாசிஸ்தாபனங்களை, தொழிற்சங்கங்கள், தேசியக்கல்வி இயக்கம்; தீண்டாமை இயக்கம், கதர், மதுவிலக்குப் போன்ற நிர்மாணத்திட்ட வேலைகள், அனைத்தும் உடனடியான குறையைத் தீர்க்க முயற்சிப்பவை. உண்மை அதிகாரம் கைப்பற்றப்பட்ட பின்பு தான், இத் துறைகளில் ஸ்திரமான, நிரந்தரமான வேலை செய்யமுடியும். சீர்திருத்தவாதி, நம்பிக்கையுடன் வேலை செய்யவேண்டும். கால அட்டவணையில் குறிப்பிட்ட ஒரு நேரப்படி. புரட்சி ஏற்படுத்திவிடுவதென்பது சாத்தியமில்லை. புரட்சி தன் வருகையையும் வேகத்தையும் தானே தீர்மானித்துக் கொள்ளும். அதற்கிடையில், இலட்சியத்தை மறவாமல், உறுதி குலையாமல் உடனடியாக இருக்க வேண்டிய வேலையில் சீர்திருத்தவாதி தம் சக்தியைச் செலுத்த வேண்டும். அன்

ரூட உழைப்பில், புழுதிபடிந்துள்ள ஊழியர், இறுதி இலட்சியத்தை மறந்து விட்டதாக, மேல்வாரியாகப் பார்ப்போருக்குத் தோன்றலாம்.

1923 லிருந்து 29 வரை, காந்திஜியைப் பற்றியும் அவ்வாறு தான் நினைத்தார்கள். இறுதி இலட்சியத்தை அவர் மறந்து விட்டதாகவே பலர் கருதினர், வெளிப் படையாகவும் குறை கூறினர். ஆனால் உண்மையில், அப் பொழுது நடந்த வேலை மறு புரட்சிக்கு ஆயத்தம் செய்த வேலையே யாகும். 1930 ல் அந்த உண்மை தெளிவாகி றது. விடா முயற்சியுடனும், படாடோபமின்றியும், புரட்சிக்கு ஆயத்தம் செய்வதற்கான வேலைகளைச் செய் யாவிடில், புரட்சிக்குரிய தருணம் வரும்போது, பக்குவ மான நிலைமை யில்லாமலும் பொதுஜன ஆதரவில்லா மலும் போய்விடக் கூடும். ஆகவே தான் உறுதி குலை யாத, நம்பிக்கை யிழக்காத, உண்மை ஊழியரென்ற முறையில், படிப்படியாகச் செல்வதே எனக்குப் போதும்; ஓரடி எடுத்து வைப்பினும் நன்றே" என்று காந்திஜி கூறுகின்றார்.

தொழிற் சங்கங்களின் வேலையை எந்த உண்மைச் சமதர்ம வாதியும் கண்டித்ததோ குறை கூறியதோ கிடை யாது. தொழிற் சங்கம் சீர்திருத்த வேலை செய்கிறது, உடனடியான பிரச்னைகளைக் கவனிக்கிறது. சில சமயங் களில் ரூபாய், அணா, பைசா, கணக்குப் போட்டு வேலை செய்கிறது. ஆயினும் தொழிற்சங்க இயக்கத்தின் அவ சியத்தை யாரும் சந்தேகிக்க முடியாது. ஒரு இயக்கம் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாதன வாயுள்ள ஆத்மீக ஐக்கியம், ஒற்றுமை, ஸ்தாபனக் கட்டுப்பாடு வர்க்க அபிமானம், ஒத்துழைப்பு, தலைமைக்குக் கட்டுப் பட்டு நடக்கும் தன்மை, சுயநலமோ, பேராசையோ, அருவருப்போ, இல்லாமல் உழைப்பது, ஆகிய குணங்கள்

பிறக்கவும் பண்படவும் தொழிற்சங்க இயக்கம் அவசியம். இத்தகைய நிர்மாண வேலைகள் நடக்காவிடில் பாமர மக்களும், சாதாரணத் தொழிலாளரும் என்ன செய்யமுடியும்? கொள்கைகளை பரப்பிக் கொண்டும் கோஷங்களைப் பாராயணம் செய்து கொண்டும் இருப்பதால் மட்டும் பலனென்ன? பொறுமையுடன் உழைக்கவும், அன்றாட நிர்வாகத்தை நடத்திக் கொள்ளவும் அவர்கள் பழக வேண்டும்.

மேலும் இன்று நாட்டிலுள்ள வறுமை, பிணி, அறியாமை, இழிவு, ஆகியவைவையே ஒரு புரட்சியை மட்டுமல்ல, பத்துப் புரட்சிகளை எழுப்பப் போதுமானவை என்பதை எந்தப் புரட்சி வாதியும் மறுக்க முடியுமா? இவ்வளவு மோசமாக உள்ள நிலைமைக்கு சற்று நிவாரணம் தேடுவதால் புரட்சி சக்தி மழுங்கிவிடாது. சீர்திருத்தவாதி எவ்வளவு முயற்சிகள் செய்தாலும் அதற்குப் பின்னும் எஞ்சியிருக்கும் அநீதியும், ஏற்றத் தாழ்மையுமே புரட்சியை எழுப்புவதற்குப் போதுமானவை. ஆகவே, புரட்சிக்குப் பொருளாதார நிலையும் சூழ் நிலையும் காரணமென்றாலும் நிர்மாணத் திட்டத்தால் சற்று நிவாரணம் தேடுவதால், அக் காரணங்களின் சக்தி குறைந்தோ, மறைந்தோ விடாது. நிர்மாணத் திட்டத்தைப் பொறுத்தவரை, அது ஏற்றத் தாழ்வு, வறுமை யெனும் பிரச்னைகளின் எல்லையைக் கூடத் தொட்டுப் பார்ப்பதில்லை என்று நமது சமதர்ம வாதிகளே கூறுகின்றனர். அவ்வாறாயின், அத் திட்டத்தைப் பின்பற்றி நாம் ஒரு சிறிது உதவி செய்வதின் மூலம், புரட்சி சக்தியை மழுக்கிக் கணக்குத் தீர்க்கும் தினத்தை ஒத்திவைப்பவராவோம் என்ற பயம் யாருக்கும் வேண்டியதில்லையே.

நிர்மாணத் திட்டத்தின் மூலம் ஒரு சில செப்புக் காசுகளாவது விவசாயிக்குக் கிடைக்கும்படி செய்ய

விரும்பும் நாங்கள், புரட்சியெனும் மந்திர சக்தியால் அச் செப்புக் காசுகள் பொன் காசுகளாக மாறுவதைக் கண்டால் சந்தோஷப்பட மாட்டோமா? ஏழைகளுக்கு உயர்ந்த கூலியும் நல்ல நிலைமையும் வசதியான வாழ்க்கையும் கிடைக்கக் கூடாதென்று நாம் கரிப்போமா? விவசாயி, தனது ஓய்வு நேரத்தில் சம்பாதிக்கும் ஒரு சில செப்புக் காசுகளே அவனுக்குப் போதும் என்று கூறுபவனுக்கு தேச பக்தியோ, மனிதத் தன்மையோ இல்லை என்றே கூறவேண்டும். நமது ஆசையும் ஆர்வமும் அவ்வளவு குறைவாகவா இருக்கும்? நம் நாட்டுப் பாமர மக்கள், உடலிலும், ஒழுக்கத்திலும் அறிவிலும் உயர்ந்து மிக உன்னத நிலைமை அடைய வேண்டுமென்பதே நம் அவா. அதைவிடக் குறைந்தது எதுவும் காந்திஜி போன்ற மகானின் விருப்பமாயிருக்க முடியுமா? ஆனாலும் அவரும் அவர் சகாக்களும் இலட்சிய வாதிகள் மட்டுமல்ல; பிரத்யக்ஷ வாதிகளுமாவர். இன்றுள்ள நிலைமையில் இந்தச் செப்புக் காசுகள் கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்வார்கள். இந்த ஒரு சில காசுகள் கிடைப்பதும், கிடைக்காததுமே, அவர்கள் வாழ்வதா, வறுமையால் இறப்பதா என்ற பிரச்னையைத் தீர்க்கும் என்பதை அவர்கள் உணர்வார்கள்.

ஆகவே, தேசிய இயக்கத்தின் புரட்சிகரமான இலட்சியத்தை மறக்காமல், நிர்மாண ஊழியர்கள், இன்றுள்ள நிலைமையில் அன்றாடம் எழும் சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றனர். 1920 லிருந்து நம் தேச சரித்திரம் இந்த உண்மையை நன்கு விளக்கும். நேரடியான நடவடிக்கை எடுத்துப் போராட்டம் நடத்துவதெனத் தீர்மானித்து, சத்யாக்ரஹ இயக்கம் தொடங்கிய போதெல்லாம், கதர்த் தொண்டர்களும்

நிர்மாண ஊழியர்களும் பின் தங்கியதில்லை. இயக்கத்தின் போது, சோர்வடைந்து பலர் நின்று விட்டதுண்டு. ஆனால் கதர்த் தொண்டர்கள் ஒருபோதும் நின்று விட்டது கிடையாது. பதவி, பட்டம் என்ற போதுமட்டும் பின் தங்குபவர்தான் கதர்த்தொண்டர்களும், 'கார்போய் காளை மாட்டுவண்டி வேண்டுமென்று சொல்லும் கர்நாடகப் பேர்வழிகள்' என்று நம் நண்பர்கள் சிலரால் நகையாடப் படுவோருமே யாகும்.

ஓய்வின்றிக் கடின உழைப்பு—படாடோபம், பெருமை யெதுவு மில்லாத உழைப்பு—செய்வதென்றால் முன் வருவதும் இக் கதர்த் தொண்டர்களே. தேசத்துக்குச் சோதனை ஏற்பட்ட எந்த காலத்திலும், கதர்த் தொண்டர்கள் ஆர்வமின்றியோ, திரமின்றியோ காணப்பட்டது கிடையாது. ஸ்தாபனக் கட்டுப்பாடும் இவர்களிடை தான் மிகவும் அதிகம். தியாகபுத்தி, எந்த இன்னலையும் சகித்துக் கொள்ளக்கூடிய உறுதி, ஸ்தாபனக் கட்டுப்பாடு, தலைமைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பணிவு, நாணயம், நேர்மை, தன்னலப் பற்றற்ற தன்மை, ஆகியவையே ஒரு உண்மை புரட்சிவாதியின் குணங்களென்றால், கதர்த் தொண்டர்கள் நாட்டில் எந்தப் புரட்சிவாதிக்கும் சளைத்தவரல்லர்.

இக் கட்டுரையில், நான் அஹிம்ஸா தத்துவம் பற்றிக் குறிப்பிடவே யில்லை. இன்று அரசியல் துறையில் வழங்கி வரும் நீதியையும் முறையையும் அடிப்படையாகக் கொண்டே. நான் வாதம் செய்துள்ளேன். ஆதர்ச சமூகத்தை மனத்திற் கொண்டு வாதம் செய்யவில்லை. கண் முன்னுள்ள நிலைமையைக் கொண்டு வாதம் செய்துள்ளேன். இன்று சமுதாய வாழ்விற்கு அடிப்படையாகவுள்ள பலாத்கார முறையைக் கொண்டே, நான் வாதம் செய்துள்ளேன். காந்திஜியின் சத்தியம்,

அஹிம்ஸை, ஆகிய புதுக் கொள்கைகள் பற்றி நான் இங்கு குறிப்பிடவே யில்லை. அவை புதுக் கொள்கைகள் என்று சொல்வதும் பொருந்தாது. ஏனென்றால், அவை, சரித்திரம் தொடங்கிய நாள் முதற் கொண்டே, நிலைந்து வந்த பழைய கொள்கைகள் தான்.

இரண்டு புரட்சிகள்

ஒவ்வொரு சகாப்தத்திலும், அதற்குப் பிரத்தியேக மான சில பிரச்னைகள் உள. இன்று நம்மை எதிர் நோக்கியுள்ள பிரச்னையோ மகத்தானது. அது வெறும் அரசியல் பிரச்னை மட்டுமல்ல. அது வாழ்க்கையின் எல்லா இயல்களையும் தழுவுவது. முன் காலத்தில், மக்கள் ஒரே ஒரு புரட்சிக்கு அனுசரணையாக நடக்க வேண்டி யிருந்தது. நாமோ இன்று இரண்டு புரட்சிகளுக்கு ஒத்துப்போக வேண்டியிருக்கிறது. ஒரு புரட்சியைச் சமாளித்த மறுகணமே, அதைவிட மகத்தானதும் விரி வானதுமான மற்றொரு புரட்சி நம்மை எதிர்நோக்கி நிற்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்ட காலத்துடன் முதல் புரட்சி தொடங்கியது. அந்த ஆட்சியின் கட்டுப்பாடான பலத்தின் முன்பும், உத்வேகத்தின் முன்பும், எதுவும் நிலைத்து நிற்க முடியவில்லை. சூறாவளி போல் அனைத்தை யும் அடித்துக்கொண்டு சென்றது. ஒரு நூற்றாண்டிற் குள் மேல் நாடுகள் சாதித்துள்ளதைக் கண்டு நாம் கண்

மூடித்தனமாகப் பின்பற்றி, அவர்கள் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் அவர்கள் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதின் மூலம், நாமும் அவர்கள் வலிமையையும் உயர்வையும் எய்த முடியுமென்று எண்ணினோம்.

இந்த வெறியின் விளைவினால், நாம் மேல்நாட்டு நாகரிகத்தைப் போன்றதொரு, ஆனால் அதற்கும் கீழ்த்தரமானதொரு நாகரிகத்தை வகுத்துள்ளோம், கோவேறிக் கழுதைபோல். அது சுமை தாங்குவதற்குப் பயன்படும் என்பது உண்மைதான். ஆனால் புத்தியோ சிந்தனா சக்தியோ அதனிடம் கிடையாது. இது இயற்கைதானே? இயற்கையாக வரா்த ஒரு நாகரிகத்தைச் செயற்கை முறைகளால் அமைக்கப் பெரு முயற்சி செய்தால் வேறென்ன விளைவு நேரிடும்? இன்று நாம் வந்துள்ள நிலையில், நாம் சற்றுச் சிந்தித்து, அனுபவத்தின் படிப்பினைகளை உணர்ந்து, புராதன காலத்திலிருந்து எழுந்துள்ள நமது சுயதர்மத்துக்கேற்ற ஒரு முறையை வகுக்க வேண்டும்.

இவ்வாறு நிலைமையை ஆராய்ந்து, நமது தேசியப் பண்புக் கேற்ற ஒரு புதுமுறையை வதப்பதுதான் இரண்டாவது புரட்சி. இரண்டு புரட்சிகளும் ஏக காலத்திலேயே நடந்துகொண்டிருக்கின்றன. இரண்டிற்கும் ஆதரவாளர் உண்டு, ஆயினும் முந்தியதற்கு ஆதரவு குறைந்து வருகிறது என்றுதான் சொல்லவேண்டும். இரண்டாவது புரட்சி, தேசியப் பண்புக் கேற்ற முறையை வகுத்துள்ள துறைகளில் எல்லாம் வெற்றி பெற்றுள்ளது.........இந்தியப் பண்பை ஆதாரமாகக் கொண்டு எழுந்த தெல்லாம் வெகு விரைவில் ஓங்கித் தழைத்துள்ளது. எந்தத் துறைகளில் அயல் நாட்டு ஆதிக்கம் இன்னும் நீங்கவில்லையோ அத்துறைகளிலெல்லாம் சூன்யத்தையும் விரயத்தையும் தான் காண்

ஒன்றோம். அங்கு வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தென்னிந்தியாவிலுள்ள கோவில்களோ சிற்பக்கலையின் சிகரத்தை அடைந்தவை. மற்றொரு சிறந்த உதாரணம் தாஜ்மஹால். இவ்வளவு சிறப்பு வாய்ந்த நம் நாட்டில், பிரிட்டிஷ் ஆட்சி வந்தபின்பு, சர்க்காரும் சுதேச மன்னர்களும் பெரிய ஜமீன்தார்களும் இருந்தும் கூட, கண்ணையும் கருத்தையும் கவரக் கூடிய ஒரு கட்டிடம் கட்டப்பட்டது கிடையாது. நாட்டின் தலை நகரமான புது டில்லியின் பேச்சை எடுத்தாலோ வெட்கக்கேடு. பொம்மை மன்னர்கள், வறுமையால் வாடும் விவசாயிடமிருந்து உறிஞ்சப்பட்ட பணத்தினால், மேல்நாட்டுப் பாணியில் கட்டி மாளிகைகள் என்று பெயர் சூட்டியுள்ள கட்டிடங்களெல்லாம், நம் தேசியக்கலை எவ்வளவு தூரம் சீரழிந்துவிட்டது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

ஆகவே நாம் ஏதாவது மகத்தானதாகச் சாதிக்க வேண்டுமென்றால், முதல் புரட்சியிலிருந்து விலகி, இரண்டாவது புரட்சியை ஆதரிக்க வேண்டியதுதான். சமீப காலமாக அரசியல் பிரச்னைகள் முன்னணிக்கு வந்து நம் கவனம் அனைத்தையும் ஈர்த்துள்ளன. அரசாங்கம் நம் வாழ்க்கையின் ஒரு சில அம்சங்களைத்தான் பாதிக்கும். மற்றவைகளோடு சம்பந்தப்பட்டவை இல்லை என்று எண்ணியிருந்தோம். ஆனால் அரசாங்கத்தின் அடிப்படையில் தான் சமூகம் முழுவதுமே அமைக்கப் பட்டுள்ளது என்பதை நாம் விரைவில் கண்டோம். நமது கலாசாரம் உயிர்தப்பி, ஓங்கவேண்டுமென்றால், சுதந்திர அரசியல் ஸ்தாபனங்களின் ஆதரவு வேண்டுமென்பதையும் நாம் உணர்ந்தோம். ஆகவே அரசியல் பிரச்னை அவ்வளவு முக்யத்துவம் பெற்றது இயற்கையே.

இந்த அரசியல் எழுச்சி சென்ற அரை நூற்றாண்டாக நடந்து வருகிறது. அதை ஆரம்பித்தவர்களே வெள்ளையர்தான். நமக்குப் புரியாத நம்பண்புக் கேற்காத மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றியே அந்த எழுச்சி ஆரம்பமாயிற்று. அதன் பயனாய், படித்து பட்டம் பெற்ற வக்கீல்கள் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது கோர்ட்டுகள் மூடியிருந்த சமயத்தில், வருஷம் ஒரு முறை கூடி, மகாநாடு நடத்தி, பர்க், ஷெரிடன் போன்ற மேல்நாட்டுப் பேச்சாளர்களைப் போல் சொல்மாரி பெய்தனர். அவர்கள் தங்களைச் சிருஷ்டித்த அந்நிய எஜமானர்களை ஒரு மூச்சில் வாழ்த்தியும் மற்றொரு மூச்சில் கண்டித்தும் பேசினார்கள். சில தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு, அடுத்த கிறிஸ்துமஸ்ஸில் கூடுவதென முடிவு செய்து கலைந்தனர்.

இவர்களைவிட ஆர்வமும் அவகாசமும் அதிகம் பெற்றிருந்தவர்கள் சட்ட சபைகளில் பிரசங்கங்கள் செய்தனர். ஆங்கிலேயப் பொது மக்கள் முன்னிலையில் இந்தியாவில் பிரிட்டன் நடத்தி வரும் ஆட்சி பற்றிக் குறை கூற அவர்கள் புள்ளி விவரங்களைச் சேகரித்து வந்தனர். சொல் நயம் மிகுந்த தங்கள் சொற்கள் கடலைத் தாண்டி, இங்கிலாந்தில் வாழும் ஜன நாயக வாதிகளின் காதுகளில் விழுந்து விட்டால், எல்லாக் குறைகளும் தீர்ந்து விடுமென்று அவர்கள் நம்பினர். தங்கள் கோஷங்களின் தாத்பரியத்தை உணராமலேயே கூச்சலிட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேய மிதவாதிகள் பேச்சில் இவர்கள் நம்பிக்கை வைத்தனர். ஆனால் அந்த மிதவாதிகளோ உண்மையில் வேடம் தரித்திருந்த ஏகாதிபத்திய வாதிகளாகவே இருந்தனர். இதை உணராத நம் அரசியல் தலைவர்கள், தங்கள் குறைகளைத் தீர்த்து கொள்ள வேண்டுமானால், ஓயாமல் உரக்கக் கூவிக் கொண்டே

யிருக்க வேண்டுமென்று எண்ணினர். பிரிட்டிஷ் ஜன நாயகத்திலும் மிதவாதத்திலும் அவர்கள் வைத்திருந்த சிறு பிள்ளைத்தனமான நம்பிக்கையை நினைப்பதற்கே பரிதாபகரமா யிருந்தது.

இந்த மிதவாதப் போக்கை எதிர்த்து, காங்கிரஸுக் குள்ளாகவே ஓர் தேசியவாதிகளின் பிரிவு எழுந்தது. சர்க்கார் முன் மன்ருடி முறையிடும் கொள்கையை இப் பிரிவினர் கண்டித்தனர். சர்க்காரின் செயல்களைப் பகிரங்க மாகவும் கண்டித்தனர். பாமர மக்களுடன் தொடர் பேற் படுத்தும் வேலைத் திட்டம் பற்றி இவர்கள் பேசினார்கள். ஆனல் அந்த வேலைத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவில்லை. இரண்டு பிரிவுகளுமே கையாலாகாத பிரிவு களாகத்தா னிருந்தன.

இளைஞர்களின் ஆர்வமோ அதிகரித்துக் கொண்டு வந்தது. அதை அக் கட்சிகளால் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை. இதன் பயனய் அதிருப்தி பரவி, ஓர் கதி கலங்கிய ஆவேசம் குடி கொண்டது. இந்த ஆவேசத் துடன் கூட, பழிவாங்க வேண்டுமென்ற ஒரு வெறியும் இளைஞர்களிடம் காணப்பட்டது. சட்ட பூர்வமான அரசியல் கிளர்ச்சி தடைசெய்யப் பட்டிருந்ததால், பயங் கர வேலைத் திட்டங்களில் இவர்கள் நம்பிக்கை கொள்ள லாயினர். அராஜக வாதிகள் என்ற பெயரில் தேசிய, பயங்கர வாதிகளின் இரகசிய சங்கங்கள் தோன்றின. இவர்களுக்கு அராஜக வாதிகள் என்று பெயர் தந்தது பொருத்த மற்றதா யிருந்தது.

அராஜகம் என்பது ஒரு பொறுப்பான, கௌரவ மான வாழ்க்கைத் தத்துவம். கிரபாட்கின், டால்ஸ்டாய், தோரோ போன்ற பெரியார்கள் அக் கொள்கையின் ஆதரவாளர்கள். குண்டுக்கும் அக் கொள்கைக்கும் அவ் வளவாக சம்பந்தமில்லை. ஆனல் அதிகார வர்க்கத்தின்

ருக்கு இவ்வளவு அரசியல் அறிவு எங்கிருக்கும்? கொலை செய்ததாகவோ, கொலை செய்ய முயற்சித்த தாகவோ குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டின் முன் ஆஜர் செய்யப் பட்ட பயங்கர வாதிகளை அவர்கள் அராஜக வாதிகள் என்று கூறினுர்கள்.

இந்த மூன்று கட்சிகளும், அதாவது மிதவாத தேசிய, பயங்கர கட்சிகள், பொதுவாக மேல்நாட்டு அரசியல் கிளர்ச்சி முறைகளில் நம்பிக்கை கொண்டிருந் தன. முதல் கட்சி வெளிப்படையாக நம்பிக்கை கொண் டிருந்தது. பிந்திய இரண்டு கட்சிகளும் நம்பிக்கை கொண்டிருந்தது மட்டும் உண்மைதான்; ஆனுல் தங் களுக்கு நம்பிக்கை யில்லை யென்று, பலமாக கூறி வந்த னர். முதல் கட்சி குருபூஜை செய்தது; பிந்திய இரண்டு கட்சிகளும் எதிர்ப்பின் மூலமாகவே தங்கள் பாசத்தை வெளிப் படுத்தினர். ஒருவர் மீது வெறுப்பும் விரோத மும் கொண்டால், அதுவே அவரைப் போற்றும் வழியாக இருக்கவும் கூடு மென்று ஹிந்துமதம் கூறுகிறது. எதிரி நம்மிலும் மேலோன் என்பதை உணர்ந்ததால் தானே. அவன் மீது வெறுப்புக் கொள்கின்ருேம் என்பது இதற்கு வியாக்கியானம்.

இந்த நிலையற்ற போக்குகள் வெகு நாட்கள் நீடித்து நிற்க முடியவில்லை. முதல் கட்சி கையாலாகாத கட்சி என்பதைக் கண்டு தேசம் ஆத்திரம் கொண்டது. மற்ற இரண்டு கட்சிகளும், தங்கள் திட்டத்தால் உண்டு பண் ணும் கெடுதலின் மூலமாகவே, தேசத்தின் பிரச்னைகளைத் தீர்க்கத் தங்களுக்குத் திறமையில்லை என்பதை நிரூபித்து வருகின்றன. அவர்கள் செய்துள்ள வேலையோ சொற் பம்; கட்சிகளே இன்று சீர்குலைந்து நிற்கின்றன. அதிர்ஷ்ட வசமாக, இவற்றைவிட உண்மையான தேசிய

இயக்கம் ஒன்று எழுந்துள்ளது. அந்த இயக்கத்தை நாம் பாரபக்ஷமற்ற முறையில் ஆராயவேண்டும்.

அரசியல் அரங்கில் காந்திஜி பிரவேசித்த பின்னர் அரசியல் கொள்கைகள், வேலைத் திட்டங்கள், சாதனங்கள், ஆகியவற்றில் மிகப் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பழைய ஸ்தாபனங்கள் மூலமாகவே தான் அவர் வேலை செய்கிறாரெனினும், அனைத்தும் மாறுதலடைந்துள்ளன. அரசியல், வாழ்க்கையின் மற்ற அம்சங்களிலிருந்து வேறுபட்டதோர் அம்சம் என்று அது வரை கருதப்பட்டு வந்தது. மதம், சன்மார்க்கம், சமூக வாழ்க்கை, இவற்றிலிருந்து வேறுபட்டு, அரசியல் ஒதுங்கி நின்றது. பொருளாதாரத் துடனும் அதற்கு மிகவும் மேல்வாரியான சம்பந்தமே யிருந்தது. வாழ்க்கையின் மற்ற துறைகளிலிருந்து வேறு படுத்தியே இத் துறையை ஆராய முடியுமென்று கருதப்பட்டு வந்தது.

வாழ்க்கை அனைத்தும் ஒன்று; ஆகவே அரசியலுக்கும் சன்மார்க்கத்திற்கும், சமூக சீர்திருத்தத்திற்கும், பொருளாதாரத்திற்கும் பொது சேவைக்கும் நெருங்கிய சம்பந்த முண்டு என்பது காந்திஜியின் கொள்கை, இவை யெல்லாம் ஒன்றை யொன்று தழுவி நிற்பவையே. சில சமயங்களில் அரசியல் நடவடிக்கை எடுப்பதற்கு ஆதாரமாக, சமூக, சன்மார்க்க, அல்லது, பொருளாதார பிரச்னைகளுக்கு அதிக முக்யத்துவம் தரவேண்டி யிருக்கிறது. முன்பு, வங்காளத்திலோ, சென்னையிலோ, மஹாராஷ்டிரத்திலோ, அரசியலில் தீவிர வாதியாக இருப்பவர் சமூக விவகாரங்களில் பிற்போக்கானவராக இருப்பார். இன்றோ அது சாக்கியமில்லை.

நவீன அயல் நாட்டுத் துணியையே உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அணிந்திருந்த ஒரு மிதவாதி, காங்கிரஸ் மேடை மீதேறி சுதேசிப் பிரசாரம் செய்த காலம்

ஒன்றிருந்தது. மதுபான பழக்கமுடையவரும் சிறந்த தலைவராவது சாத்தியமா யிருந்தது. அவர் வாழ்க்கை முறையும் நடத்தையும், அவர் உயர்ந்த பதவிகளையும் கௌரவங்களையும் அடைவதற்குத் தடையாய் இருக்க வில்லை.

இன்றோ இருப்பதெல்லாம் மாறி விட்டன. இந்த பிரிட்டிஷ் ஆட்சிக்கு உண்மையில் பலமில்லை; நமது குறைபாடுகளும் தவறுகளுமே இந்த ஆதிக்கத்திற்குத் தூண்களாக இருக்கின்றன, என்பதை காந்திஜி நமக்கு நன்கு உணர்த்தி விட்டார். நம்மை நாமே சுத்தப்படுத்தி, நமது ஸ்தாபனங்களை சீர்திருத்திக் கொள்வதே பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடுவதற்கு சிறந்த வழி. நம்மைச் சுத்தப்படுத்த முயற்சி நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே, சுதந்திரப் போராட்டமும் நடக்க வேண்டும். சுதந்திரம் அடைந்து, சுதந்திர சர்க்கார் அயல் நாட்டுச் சரக்குகள் மீது அதிக சுங்கவரி விதிக்கும்வரை, நாம் சுதேசியைக் கைக்கொள்ளாமல் இருக்கக் கூடாது. இப்பொழுது, நாமே விரும்பி யேற்று, தடைகளை விதித்துக் கொண்டு அதன் மூலம் நாட்டின் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்திற்கும் உதவி செய்யவேண்டும்.

அரசியல் அதிகாரம் வந்த பின்புதான் மது விலக்கு ஏற்படுத்தப் படவேண்டு மென்று காத்திராமல், நமது உதாரணத்தாலும் சாத்வீக மறியலாலுமே மது விலக்கு ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம், தேசியக்கல்வி, ஏற்படுத்த வேண்டும். தீண்டாமை விலக்கு, கிராமப் பஞ்சாயத்தார்கள் முதலிய வற்றிலும் நாம் இதே கொள்கையைப் பின்பற்ற வேண்டும் நம் மிடையுள்ள குறைகளை நீக்குவதற்கு, சுயராஜ்யம் வரும் வரை நாம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. தாமதம் செய்யாமல் தேசிய வாழ்வின் எல்லாத் துறைகளையும்

தழுவக்கூடிய வேலையை நாம் உடனே தொடங்க வேண்டும்.

காந்திஜியின் காலத்திற்கு முன்பே இந்த கருத்துக்கள் இருந்து வந்தன என்று சிலர் வாதாடலாம். வங்காள, புனு தேசியவாதிகளின் பழைய திட்டத்தில், இவற்றில் சில அம்சங்கள் இருந்தன. இவற்றைக் கண்டுபிடித்தவர் காந்திஜி தான் என்பதை நிரூபிப்பதில் எனக்கு இப்பொழுது அக்கரையில்லை. அந்த எண்ணங்கள் மக்கள் மனத்திற் பதியும்படி செய்ததும், அவற்றைத் தொடர்ந்து உருப்படியாக வேலை நடக்க வழிகாட்டியுள்ளதும் காந்திஜி தான் என்பதை மட்டுமே நான் நிரூபிக்க விரும்புகின்றேன். அவர் வழிகளில் தேசம், இன்னும் அதிக நம்பிக்கை காட்டி, அவருக்கு அதிக ஆதரவு தந்திருந்தால், சென்ற பத்து வருஷங்களில் நாம் இன்னும் அதிகம் சாதித்திருக்கக்கூடும். இன்றுள்ளபடி பார்த்தாலே, மகத்தான மாறுதல் ஏற்பட்டுள்ளது உண்மைதான். சட்டமறுப்பு இயக்கம் தொடங்குவதற்கு முன்பே, அரசியல் வேலை செய்த பாக்கியமோ துர்பாக்கியமோ பெற்றிருந்தவர்களுக்கு, இந்த மாறுதலின் முக்கியத்துவம், தற்போதைய தலைமுறையினரை விடத் தெளிவாகப் புலப்படும்.

இரண்டாவது மாறுதல், அரசியல் இயக்கத்தின் இலட்சியத்தில் ஏற்பட்டுள்ளது. நிர்வாகம் நடத்துவோரை மாற்ற வேண்டுமென்பதோ, அந்நியனை விரட்ட வேண்டுமென்பதோ, அரசியல் அதிகாரத்தை மாற்ற வேண்டுமென்பதோ மட்டும் இன்றைய இயக்கத்தின் இலட்சியமல்ல. மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களுடைய சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்பதே இன்றைய இலட்சியம். மக்கள் என்ற போது, உணவும் உடையுமின்றி வாழும் தரித்திர நாராயணனையும்

திண்டாதாரையும், தாழ்த்தப் பட்டோரையும் தான் காந்திஜி குறிப்பிடுகிருர். அவர் வாழ்வதே ஏழையைப் போல்தான். அவர் இயக்கத்தில் சேர்வோர், மோதிலால் போல முடி சூடா மன்னராகவோ, யமுனலால் பஜாஜ் போல் கோடீசுவரராகவோ இருந்தாலும், அவரவர் நம்பிக்கைக்கும் சக்திக்கும் தக்கபபடி தம்மை ஏழையாகப் பாவித்துக்கொள்ள வேண்டும். தலைமை தாங்க விரும்பு வோர் ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டுமென்று அவர் போதித்துளார். அனைவரும், ஏழையின் உடை யான கதரை அணியவேண்டுமென்று அவர் விதிக்கிருர்.

போதிப்பதை விட, செயலில் காட்டுவதுதான் பிர தானம் என்பது காந்திஜி கடைப்பிடித்து வரும் கொள்கை. தன்னடக்கத்தைத் தமது வாழ்க்கையிலேயே கடைப் பிடித்துள்ளதின் மூலம், அவர், தன்னைத்தானே தூய் மைப்படுத்திக் கொள்வதின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தி யுள்ளார். உண்மையில் கொள்கை யென்று சொல்லக் கூடியது காங்கிரஸிடம் ஒன்றுமில்லை. ஒரு கொள்கையையும், வேலைத் திட்டத்தையும் வகுத்து, இரண்டுக்கும் உண்மையான போர் வீரர்களாகப் பொது மக்கள் இருக்க வேண்டுமென்று உணர் பூட்டியது, காந்திஜியே.

அரசியல் வாதியின் வார்த்தை நாணயமாகவும் கௌரமாகவும் இருக்க வேண்டுமென்று அவர் வற் புறுத்துகிருர். தான் சாதிக்க முடியாததைச் சாதிப்ப தாக வாக்குறுதி தரக்கூடாது. ராஜ தந்திரம் என்ற பெயரால், கபடமான சூழ்ச்சி நடத்துவதை நிறுத்த வேண்டும். ஒரு நல்ல காரியத்தைச் சாதிப்பதற்காக எந்தக் கெட்ட வழியையும் கையாளலாம் என்ற அபாய கரமான கொள்கையில் காந்திஜிக்கு நம்பிக்கை இல்லை. சத்யம் அஹிம்ஸை, ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்

டதே அவர் அரசியல். சத்தியம், அஹிம்ஸை என்பவற்றைத் தீவர, பலம் பொருந்திய ஆயுதங்களாக ஆக்கியுள்ளவர் காந்திஜி.

அஹிம்ஸை என்றால் கெடுதலைத் தடுக்க ஒன்றும் செய்யாமலிருக்கவேண்டுமென்பது அவர் கொள்கையல்ல. அதர்மத்தை எதிர்த்து இறுதியான போராட்டம் நடத்துவதற்கு உறுதியான வழியைக் காட்டுவதே அவர் கொள்கை. ஆனால் அந்தப் போராட்டத்தினால் பிறர் உயிருக்கு ஆபத்தோ சேதமோ ஏற்படுத்தக் கூடாது. உயிர்ச்சேதம் ஏற்பட்டே ஆகவேண்டுமென்றால், சீர்திருத்தவாதி முதலில் தன் உயிரைப் பலியிட வேண்டுமேயொழிய எதிரியின் உயிரைப் பறிக்கக் கூடாது.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தழுவும் அடிப்படைக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டது காந்தியம். சத்தியம், அஹிம்ஸை, போன்றவை, புராதனக் கொள்கைகள்; ஆயினும் அவற்றின் புதுமையோ பலமோ என்றும் குறையாது. காந்திஜிதம் தத்துவத்தைப் போதிப்பது மட்டுமல்ல, அதைச் செயலிலும் செய்து காட்டுகிறார். ஒரு ஒழுச்சி ஏற்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல; அந்த எழுச்சி ஒரு தலைவர் உருவில் அவதரித்துள்ளது.

ஒரு சரியான தலைவரில்லாமல், சிறந்த கொள்கை மட்டுமிருந்தும் பலனில்லை. உறுதியான கொள்கையில்லாமல் சிறந்த தலைவர் இருந்தும் பலனில்லை. எண்ணங்கள் அவதாரம் எடுத்து, சில தலைவர்களிடம் குடிகொள்ளும் போதுதான், அவற்றால் நிரந்தரமான பலன் ஏற்படுகிறது. இல்லாவிடில் அவை வெறும் வரட்டுக் கொள்கைகளாகவே இருக்கும். நம்பிக்கை ஊட்டவோ. பக்தியைப் புகட்டவோ, செயலுக்குத் தூண்டவோ அவற்றால் முடியாது. போல்ஷவிஸம், லெனின் போன்ற

சிறந்த தலைவரிடம் குடி கொண்டிருக்காவிடில், ஒரு மார்க்ஸிய சித்தாந்தமாயிருந்திருக்கமேயொழிய புது ரஷ்யாவை சிருஷ்டித்தோ, உலகம் முழுவதையும் அறை கூவி அழைத்திருக்கவோ முடியாது.

காந்திஜியின் ஆத்மீக உயர்வு, சுத்த வீரம், அரசியல் ஆற்றல், ஆகியவை இல்லாவிடில், சத்தியம், அஹிம்ஸை என்பது வரட்டுக் கொள்கைகளாகவோ, காட்டில் வாழும் ஞானிகள், சாதகம் செய்வதற்குரியதாகவோ கோழைகள் தங்கள் கையாலாகாத் தனத்திற்குப் போர்வையாக உபயோகிப்பதற் குரியதாகவோ தான் இருந்திருக்கும்.

காங்கிரஸும் வர்க்கப் போராட்டமும்

வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும் தனி உடைமை பறிமுதல் பற்றியும் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானம் அவைகளைபற்றிப்பெரும்பாலும் நடந்துவரும் பொறுப்பற்ற பேச்சைத்தான் கண்டிக்கிறது. காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியையோ, வேறெந்த கட்சியையோ அது குறிக்கவில்லை. கட்டுப்பாடும் கொள்கையில் ஐக்கியமும் கொண்ட கட்சிகள் அக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு வேலைத் திட்டங்களை வகுக்கின்றன. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய, பின்புதான் அத் திட்டங்களைச் செயலில் கொண்டுவர முடியும். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், எந்தக் கட்சி அரசாங்கமும் சட்டப்படி செய்யும் நடவடிக்கைகள் நியாயமற்றவையா யிருந்தால், காங்கிரஸ் சத்யாக்ரஹம் செய்யும். அரசியல் அதிகாரம் தன் கையில் வந்தால் பல மகத்தான மாறுதல்கள் செய்யக் காங்கிரஸ் உத்தேசித் துள்ளது. ஆனால் தனிப்பட்ட

நபர்கள் பொறுப்பற்ற முறையில், உதிரியாக ஏதோதோ பேசுவதைத் தான் காங்கிரஸ் கண்டிக்கிறது.

பண்டைக் காலத்தில், ஒரு புரட்சி நடந்தபோது, தனிப்பட்ட நபர்களும், பலரடங்கிய தொகுதிகளும், மற்ற நபர்களின் மீதோ, தொகுதிகளின் மீதோ, அரசாங்கத்தைச் சம்பந்தப் படுத்தாமல் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே நடவடிக்கை யெடுத்துக் கொள்ளத் தயங்கிய தில்லை. தனிப்பட்ட நபர்களிடை விரோதமும் வர்க்க விரோதமும் மூட்டி விடப்பட்டன. அதன் விளைவாக, கொலைகளும் காட்டு மிராண்டித் தனமான ஆட்சியும் நடைபெற்றதுண்டு. வர்க்கப் போராட்டத்திற்கு ஆதாரமா யுள்ள இத்தகைய வர்க்க வெறியை காங்கிரஸ் கண்டிக்கிறது. அவ்வாறு கண்டிப்பது தான் நியாயமுமாகும். ஆனால் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ளதும் இன்று இருந்து வருவதுமான வர்க்க விரோதத்தையும் போராட்டத்தையும் காங்கிரஸ் உணரவில்லை என்று அர்த்தமாகாது.

எந்த வர்க்கத்திற்கோ, சமூகத்திற்கோ, தேசத்திற்கோ, அநீதி விளைவிக்கக் கூடிய வர்க்கப் பகைமையையும் வகுப்பு விரோதத்தையும் நீக்கவே காங்கிரஸ் என்றும் போராடிவரும். இந்திய தேசத்தில், பற்பல தொகுதிகளுக்கு மிடையே உள்ள பகைமையை உணர்ந்து, அதை நீக்கும் நோக்கத்துடனேயே ஹரிஜன சேவை, கதர், கிராமக் கைத்தொழில்கள் முதலிய வேலைத் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. ஆனால் இந்த வர்க்கப் பகையை வளர்க்கக் காங்கிரஸ் இடங் கொடுக்காது. எல்லா வர்க்கங்களிடையும் சமத்துவம் ஏற்படுத்துவ தென்ற, சாக்கில், எந்த ஒரு தனி வகுப்பும் யதேச்சாதி காரத்தைத் தன் வசப்படுத்திக் கொள்ள காங்கிரஸ் அனுமதிக்காது.

ஓர் முறை வேறு, தெரிந்தோ, தெரியாமலோ, விரும்பியோ நிர்ப்பந்தத்தின் பேரிலோ அம் முறையின் கருவிகளாக இருக்கும் தனிப்பட்ட நபர்கள் வேறு, என்ற உண்மையைக் காங்கிரஸ் உணர்கிறது. அதர்ம மான முறையை ஒழிக்கக் காங்கிரஸ் பாடு படும். ஆனால் தனிப்பட்ட நபர்களைத் தண்டிக்கவோ பலியிடவோ காங் கிரஸ் சம்மதிக்காது. ஆகவே எந்தக் குறிப்பிட்ட நபர் கள் மீதோ, தொகுதிகள் மீதோ, தனிப்பட்ட முறையில் வஞ்சம் தீர்த்துக் கொள்வதைக் காங்கிரஸ் எதிர்க்கும். பண்டை நாட்களில், பல மகத்தான புரட்சிகள், இத் தகைய பழிவாங்கும் வெறியால், தீராக்களங்க மடைந் துள்ளன. அஹிம்ஸைக் கொள்கையைப் பின் பற்றும் காங்கிரஸ், ஒரு முறை வேறு, அம் முறைக்கு ஆளாகி யிருந்த தனிப்பட்ட நபர்கள் வேறு என்பதை உணராம லிருக்க முடியாது. சட்டப்படி யல்லாமல், எவர் மீதும் பலாத்காரம் பிரயோகிக்கப் படக்கூடாது என்பதே காங் கிரஸின் கொள்கை. ஆகவே இப் பொழுதிருந்தே வர்க் கப் போராட்டம், பகைமை முதலியவை பற்றிய பேச் சைக் காங்கிரஸ் ஆதரிக்கும்.

தனிவுடைமை பறிமுதல் மீது காங்கிரஸின் கொள் கையும் இத்தகையதோர் நாகரிக சமுதாயத்தில் எல்லா உயிர்களும் சொத்துக்களும் இறுதியில் அரசாங்கத்தின் உடைமைகளே என்பதை காங்கிரஸ் உணராமலில்லை. சமூக நலன் என்ற சாக்கில், இவ்விரண்டும் அடிக்கடி சமூகத்தால் பயன் படுத்தப் படுகின்றன. சில குற்றங் களுக்குத் தண்டனையாக, அரசாங்கம், சொத்தைப் பறி முதல் செய்கிறது, மரண தண்டனை கூட விதிக்கிறது. உயிர்கள் மீதும் சொத்து மீதும் அரசாங்கத்துக்கு உரிமை இல்லையென்றால் இத்தகைய தண்டனைகள் விதிக் கப் படும்போது, அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடை

அடிக்கடி சண்டைகளும் போராட்டங்களும் ஏற்படும். யுத்த காலத்தின்போது, சமூகத்தின் எல்லா வகுப்பினரும் பொது நலனுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் அழைக்கின்றது. கட்டாயமாக சேனைக்கு ஆள் சேர்க்கப் படுகின்றனர்.

சொத்தைப் பொருத்த வரையிலும் அவ்வாறே தான். யுத்த காலமல்லாது, சாதாரண காலத்தில் கூட ஒவ்வொரு அரசாங்கமும் தனி உடைமையில் ஒரு பகுதியை வரியாகப் பறிமுதல் செய்கிறது அசாதாரண காலத்தில், அரசாங்கம் தனக்கு வேண்டிய தனத்தையும் ஈடுதராமலே எடுத்துக் கொள்கிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் பறிமுதல் என்று பெயர் கிடையாது. சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கம், நாட்டின் நியாயப்படி வரி விதிக்கிறது. இது அவசியமில்லையென்று கூற யாரும் முன் வருவதில்லை.

எல்லா சொத்தும் அரசாங்கத்தால் சிருஷ்டிக்கப்பட்டதென்பதும், ஆகவே நியாயமாகப் பார்த்தால் தனி உடைமையே இருக்க முடியாதென்பதும் தான் இக்கொள்கையின் தாத்பரியம். சொத்தை சிருஷ்டித்துள்ளது அரசாங்கம் என்பதால், அது தான் சொத்தின் சொந்தக்காரருமாகும். இந்த பாத்யதையை அது எப்பொழுதும், பூர்ணமாகவோ, நேரடியாகவோ, கொண்டாடுவதில்லை. இதனுல் இந்த உரிமையைத் தனிப்பட்ட நபர்களுக்கு விட்டுக்கொடுத்து விட்டது என்பது பொருளல்ல. அரசாங்கம் தன் வசதியையும் பொது நலனையும் கருதி, தனிப்பட்ட நபர்கள் சொத்தையும் உரிமைகளையும் சில விதிகளுக்குக் கட்டுப்பட்டு, அனுபவிக்கும் முறையை ஏற்படுத்தியுள்ளது. அதன் மீது குடிகள் வழக்குத் தொடர்வதற்குக் கூட அரசாங்கம் இடம் கொடுக்கிறது. ஒரு முறையினுல், அம்முறை எந்தப் பொது இலட்சியத்

திற்காக வகுக்கப் பட்டதோ அது கைகூடாமல் இருக்கலாம். அதை விடச் சிறந்த முறைகள் இருக்கலாம். ஆனால் அம் முறை அமுலில் இருக்கும்வரை, அம் முறை தான் சிறந்த தென்றும் மாறுதல் எதுவும் செய்தால் அது பெருங்கேட்டில் முடியுமென்றும் அரசாங்கம் கருதுகின்றது.

அரசியலில், அரசாங்கம் என்றால், தேசத்திற்குள் சர்வ வல்லமை பொருந்தியது என்று பொருள் படும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், இந்த அதிகாரம் அனைத்தையும் அரசாங்கம் அமுல் நடத்தாமல் இருக்கலாம். அந்த அதிகாரத்தில் ஒரு பகுதியை சில தனிப்பட்ட நபர்களிடமோ, தொகுதிகளிடமோ, நகர சபைகளிடமோ, ஸ்தலஸ்தாபனங்களிடமோ ஒப்பு விப்பது வசதியாயிருக்கும் என அது கருதக்கூடும். தன் சொந்த விருப்பத்தின் பேரிலேயே, தன் வசதிக்காக அது இவ்வாறு தற்காலிமாக அதிகாரத்தைப் பிறரிடம் ஒப்புவிக்க முடியுமே யொழிய, நிரந்தரமாகத் தன் அதிகாரத்தில் ஒரு பகுதியையும் விட்டுக் கொடுத்து விட முடியாது. அவ்வாறு செய்தால், அது அரசாங்கமாகாது; அதன் சர்வ வல்லமை பாதிக்கப்படும். அரசாங்கத்தின் சர்வ வல்லமையை, சர்வதேச சங்கமும் அங்கீகரித் துள்ளது. அது அங்கீகரிக்காவிடில், எந்த தேசமும் சங்கத்தின் அங்கத்தினராகச் சம்மதித்திராது.

வருங்கால இந்தியாவின் பொருளாதாரத்தை உருவாக்குங்கால், இப் பொழுதுள்ள பல உரிமைகளைக் களைய வேண்டியிருக்கும் என்பதை, காங்கிரஸ் நன்கு உணர்கிறது. அவ் வுரிமைகள் களைக்கப் பட்டதால்தான் தேசம் தன் புது வாழ்வை நடத்த முடியும். கராச்சி மகாநாட்டில் காங்கிரஸ் நிறைவேற்றிய "அடிப்படை உரிமை சாசனமும் பொருளாதாரத் திட்டமும்" என்பதில், இவ்வாறு பல வர்க்க உரிமைகளை ஒழிக்கத் திட்-

டம் போடப் பட்டுள்ளது. இவ்வாறு ஒழிக்கப்படும் உரிமைகளுக்கு அது ஈடு தரக்கூடும்; தர மறுக்கவும் கூடும். அநியாயமாக ஓர் உரிமை கொண்டாடப் பட்டு வந்துள்ளது என்றோ இதுவரை பாத்யதையை அனுபவித்ததே சொத்தைத் திரட்டியதற்குப் போதுமான வெகுமதி என்றோ அரசாங்கம் கருதினால், அது எந்த சொத்துக்கும் ஈடுதர வேண்டிய அவசியமில்லை. பொது நலனுக்காக, இதையும், இன்னும் பல தீவிரமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியிருக்கும் என்பதைக் காங்கிரஸ் நன்கு உணரும். எந்த வர்க்கத்தையும் கண்டு அது அஞ்சாது. இந்தியாவின் தேசியக் கடன் என்றுள்ள கணக்கைத் துருவித்துருவிப் பரிசீலனை செய்து, அது நியாயமான கணக்குத்தானா என்பதை முடிவு செய்யக் காங்கிரஸ் விரும்புகிறது.

அது போலவே, தனிப்பட்ட உடைமையை, அதன் தன்மை எதுவா யிருந்தாலும் சரி, அது எத்தனை காலமாக நீடித்து வந்துள்ளதாயினும் சரி—பரிசீலனை செய்து, காங்கிரஸ் நியாயமான முடிவுக்கு வரும். எது பொது நலனுக் குகந்ததோ அதை அனுசரித்தே முடிவு செய்யப் படும். இந்தியாவின் பாமர மக்கள் நலனுக்கு விரோதமான எந்த உரிமையும் ஒழிய வேண்டும். காந்திஜியின் தலைமையின் கீழ் காங்கிரஸ் வகுத்துள்ள சுயராஜ்யத் திட்டத்தில், ஒவ்வொரு உரிமையும், இந்தியாவின் ஏழை, பாட்டாளி மக்கள் நலனுக்கு உகந்தது என்பது முதலில் நிரூபிக்கப் படவேண்டும். இதனால்தான் முதலாளி வர்க்கத்தினர் பலர் காங்கிரஸைக் கண்டு அஞ்சுகின்றனர்.

இவ் விஷயங்களில் காங்கிரஸின் கொள்கை உறுதியாக இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் தனி உடைமை பறிமுதல் பற்றிப் பொறுப்பற்ற பேச்சைக் காங்கிரஸ்

கண்டிக்கிறது. உதாரணமாக, சில தனிப்பட்ட குத்தகைக் காரர்கள் தனியாகவோ ஒன்று கூடியோ, நிலத்தைத் தங்கள் வசப்படுத்திக் கொள்வதற்குக் காங்கிரஸ் இடந்தராது. ஒரு ஆலையை ஆலைத் தொழிலாளர் வசப் படுத்திக் கொள்ள அனுமதிக்காது. அவ்வாறு செய்தால், பொது நலக்காப்பாளர் என்ற பணியில் அரசாங்கம் தவறியதாகும். இவ்வாறு வசப்படுத்துவது, இதற்கு முன்பு பல புரட்சிகளில் நடந்துள்ளது. இவற்றால் தேசத்திற்குத் தான் தற்காலமாகவோ நிரந்தரமாகவோ கெடுதல் ஏற் பட்டுள்ளது. அத்தகைய கெடுதலைப் போக்குவதற்காகத் தேசங்கள் இன்னும் பல வருஷங்கள் சொல்லொணுக் கஷ்டங்கள் அனுபவித்துத் தியாகங்கள் செய்ய வேண்டி யிருந்துள்ளது.

ஆகவே பறிமுதல் பற்றிய பொறுப்பற்ற பேச்சை இந்திய தேசமும் தேசியக் காங்கிரஸும் எதிர்ப்பது தான் முறை. அத்தகைய பேச்சு, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் தவருன எண்ணத்தைத் தந்து பொய்யான நம்பிக்கைகளையும் பேராசையையும் ஊட் டும். எந்த நாகரிக சமூகத்திலும், அநீதிகளைத் தீர்ப்ப தற்கு, ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாடான முறை யுண்டு. தனிப்பட்ட மனிதன் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு அதிகாரம் செலுத்தத் தொடங்கினுல், சமூகம் சீர் குலையும்; குழப்பமும் கொந்தளிப்பும் நேரிடும். எதற் கும் ஒரு கட்டுப்பாடான முறையும் ஒழுங்கும் வேண்டும். அதனுல் தான் ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற் படுத்த வேண்டுமென்ற திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்று ஆதரித்து வந்துள்ளது.

இடதுசாரியும் வலதுசாரியும்

அனுபவமோ, ஆராய்ச்சி அறிவோ உள்ளயாரும் சாதாரணமாய் மறுக்காத, வெளிப்படையான உண்மைகளை நிரூபிப்பதற்கே நம்முடைய சமதர்ம நண்பர்களிற் சிலர் விரிவான வியாக்கியானம் செய்கின்றனர். ஏற்கனவே விசுவாசமாயுள்ளவர்களுக்குப் புதிதாக அதே பக்தியைப் புகட்ட முயற்சிப்பது போலிருக்கிறது இந்தச் செய்கை. இந்தியாவில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகம் என்பதும் பொருள்கள் வாங்கும் சக்தி மக்களிடம் மிகக் குறைவென்பதும், அனைவரும் ஒத்துக்கொள்ளும் உண்மைகள். விவசாயத்திலும் கைத்தொழிலிலும் இயந்திர வளர்ச்சி ஏற்பட்டால், உற்பத்தி பெரிதும் உயரும் என்பதையும் யாரும் மறுக்க மாட்டார்கள். இவ்வாறு இயந்திர மயமாக்குவது ஒரு சமதர்ம ஆட்சியில் சாத்தியம் என்பதையும் நாம் விவாதத்திற்காக ஒத்துக் கொள்வோம். ஆனால் இந்த மாறுதல்கள் எப்படி ஏற்படுத்தப் படப்போகின்றன, அதற்கு அவசியமான அதிகாரம் எங்கிருந்து வரப்போகிறது, அந்த

இலட்சியத்தை அடைவதற்கு என்ன சாதனங்கள் கையாளப் படப்போகின்றன, என்பவற்றைத் தான் நாம் அறிய விரும்புவோம்.

அவசியமான அதிகாரமும் சாதனங்களும் நம் கையி லில்லை என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர். ஆகவே அவற்றை எப்படிப் பெறுவதென்ற பிரச்னை எழுகிறது. இயந்திர மயமாக்குவது, உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்குவது, முதலாளி வர்க்கத்தை ஒழிப் பது, வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்குவது என்பவை யெல்லாம் வெறும் தர்க்கப் பிரச்னை கள் மட்டுமல்ல; நடை முறையில் செயலம்சத்தில் வர வேண்டிய முக்கியமான பிரச்னைகள். நடைமுறை அரசி யலில் சம்பந்தப் பட்ட பிரச்னைகள் இவை. அதிகாரம் நம் கையில் இருந்தாலொழிய இவற்றைத் தீர்க்க முடி யாது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்புதான் லெனின் ரஷ்யாவை மின்சார மயமாக்க முடிந்தது; பூரண அதிகாரமும் அரசுரிமையும் இருந்ததால் தான் அவருக்குப் பின் வந்தவர்களும், விவசாயத்தையும் கைத் தொழிலையும் இயந்திரமயமாக்க முடிந்தது.

இந்தியாவில் கைத்தொழில் வளர்ச்சி இயற்கையாக இல்லாம லிருப்பதேன்? எங்கு பார்த்தாலும், நம் வழி யில் இடையூறுகளும் தடைகளும் இருக்கின்றன. இவை யெல்லாம் தர்க்கப் பிரச்னைகளல்ல; நடைமுறையில், பிரத்தியக்ஷமாக நம்மை எதிர் நோக்கி நிற்கும் தடைகள். நாம் எதையும் சாதிப்பதற்கு முன்பு இந்தத் தடைகளை நீக்க வேண்டும். இந்த இடையூறுகள், அரசியல் சம்பந்த மாகவும் பொருளாதார சம்பந்தமாகவும் சமூக சம்பந்த மாகவும் உள்ளன. நமது பொருளாதாரக் கஷ்டங்கள், அரசியல் துன்பங்களால் மேலும் வளர்கின்றன என் பதை நாம் அறிவோம். இந்த அரசியல் தடைகளும்

குறைகளும் நீக்கப் பட்டாலொழிய, நாம் பொருளா தாரத் துறையில் முன்னேற முடியாது.

உண்மையான அரசியல் அதிகார மில்லாமல் சமூக சீர்திருத்தங்கள் கூடச்செய்ய முடியாது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம், தீண்டாமையை அகற்ற தேச மக்கள் தயாராக இருந்தாலும் சட்டம் உதவி செய்வ தில்லை. மதுவிலக்கைப் புகுத்த நாம் விரும்பினாலும் சட்டம் ஆதரவு தருவதில்லை. தேசமக்கள் அனைவருக்கும் கல்வி யறிவு புகட்ட விரும்பினால், அரசாங்கம் பண உதவி செய்ய மறுக்கிறது, அரசாங்கமே பொறுப்பை எடுத்து நடத்த வேண்டும். அல்லது பரிபூரண ஆதரவு தரவேண்டும். இல்லா விட்டால் எவ்விதமான பெரிய சீர்திருத்தத்தையும் செய்ய முடியாது. ஆகவே நாம் அர சியல் அதிகாரத்தை நம் மிடையே உண்டாக்கிக் கொள்ள வேண்டும்; அல்லது தற்போது இருந்து வரும் அரசியல் அதிகாரத்தை நாம் கைப்பற்ற வேண்டும்.

ஜப்பான் அரசியல் அதிகாரம் பெற்றிருந்த தால் தான் 30 வருடங்களில் அது தன்னை இயந்திர மயமாக்கிக் கொண்டதோடு மேல் நாடுகளுக்கு அறை கூவல் விடுத் தது. இந்தியா, ஜப்பானுக்கு முன்னதாகவே இயந்திரத் தொழில் வளர்ச்சியில் இறங்கியது, ஆனால் மொத்தத் தில் என்ன பலன் ஏற்பட்டுள்ளது? முந்திய காலங் களை யெல்லாம் விட, இப்பொழுது விவசாயத்தையே நம்பி வாழ்வோர் தொகை அதிகரித்துள்ளது என்பது ஜன சங்கியை அறிக்கையி லிருந்து புலனாகிறது. ரஷ்யா 15 ஆண்டுகளில் இயந்திரத்தொழில் வளர்ச்சி அடைந்து விட்டது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே ரஷ்ய இலட்சிய வாதிகள் கண்டதெல் லாம் வெறும் கனவாகத்தான் முடிந்தது.

இந்தியாவில் இயந்திரத் தொழிலை வளர்க்க நடக்கும் முயற்சிகளின் பலனை சற்று விரிவாக ஆராய்வோம், இன்று எல்லா இயந்திரத் தொழில்களுமே, மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளன. இன்று உலகம் உள்ள நிலையிலோ, எல்லா தேசங்களும், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் ஒன்றுக் கொன்று போட்டியும் போருமாக இருக்கின்றன. அந்த நிலையில், தேசத்தின் பொருளாதாரம், நாணயம், சுங்கம், அயல் நாட்டுக் கொள்கை, அனைத்தின் மீதும் நமக்குப் பூரண அதிகாரம் இருந்தாலொழிய, நம் இயந்திரத் தொழில்கள் நிலைக்க முடியாது. இந்த அதிகாரம் இல்லாதவரை, நமது தொழில்கள் நிலையற்றிருக்க வேண்டியது தான்.

உலகத்தில் ஏற்பட்டுள்ள மந்தத்தின் காரணமாக இந்த அதிகாரம் அனைத்தும் பெற்றுள்ள நாடுகளே தங்கள் இயந்திரத் தொழிலைக் காப்பாற்றிக் கொள்ள மிகவும் சிரமப்படுகின்றன. அப்படியிருக்க, இந்த அதிகாரம் இல்லாத இந்தியாவில், இந்த சிரமம் இன்னும் எவ்வளவு அதிகமாக இருக்கும்? ஆதலால்தான், இந்தியத் தொழில்களிடையே, இயற்கையான சீரான வளர்ச்சி காணப்படுவதே யில்லை. வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி யின் காலம் முதற்கொண்டு சுதேச் இயக்கத்தின் பயனாய், எல்லா சுதேசிக் கைத்தொழில்களுக்கும் பலத்த ஆதரவும் பலமும் கிடைத்துள்ளன என்றபோதிலும், நம் கைத் தொழில் வளரவில்லை.

நம்மக்களிடையோ வாங்கும் சக்தி மிகவும் குறைவு. அப்படியிருந்தும், நம் மக்கள் பலவிதக் கஷ்டங்களையும் விரும்பியேற்று, சுதேசியை ஆதரித்துள்ளனர். சுதேசி கைத்தொழில்களுக்காக நம் பொதுமக்களே பிரசாரம் செய்தனர். அம் முறையில் அவர்கள் சம்பளம் பெறு மலே அந்தத் தொழில்களின் பிரசாரகர்களாக வேலை

செய்தனர். பொருட்காட்சி சாலைகளுக்கும் கூட்டு விற்பனைசாலைகளுக்கும் ஏற்பாடு செய்ய, காங்கிரஸும் இதர பொதுஜன ஸ்தாபனங்களும் ஏராளமான பணம் செலவு செய்துள்ளன. சட்டசபைகளிலும் இந்தியத் தொழில்களின் சார்பாக நம் தலைவர்கள் போராடி, மனமில்லாத ஒரு சர்க்காரிடமிருந்து வலிய பல சலுகைகளைப் பெற்றுள்ளனர். இவ்வளவு முயற்சிகள் எடுத்தும் பொதுமக்களுக்கும் ஏழைகளுக்கும் என்ன பலன்?.

அந்தத் தொழில்கள் தங்களைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும் உருப்படியாக வேலை செய்யவும் சிரத்தை எடுத்துக் கொள்ளவே யில்லை. இத் தொழில்களின் திறமையோ, உலகத்திலேயே மிகவும் கீழ்த்தரமானது. சுயமாக வேலை செய்வதற்கும் சக்தியில்லை; பிறர் தூண்டினாலும் வேலை செய்யத் திறமையில்லை. வேறு எப்படியிருக்க முடியும்? பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் நிதி மந்திரி டில்லியில் உட்கார்ந்து கொண்டு ஒரு கோடு கிழித்தால் மறு நிமிடமே தங்கள் தொழில்கள் அனைத்தும் அடியோடு கவிழ்ந்து விடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஆகவே 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற கொள்கையைக் கடைப் பிடித்து, தங்களுக்கு இருக்கும் கொஞ்ச காலத்தில், நேர்மையான வழிகளிலாவது, நேர்மையற்ற வழிகளிலாவது, கொள்ளை லாபம் திரட்டி விடுவதென இந்த முதலாளிகள் கங்கணம் கட்டி விட்டனர். இவர்கள் இவ்வாறு செய்வதால், இங்கு போடப்பட்டிருக்கும் அன்னிய மூலதனத்திற்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைப்பதால் இதைச் சர்க்காரும் அனுமதிக்கின்றனர், தங்களுக்கு ஒரு கோடி கிடைக்கும்போது, ஒரு சில காசுகள் இந்திய முதலாளிக்குக் கிடைப்பது

பற்றி அவர்கள் வருத்தப்படவில்லை. இவ்வாறு பிச்சை போடும் காசு, இங்கிலாந்தின் கைத்தொழிலுக்கோ, இங்கிலாந்தின் அரசியல் வர்த்தக உறவுகளுக்கோ பங்கம் விளைவிக்க முடியாத வரை பிரிட்டிஷ் சர்க்கார் கவலைப் படுவதில்லை.

இந்திய முதலாளிகளும் சர்க்காரும், நாட்டின் நலனையும் பாமர மக்களின் க்ஷேமத்தையும் பற்றி அசட்டையா யிருப்பதால், தொழிலாளரின் அடிப்படை யான உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டுள்ளன. வேலை நேரங்கள், வேலை வசதிகள், குடியிருப்பு வசதிகள், காய மடைந்தவருக்கு நஷ்ட ஈடு, சம்பளம், ஓய்வுச் சம்பளம் கல்வி, வைத்திய சிகிச்சை, பொழுது போக்கு வசதிகள் முதலியவற்றில் இந்தியத் தொழிலாளியின் நிலைமை மிக மோசமாயுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதர நாடுகளில் ஒழிக்கப்பட்ட சுரண்டல் முறை, இந்தியாவில் மட்டும் மிகக் கடுமையாய் இன்னும் நடந்து வருகிறது.

விவசாயத்தை எடுத்துக்கொள்வோம். சிறு சிறு துண்டுகளாக நிலம் கூறுபோடப் பட்டுத் தனித்தனிச் சொந்தக்காரர்கள் கையில் தரப்பட்டுள்ளது. பெருவாரி யான மாகாணங்களில் ஓர் வயல் இரண்டு ஏக்கராக்க ளுக்கும் குறைந்ததாக இருக்கும். கால் ஏக்கராவுக்கும் குறைந்த வயல்கள் ஆயிரக்கணக்கானவை யிருக்கும். நாள் ஆக ஆக வயல் இன்னும் குறுகிக் கொண்டே போகிறது. இதைத் தடுப்பதற்கும் எந்த விதமான சட்டமும் இல்லை. ஒரு விவசாயக் குடும்பத்தில், நிலத்தை ஆஸ்தியாகப் பெறாத அங்கத்தினர்களுக்கு நிவாரணம் செய்யக் கூடிய அரசாங்கம் தான் சட்டத்தை மாற்ற முடியும். வர்த்தகம், கைத்தொழில் முதலிய துறைகளில் தான் இந்த வசதி செய்யப்படும், சர்க்கார் இதை நன்கு

அறியும். ஆகவே நாளுக்கு நாள் நிலம் குறுகி வருவதைத் தடுக்க அது ஒரு முயற்சியும் செய்யவில்லை.

இந்தச் சிறு வயல்களும் ஒரே இடத்தில் இராமல் வெவ்வேறிடங்களில் சிதறி, வேறு வயல்களு . ன் பின்னிக் கிடக்கின்றன. இத்தகைய நிலங்களை வைத்துக்கொண்டு ஒரு விவசாயி என்ன செய்ய முடியும்? ஆகவே, சிறு வயல்கள் லாபகரமானவையா, பெருவாரியான உற்பத்தி லாபகரமானதா, அல்லது குடியானவர்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்களா யிருப்பது நல்லதா, அல்லது நிலத்தைச் சமூகததின் சொந்தமாக்குவது நல்லதா, என்ற தர்க்கப் பிரச்னை எழவில்லை. இந்த வகையிலாவது, அந்த வகையிலாவது விவசாயத்தில் ஒரு புரட்சி செய்யும் சக்தியும் அதிகாரமும் இருக்கின்றனவா என்பதுதான் பிரச்னை. இந்தியா முழுவதும் பூரண அரசியல் பொருளாதார அதிகாரம் கையில் இருந்தாலொழிய இந்த மாறுதலை ஏற்படுத்த முடியாது. பொருளாதாரத் திட்டத்தை வகுக்காமல் எதையும் சாதிக்க முடியாது. அதிகாரம் இல்லாமல் திட்டம் வகுப்பது பற்றிப் பேசுவது, ஏட்டுச் சுரக்காய்கள் போன்ற பொருளாதார நிபுணர்கள் கூடும் மகா நாட்டில் தான் சாத்தியம். அத்தகைய மகா நாடுகளில் தான் பெரும்பான்மையோருக்கு ஒன்றும் தெரியாமலிருக்கும்; தெரிந்தாலும் அதைச் சொல்வதற்குத் துணிவு இருக்காது. இருந்த போதிலும் ஏதோ மேதைகள் போலவும் தற்காலப் போக்கை நன்கு கற்றுணர்ந்தவர்கள் போலவும் பாவித்துக் கொள்வதில் இவர்கள் அனைவருக்கும் பிரியம் அதிகம்.

ஆகவே, இயந்திரமயமாக்கி, சமதர்ம முறைப்படி உற்பத்தி செய்வது என்பது முதல் பிரச்னையல்ல; அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் அதற்காக ஒரு தீவிரமான திட்டத்தை வகுப்பதும் தான் முதல் பிரச்னை.

அத்தகைய அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை, நாம் சமூகப் பொருளாதாரத் துறைகளில் புகுத்தும் சீர்திருத்தங்களெல்லாம் மிதவாதச் சீர்திருத்தங்களாகவே இருக்கும்.

இதை யெல்லாம் உணர்ந்து தான், அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும் இல்லாமலே செய்யக் கூடிய காரியங்களையும் வேலைத்திட்டங்களையும் காந்திஜி நமக்காக வகுத்துள்ளார். கதர், கிராமக் கைத் தொழில், திட்டங்கள் இந்த நோக்குடன் வகுக்கப்பட்டவைதான்.

சமீபத்தில் ஒரு சோஷலிஸ்ட் பிரபுவாகிய பாரிங்டன் என்பவர் காந்திஜியைக் கண்டு, கிராமக் கைத்தொழில் சங்கத்தின் உண்மையான நோக்கமென்ன என்று கேட்டார், "இன்று உபயோகமில்லாமல் சிரமியும் பொருள்களையும் செல்வமாக மாற்றுவதே அதன் நோக்கம்" என்று காந்திஜி கூறினர்.

"விவசாயிகள் கடன் பிரச்னையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள்?" என்று பிரபு கேட்டார். அதற்குக் காந்திஜி பதில் சொன்னர். "அப் பிரச்னையை நாங்கள் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அதற்கு அரசாங்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியம். அரசாங்கத்தின் உதவி யில்லாமல் மக்களே செய்துகொள்ளக் கூடிய காரியங்களில் தான் இப்பொழுது நான் முனைந்துள்ளேன். அரசாங்கத்தின் உதவி வேண்டியதில்லை என்பதில்லை. ஆனுல் என் நிபந்தனைகளின் பேரில் அந்த உதவி கிடைக்காது என்பதை நான் அறிவேன்."

காந்திஜியின் பொருளாதார திட்டத்தின் அடிப்படைக் கருத்து மேலே சொன்ன சில வாக்கியங்களில் அடங்கியுள்ளது. அவர் வழக்கப்போல் பேசும் ஆத்மீக பாஷையில் பேசியிருந்தால் அந்த சமதர்ம பிரபுவுக்கு அது விளங்கி யிருக்காது. "மக்கள் எளிய வாழ்வு வாழ

வேண்டும்; வறுமையை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றெல்லாம் அவர் பேசியிருந்தால் பிரபுக்கு விளங்கியே யிராது. ஆகவேதான் ஒரு அன்னியரும் புரிந்துகொள்ளக் கூடிய அரசியல், பொருளாதார பாஷையில் அவர் பேசினர். இன்று தேசத்தில் வீணுகப் போகும் பொருள்களைப் பயன்படுத்தக் காந்திஜி வகுத்துள்ள திட்டம் பற்றி எந்தப் பொருளாதார நிபுணரும் கோபித்துக்கொள்ள முடியாது. அதே பேட்டியின் போது, தமது திட்டத்தைத் தவிர வேறெந்த நிர்மாணத் திட்டமும் தேசத்தின் முன் இல்லை என்பதையும் அவர் விளக்கினர்,

இன்றுள்ள அரசியல் நிலைமையில், ஒரு புரட்சிகரமான நிர்மாணத் திட்டம் இருக்க முடியாது என்பது என் கருத்து. எல்லாம் சீர்திருத்தத் திட்டங்களாகவே இருக்கமுடியும். இன்று தேசத்தில் வீணுகப் போகும் பொருள்களைப் பயன்படுத்த வழிகண்டு பிடிக்கும் திட்டங்களாகவே இருக்கமுடியும். படிப்படியாகத்தான், நிதானமாகச் செல்லமுடியும். இக் காரணத்தால் தான் எந்த நிர்மாணத்திட்டத்தையும் சமதர்மவாதிகள் எதிர்க்கின்றனர். உற்பத்தி சாதனங்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்பதே தங்கள் இலட்சியம் என்று அவர்கள் கூறுவார்கள். உற்பத்தி, விநியோகம், கொள்முதல், முதலிய எல்லா பொருளாதார வேலைகளும் அரசாங்கத்தின் கண்காணிப்பில் நடக்கவேண்டுமென்பதும், ஆகவே அரசாங்கம் உற்பத்தியாளர், அதாவது தொழிலாளரால் தங்கள் நலனுக்காகவே நடத்தப்பட வேண்டுமென்பதும் இதன் தாத்பரியம்,

இதைச் செய்வதற்கு முன்பு, தொழிலாளரோ, அவர்கள் சார்பில் வேறு யாரோ அரசியல் அதிகாரத்தை முதலில் கைப்பற்ற வேண்டும். சமதர்ம சாஸ்திரத்தின்

கொள்கைகளும் கோட்பாடுகளும் இவைதான். ஆதலால் தான் சமதர்ம வாதிகளும் பொதுவுடமை வாதிகளும் தொழிற்சங்கங்களின் வேலையை ஆதரிப்பதில்லை. இச் சங்கங்கள் தொழிலாளரின் சில்லரைக் குறைகள் பற்றிக் கவலைப்படும் மிதவாத ஸ்தாபனங்கள் என்று அவர்கள் குறை கூறுகிறார்கள் .சில சமயங்களில் தொழிற்சங்க வேலை வேலை நிறுத்தத்துக்கு ஆயத்தம் செய்து, இறுதி வர்க்கப் போருக்கு மக்களை பக்குவப் படுத்துகிறது என்று கருதி அவ் வேலைக்கு இடந்தருகின்றனர், ஆனால் பெரும்பாலும் இந்த வேலையின் மூலம் தொழிலாளருக்கு ஒரு சில சில்லரை வசதிகள் கிடைத்துவிடுவதால் அது அதிருப்தியை மழுக்கி, புரட்சி வரும் தினத்தை ஒத்திப் போடவே உதவுகிறது என்று கருதி அவர்கள் அவ் வேலையை எதிர்க்கின்றனர்,

இயந்திரத் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருக்கும் போது எந்த வேலை நிறுத்தமும் வெற்றி பெருது என்பது சமதர்மவாதிகளுக்கு நன்கு தெரியும். அத்தகைய சந்தர்ப் பத்தில், சில சமயங்களில், வேலை நிறுத்தத்தை முதலாளி களே வரவேற்கின்றனர்; தூண்டியும் விடுகின்றனர். அந்த சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தம் தோல்வியுறும் என்பதையும் அதனுல் கஷ்டம் அதிகரிக்கும் என்பதையும் அறிந்து சமதர்மவாதிகள் வேலை நிறுத்தத்தை ஆதரிக் கின்றனர். அதனுல் ஏற்படும் கஷ்டம் தவிர்க்க முடியா தது என்று அவர்கள் எண்ணுகின்றனர். புரட்சி வேண்டுமென்ருல் அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்தே தீரவேண்டுமென்றும், தனிப்பட்ட நபர்கள் அனைவரும் புரட்சியின் கருவிகளே என்றும் அவர்கள் நம்புகின்ற னர்.

ஆனுல் உண்மையான தொழிற் சங்க வாதியோ, வேலை நிறுத்தம் வெற்றி பெறுமா என்பதையே கவனிப்

பான். ஏழைகளை வெறும் கருவிகளாகப் பயன்படுத்த அவன் விரும்பவில்லை. தனிப்பட்ட நபர்களுக்கு சமூக வாழ்வுக்கு அப்பாற்பட்ட சொந்த வாழ்வு ஒன்றுண்டு என்பதை அவன் உணர்கின்றான். மனிதரின் வாழ்க்கை வேறொன்றுக்கும் சாதன மல்ல; அதுவே முடிவானது என்று அவன் நம்புகின்றான். வெற்றிக் குரிய தருணம் வரும் வரை காத்திருக்கின்றான். தொழிலாளர் நிலைமையில் சற்றேனும் சீர் திருத்தம் ஏற்படுத்த வேலை நிறுத்தம் ஒரு சாதனம் என்று அவன் உணர்கின்றான். இறுதியான வர்க்கப் போராட்டத்திற்கு மக்களை ஆயத்தம் செய்வதற்கு வேலை நிறுத்தம் ஒரு நல்ல ஒத்திகை என்று அவன் நினைத்து, அதை அடிக்கடி நடத்துவ தில்லை.

ஆகவே, பிரத்தியக்ஷ நிலைமைக் கேற்ற முறையில் தனது தத்துவத்தை மாற்றி அமைக்கச் சமதர்ம வாதி தயாராயிருந்தாலொழிய, அவன் நகரத் தொழிலாளரிடம் எந்த விதமான நிர்மாண வேலையும் செய்ய முடியாது. நகரத்திலேயே அவனால் நிர்மாண வேலை செய்ய முடியவில்லை என்றால் கிராமத்தில் எங்கு செய்ய முடியப் போகிறது? கிராம வாழ்க்கையின் பிரச்னைகளையே அவனால் சமாளிக்க முடியாது. உலக திருஷ்டி கொண்டே நோக்கிக் கொண்டிருக்கும் அவன் கிராமத்தில் அன்றாடம் எழும் சிறு பிரச்னைகளைத் தீர்க்க சக்தியற்றவனாக இருப்பான். தன் முயற்சிகளில் வெற்றி பெறாததால் சோர்வடைந்து அவ் வேலையையே முடிவில் கைவிடவும் கூடும். ஆகவே பொதுக் கூட்டங்களோ, கிளர்ச்சிகளோ, வேலை நிறுத்தங்களோ நடத்துவதில்தான் அவன் தன் சக்தியைச் செலுத்த முடியும். இத் தகைய கிளர்ச்சிகளை அவ்வப் போது தான் நடத்த முடியும்.

விவசாய பருவம் ஆரம்பித்தவுடன், புரட்சி ஆர்வம் பொங்க, தான் என்ன பேசினாலும், குடியானவன் தன்

உழுவை விட்டு வரும்படி அவனால் செய்ய முடியாது. பெரிய கிளர்ச்சிகள் நடந்தால் தான் பலன் ஏற்பட முடியும். பெரிய கிளர்ச்சிகள் அடிக்கடி நடந்து கொண்டிருக்க முடியாது.

ஒரு கிராமத்தில் ஒரு கிளர்ச்சிக்காக சுமார் ஐம்பதாயிரம் பேர் கூடுகின்றனர் என்று வைத்துக் கொள்வோம், அவர்களனைவரும் நடந்து சென்று, இரவிற்குள் தங்கள் கிராமத்திற்குத் திரும்ப வேண்டுமென்றால், பிற்பகல் 3 மணிக்காவது கூட்டத்தைக் கலைக்க வேண்டும். அவ்வளவு பேரையும் ஒரு கிராமத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருந்து சோறு போடுவது என்பதும் சாத்தியமில்லை. இந்தக் கூட்டங்களால் ஒருமித்த கருத்தோ, ஒரு முகப்பட்ட முயற்சியோ எழவும் முடியாது. நிர்மான வேலைகளுக்கு அவை சற்றும் பலனற்றவையாக இருக்கும். பிரசாரம் செய்வதைத் தவிர வேறொன்றும் பலன் ஏற்பட முடியாது. இக்கூட்டங்களில் ஆவேசம் ஏற்பட்டு விட்டால், ஏதாவது பலாத்காரச் செயல்கள் நேரிடலாம். இவ்வாறு எழும் புரட்சிகளெல்லாம் தாங்கள் சிந்தும் ரத்த வெள்ளத்திலேயே மூழ்கி விடும்.

கிராமத்திலாயினும் சரி, நகரத்திலாயினும் சரி, சமதர்மவாதி, தன் தத்துவம் பற்றிப் பிரசாரம் செய்வதைத் தவிர வேறு வேலையிருக்காது. அறிவும் ஆற்றலும் படைத்த ஒரு சிலர் தான் இந்த வேலையைச் சரிவரச் செய்ய முடியும். பல பட்டறை பேர்வழிகளிடமோ புதிதாகச் சேர்க்கப்பட்ட கிராமத் தொண்டரிடமோ, பிரசார வேலையை ஒப்படைத்தால், ஒரு மூட நம்பிக்கை போய் மற்றொன்று ஏற்படுமேயொழிய அறிவு விளக்கம் ஏற்படாது கொள்கை வெறிதான் வலுக்கும். அத்தகைய நிலைமையில், சமதர்ம தத்துவம் எல்லாம் காற்றில் பறந்து விடும்.

சாதாரண சமதர்மத் தொண்டர்கள் என்ன செய்ய வேண்டும்? சாதாரணத் தொண்டர்களுக்கு வழி காந்திஜி காட்டுவதுதான். வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்கு அவர் சரியான வேலையைத் தருகிறார். தலைவர்கள் மட்டுமல்ல, தொண்டர்களும் பின்பற்றக் கூடியது அவருடைய நிர்மாணத் திட்டம். ஒவ்வொரு தொண்டருக்கும் தினசரி வேலையிருக்கும். ஏழை மக்கள் தரக்கூடிய நன்கொடையின் அளவிற்கு இந்த வேலைக்கு ஊதியம் தரப்படும். எளிய தூய்மையான வாழ்க்கையை அவர்கள் நடத்துகிறார்கள். வேலையில்லாமல் அவர்கள் என்றுமே திண்டாட வேண்டியதில்லை.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் காந்திஜி வகுத்துள்ள திட்டம், மற்றெந்தப் புரட்சிவாதியும் வகுத்துள்ள திட்டத்திற்கு எள்ளளவும் சளைத்ததல்ல. அது சாத்விகத் திட்டம் என்பது தான் வித்தியாசம். சாத்விகக் கொள்கையின் மேன்மைப் பற்றியோ இன்றுள்ள நிலைமைக்கு உசிதம் பற்றியோ நான் இங்கு ஆராய விரும்பவில்லை. இன்றுள்ள நிலைமைக்கு அது உசிதம் என்பதை சில சமதர்மவாதிகளே ஒத்துக்கொண்டுள்ளனர். இந்தத் தத்துவம் சரியா, அந்தத் தத்துவம் சரியா என்பதல்ல பிரச்னை. வருங்காலத்தில் சரித்திர அறிஞனே தீர்க்கதரிசியோ, தான் அப்பிரச்னைக்குப் பதில் சொல்ல முடியும். நானே இரண்டும் இல்லை. ஒத்துழையாமை எனும் இப்புது ஆயுதம் நேரடியான போர் முறையா, புரட்சிகரமான கிளர்ச்சி முறையா என்பது தான் பிரச்னை. அது புரட்சிகரமானது தான் என்று நம்புகின்றேன். ஒத்துழையாமை என்பது பகிரங்க சதி என்று சிலர் கூறியுள்ளனர். அது பகிரங்க சாத்விக சதி யென்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, காந்திஜி ஒரு

புரட்சிகரமான திட்டத்தையும் நிர்மாண வேலைக்காக ஒரு சீர்திருத்தத் திட்டத்தையும் வகுத் துள்ளார்.

இவ்வாறு இரு முகமான அரசியல் திட்டம் வகுக்கப் பட்டுள்ளதால் தான், மேல் நாட்டில் இடது சாரி, வலது சாரி என்றிருக்கும் வேறுபாடு காங்கிரஸ் அரசியலுக்குப் பொருத்தமாயில்லை. சில அரசியல் வாதிகள் நிர்மாண வேலைகள் செய்யும் போது, அவர்கள் மிதவாதிகள் என்று சொல்லத் தோன்றும்; ஆனால் நேரடியான புரட்சி இயக்கம் ஏற்பட்டால் அவர்கள் தீவிர வாதிகளாக்க காணப்படுவார்கள். கொள்கையில் இடது சாரியின ராக இருக்கும் சிலர், இயக்கம் நடக்கும்போது அந்தத் திவிர வாதத்தைக் காட்டுவதில்லை. 1933-ல் புனாவில் நடந்த மகா நாட்டில், 1932 இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று காந்திஜியைப் பின் பற்றுவோர் கூறினார்கள். ஆனால் இயக்கத்தை நிறுத்திவிட வேண்டு மென்று சமதர்ம வாதிகள் கூறினர். அதனால் தான் காந்திஜியைப் பின் பற்றுவோர் மீது மக்களுக்குள்ள அபிமானத்தை குறைக்கவோ, சமதர்ம வாதிகளால் நீக்கவோ முடிய வில்லை.

காந்திஜியைப் பின் பற்றுவோரில் பலர், மிகுந்த அநுபவமும் உறுதியும் படைத்த போராட்ட வீரர்கள். பஞ்சம், பூகம்பம் வெள்ளம் முதலியவை ஏற்பட்ட போது அவர்கள் சிறந்த நிர்மாண வேலையும் செய்துள்ள னர். சர்க்காருடன் உறுதியான போராட்டம் நடத்த சந்தர்ப்பம் வாய்த்த போதும் அவர்கள் அப் போராட் டத்தில் சளைத்த தில்லை. நிர்மாண வேலைகளில் சிறந்த தலைவரான காந்திஜி இயக்க மொன்றை ஆரம்பித்தால் அவரை விட புரட்சிகரமான தலைவர் எவரும் இருக்க முடியாது. தம்மைப் பற்றியோ, சொந்த நலனைப் பற் றியோ, அவருக்குச் சற்றும் கவலை இருப்பதில்லை.

அரசியலில் நேரடியான நடவடிக்கையில் தங்களுடன் பங்கெடுத்துக் கொள்ள முடியாத மற்ற கட்சிகளுடனும் தொகுதிகளுடனும் தொடர்பை அகற்றிவிட, காந்திஜியும் அவர் நண்பர்களும் விரும்பியதில்லை. தீண்டாமை விலக்கு, ஹிந்தி பிரசார வேலை, கதர், கிராமக் கைத் தொழில்கள், கிராமப் புனருத்தாரணம் முதலிய வேலைகளில் மிதவாதிகள், முதலாளி வர்க்கத்தினர், வகுப்புவாத சீர்திருத்த வாதிகள் முதலியோர் கூட சேர்ந்து கொள்ள வேண்டுமென்பது காந்திஜியின் கருத்து. மற்றொரு பிரச்னையிலும் காந்திஜி அனைவருடைய ஒத்துழைப்பையும நாடுகிறார். எந்த வர்க்கமாயிருந்தாலும், அது, அந்நிய சர்க்காரால் படும் கஷ்டங்களில் மற்ற வர்க்கத்துடன் சேர்ந்ததே யாகும். அக் கஷ்டங்கள் அனைவருக்கும் பொதுவானவை. அந்நிய ஆதிக்கத்தால் கஷ்டப் படுவோர் பாமர மக்கள் மட்டுமில்லை; அப்படியிருந்திருந்தால் அரசியல் வாதிகள் அனைவரும் பாமர மக்கள் வகுப்பிலிருந்து எழுந்தவர்களாயிருக்க வேண்டும்.

பாமர மக்கள் மற்றவர்களை விட அதிகம் கஷ்டப் படுகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் எல்லா வர்க்கங்களுக்கும் அதிகமான கஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. அதிலும் சுயமரியாதை யுள்ளவர்கள் எந்த வகுப்பிலிருந்தாலும் சரி, அவர்கள் படும் கஷ்டம்தான் மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் தன் மதிப்பு, தேசப் பற்று, மதாபிமானம் அனைத்தும் அவமதிக்கப் படுகின்றன. ஒரு தேசிய இயக்கம் எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டி, ஒரு முகப்பட்ட முயற்சியில், பொது இலட்சியத்துக்காக, ஈடுபடுத்த வேண்டும். இன்று அந்த இலட்சியம், தேசம் அரசியல் விடுதலை பெற வேண்டுமென்பது. எல்லா வர்க்கத்தினரையும் ஒன்றாய் ஆகர்ஷிப்

பதற்கு வேண்டிய பலம் தேசாபிமானத்திடம் உள்ளது. ரஷ்ய பொதுவுடைமைக் காரர்களிடம் கூட தேசப்பற்று மிகவும் அதிகமாகக் காணப் படுகிறது. நம்முடைய சமதர்ம வாதிகள் தான் இதை ஒத்துக்கொள்ள வெட்கப் படுகிருர்கள்.

பொது இலட்சியத்திற்காகப் பல்வேறு வர்க்கங்களும் ஒன்று கூடியதற்குப் பல நாடுகளின் சரித்திரத்திலிருந்தும் உதாரணங்கள் காணலாம். ஹாலந்து, இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ் முதலிய நாடுகளில், அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கவோ, பூர்விகக் குடியை விரட்டவோ மக்களனைவரும் ஒன்றுபட்டு எழுந்தனர். பாமர மக்கள் தான் அதிகக் கஷ்டப்பட்டனர் என்பதும், அவர்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கவில்லை யென்பதும் உண்மைதான். பிரபுக்களிடமிருந்தும் மன்னரிடமிருந்தும் பறிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரான்ஸில், பாமர மக்கள் கைப்பற்ற முயன்றனர். ஆனல் பாமர மக்களைவிட நடுத்தர வகுப்பினர் அதிகக் கட்டுப்பாடாகவும் பலம் பொருந்தியவர்களாகவும் இருந்ததால், அம் முயற்சி தோல்வி அடைந்தது

ரஷ்யாவிலும் கூட ஜார் மன்னர் வீழ்ச்சிக்குப் பின், அதிகாரம் நடுத்தர மக்கள் கையில் வந்தது. ஆனல் அவர்கள் கட்டுப்பாடாக இல்லாததால், அது வெகுகாலம் அவர்களிடம் நிலைக்கவில்லை. தகுந்த தலைவர்களும் அவர்களிடமில்லை. போல்ஷெவிக்குகளோ, அதிகக் கட்டுப்பாடாகவும் வேலைத்திறன் பெற்றும் இருந்தனர். தெளிவான திருஷ்டியும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திறனும் இருந்தன. தகுந்த தலைவர்களும் இருந்தனர். ஆகையால் அவர்கள் மற்றொரு புரட்சி நடத்தித் தொழிலாளர் சார்பில் அதிகாரத்தைத் தங்கள் வசப் படுத்திக் கொண்டனர். ஜாரையும் ரஷ்ய அதிகார வர்க்கத்தையும் வீழ்த்திய முதல் புரட்சியிலிருந்தும்

போல்ஷெவிக்குகள் ஒதுங்கி நிற்கவில்லை. அவர்களும் அதில் சேர்ந்து கொண்டனர்.

இங்கிலாந்தில் என்ன நடக்கிறது. நெருக்கடியான நேரங்களில், எல்லாக் கட்சிகளையும் கொண்டு ஒரு தேசியக் கூட்டுச் சர்க்கார் ஏற்படுகின்றது. அக்கட்சிகள், தங்களுக்கிடையே உள்ள பல்வேறு வேறுபாடுகளையும் தற்போதைக்கு மறந்து விடுகின்றன. எல்லா புரட்சிகளிலுமே, முற்போக்கான சக்திகளும் பலம் பொருந்திய கட்சிகளும் ஒன்று சேர்ந்து கொள்கின்றன. அதிக வேலைத்திறனும், சிறந்த தலைவர்களும் எந்தக் கட்சியில் இருக்கின்றனரோ, அந்தக் கட்சிக்கு வெற்றி கிடைக்கிறது. ஏனென்றால் நெருக்கடியான நேரங்களில், வெற்றி பெறுவது தலைவர்களைப் பொறுத்ததே.

அவ்வாறு எல்லாக் கட்சிகளும் கூடாமல் ஒன்றையொன்று சந்தேகித்துக் கொண்டு, தனியாகவும் கலப்பில்லாமலும் இருக்க விரும்புகிறது என்று வைத்துக் கொள்வோம். ஜமீன்தராகளும் முதலாளிகளும், தங்கள் உரிமைகளுக்கு அந்நிய சர்க்காரே சிறந்த உத்தரவாதம் என்று எண்ணுவதால் எந்த சுதந்திரப் போராட்டத்திலும் சேர மாட்டார்களென்று சமதர்மவாதிகள் கூறுகின்றனர். வழக்கறிஞர்கள் பேராசிரியர்கள், வைத்தியர்கள் போன்ற நடுத்தர வகுப்பினரும் அவ்வாறே செய்வார்கள். நடுத்தர வகுப்பிலும் சற்று கீழ்த்தரத்தில் உள்ளவர்கள் பற்றி எப்பொழுதுமே நிச்சயமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் அவ்வாறுதான் நடந்தது.

உற்பத்திச் சாதனங்களைப்போல் நிலமும் பொதுவுடைமையாக்கப்படுமென்றால், சமதர்மத் திட்டத்தை, சொந்த நிலம் கொண்ட விவசாயிகள் எதிர்ப்பது நிச்சயம். வகுப்பு வாதிகளோ—அவர்கள் ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லிம்களாயினும் சரி, சிக்கியராயினும் சரி, கண்டிப்

பாக எதிர்ப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு வருப்பாக ஒதுக்கிக் கொண்டே வந்தால், இந்தியா முழுவதுமே சுதந்திரப் போராட்டத்தை எதிர்க்கும் என்று ஏற்பட்டு விடும். ஒரு சிலர் மட்டுமே உறுதியாக நிற்பார்கள். புது உலகையே உருவாக்கப் போகும் கொள்கையில் அவர்களுக்குத்தான் நம்பிக்கை யிருக்கிறதென்பதால் அவர்கள் தான் வெற்றியும் பெறுவார்கள்.

அவ்வளவு உறுதியான நம்பிக்கை, யேசுநாதர், குரு நபி, அல்லது காந்திஜியின் சீடர்களிடம் இருக்கலாம். பிரத்தியக்ஷ நிலைமையே சர்வம் என்று நம்பும் சமதர்மவாதிகளிடம் அவ்வளவு கொள்கை வெறி யிருந்தால், சமதர்மமும் ஒரு மதவெறிபோல்தானாகி விடும். அதில் கடவுள் இல்லை யென்ற ஒரு வித்தியாசம் தான் இருக்க முடியும். மற்றபடி, அந்த மதவெறி, மூர்க்கப் பிடிவாதம் முதலியவை யெல்லாம் இருக்கத்தான் செய்யும்.

சமதர்மத் தத்துவத்தை எடுத்துப் பார்த்தால் அதில் இவற்றிற்கெல்லாம் இடமிருக்காது என்பது உண்மை தான். ஆனால் நடைமுறையிலோ, அது மற்ற கொள்கைகளையோ மதங்களையோ போல் குறுகிய நோக்கம், கொள்கை வெறி, புரோகித, வர்க்கம் முதலியவற்றைத் தான் ஏற்படுத்தும். மற்ற மதங்கள் செய்ததைக் காட்டிலும் அதிகக் கடுமையாக, மற்றவர்களை இம்சிக்கும். மனித உயிரை சற்றும் மதிப்பில்லாமல் நடத்தும். பலமும் கட்டுப்பாடும் விஞ்ஞான சாதனங்களும் அதிகமிருப்பதால் நாச பலமும் அதிகமிருக்கும். காந்திஜீன் சத்தியம், அஹிம்ஸை என்ற கொள்கைகளும் அவர்களிடை இருக்காது. சாத்விகக் கொள்கை வெறி ஏற்பட்டாலாவது பரவாயில்லை. ஆனால் பலாத்காரக் கொள்கை வெறி ஏற்பட்டாலோ அது மிகக் கொடுமையானது.

8. காங்கிரசும் பரமார்த்திகமும்

ஒரு வியாதியின் பெயரைக் கண்டு பிடித்த உடனே வியாதியைப் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்து விட்டதாக அரை குறை வைத்தியர்கள் நினைத்து விடுகின்றனர். அதுபோலவே அரை குறை விஞ்ஞானிகளும், ஒரு விஞ்ஞான முறைக்குப் பெயர் கொடுத்தவுடனேயே அதை விளக்கி விட்டதாக எண்ணி விடுகிறார்கள். பிற கட்சிகளின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் தாக்கும்போது, சில அரசியல் கட்சிகளும் தனிப்பட்ட நபர்களும் இதே கொள்கையைப் பின்பற்றுகின்றனர். ஒரு திட்டத்தின் பொருத்தம், பயன், முதலியவற்றை ஆராயாமல், ஏதோ சில அடுக்குச் சொற்களையும் அடைமொழிகளையும் உபயோகித்து, அதன்மூலம் அத்திட்டத்தைத் தாக்கி விட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள். ஒரு திட்டத்தைப் புரட்சிகரமானது என்று சொல்லி விட்டால் போதும்; அது உண்மை நிலைமைக்குப் பொருத்தமானதா, சரித்திர பூர்வமான அடிப்படையைக்

கொண்டதா, உடனடியாக வெற்றி பெருவிடினும் நாளடைவிலாவது வெற்றி பெறுமா என்பவற்றை யெல்லாம் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணி விடுகிறுர்கள். உங்கள் எதிரிகள் திட்டம், மிதவாதத் திட்டம், பிற்போக்கானது, காற்றில் பறக்கும் திட்டம் என்று சொல்லி விடுங்கள்; அதைப் பற்றி, வேறு ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமே யில்லை. சரித்திரம் காட்டும் வழிக்கும், தற்போதுள்ள நிலைமைக்கும், அது சற்றும் பொருத்தமற்ற கொள்கை யென்பதை நிரூபிப்பதற்கு இந்த ஒரு சில அடைமொழிகளே போது மென்று ஏற்பட்டுள்ளது. அத்திட்டம் தேல்வியுறுவது திண்ணமென்றும், தப்பித்தவறி வெற்றி பெற்றுவிட்டாலும் அது மாயை யென்னும் மக்களை ஏய்க்கச் சூழ்ச்சி யென்றும் வாதாடுகின்றுர்கள்.

காங்கிரஸின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள், அவை மிதவாதக் கர்நாடகக் கொள்கைகள் என்று கூறுகின்றனர். தங்கள் திட்டம் தான் புரட்சிகரமானது என்று அவர்கள் வாதாடியுள்ளனர். தங்களிடம் ஒன்றும் இல்லாவிடினும் அதுவே புரட்சிகரமானது என்று அவர்கள் சாதிக்கிறுர்கள். இப் பிரசாரத்தை அடிக்கடி தோழர் ராயிடமிருந்து கேட்கலாம். 'மிதவாதக் கொள்கை' என்ற சொற்றெடர் அடிக்கடி அடிபட்டும் புளித்துப் போய்விட்டதால், அவர் ஒரு புதுச் சொற்றெடரைப் பிரயோகம் செய்துள்ளார். காங்கிரஸின் கொள்கை, பரமார்த்திகக் கொள்கையாம்; அதாவது, ஆத்மீகத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இவ்வுலகிற்கு லாயக்கற்ற கொள்கையாம். அப்படிச் சொல்லி விட்ட மாத்திரத்திரத்திலேயே, காங்கிரஸ் கொள்கையைத் தாக்கித் தரை மட்டமாக்கி விட்டதாக அவருடைய எண்ணம். பரமார்த்திகக் கொள்கை யென்றுலே அரசிய

லில் பிற்போக்குக் கொள்கையாகத்தானே யிருக்கவேண்டும். 'பரமார்த்திகம்' என்ற பதத்தின் பொருளைச் சரிவர உணர்ந்துகொள்வதே கடினம். சாதாரண ஹிந்து அல்லது முஸ்லிம் அப் பதத்தைப் பிரயோகித்தால், மசூதிமுன் சங்கீதம், கோபூஜை, அல்லது பசுவைக் கொலை செய்வது முதலியனதான் அவர் மனத்தில் தோன்றும். அறியாதவர்களுக்கோ, பரமார்த்திகம் என்பது, எந்த மூட நம்பிக்கையையும், பண்படாத எண்ணத்தையும் குறிக்கக்கூடும். ஞானிகளுக்கோ பரமார்த்திகம் என்பது, தத்துவஞானமாகவும் உண்மை விளக்கமாகவும் தோன்றும்.

ஆகவே காங்கிரஸின் கொள்கை பரமார்த்திகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள தென்று ஒரு நண்பர் சொன்னால், அவர் எதைக் குறிக்கிறார் என்பதை உணர்ந்து கொள்வதே கடினம். நடை முறையில் சாத்திய மல்ல வென்று அவர் கூறுகிறாரா? பரமார்த்திகம் நடை முறையில் அசாத்தியமாய்த் தானிருக்க வேண்டுமென்ற அவசிய மில்லையே! விஞ்ஞான ரீதியாக அது உண்மையை விளக்க வில்லை என்று அவர் கூறுகிறாரா? மதாச்சாரியார்களே விஞ்ஞான அறிவுக் களஞ்சியங்களாக இருந்த காலம் ஒன்றிருந்தது. ஆகவே பொறுப்பான ஒரு ஸ்தாபனத்தின் திட்டங்களைக் குறை கூறும் போதும், தெளிவான சொற்களை உபயோகிப்பது அவசியம். மேலும் ஒரு பரமார்த்திகக் கொள்கை, பொருளாதாரத் துறையிலோ, அரசியல் துறையிலோ, பிற்போக்காயிருக்க வேண்டு மென்ற அவசிய மில்லையே. பண்டைக் காலத்தி லிருந்த பரமார்த்திகக் கொள்கைகள் அரசியலில் பிற்போக்கா யிருந்ததில்லை. பரமார்த்திகக் கொள்கையென்றால் பிற்போக்கான கொள்கையா யிருக்க வேண்டிய அவசிய மில்லை யென்பது ஒரு புறமிருக்க, காங்கிரஸின் கொள்கையிலும், வேலைத் திட்டத்திலும் அதன்

தலைவர்களிடத்தும் எவ்வளவு தூரம் பரமாத்திகம் இருக்கிறது என்பதைக் காண்போம்.

காங்கிரஸின் இலட்சியம், நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது; ஆனால் என்றும் அரசியல், பொருளாதார இலட்சியமாகவே இருந்து வந்துள்ளது. ஆதியில் காங்கிரஸ், மத சமூக சீர்திருத்தங்கள் பற்றிக் கவனிக்காமல், அவற்றை வேண்டுமென்றே, குறிப்பாக விலக்கி வைத்திருந்தது. இன்று காங்கிரஸ் கோரும் பூரண சுயராஜ்யத்திற்கும், ஆத்மீக மெய்ஞ்ஞானத்திற்கோ, தன்னடக்கத்திற்கோ சற்றும் சம்பந்த மில்லை. பூரண சுயேச்சையும் தனியரசுரிமையும் கொண்ட ஒரு தேசமாக இருக்க வேண்டுமென்ற அரசியல் இலட்சியத்தையே அது நிர்ணயிக்கின்றது.

காங்கிரஸின் சாதனங்களும் வேலை முறைகளும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன. முதலில் அதிகாரிகளிடம் மனுச் செய்து கொள்வது, மன்றாடி கேட்டுக் கொள்வது ஆக்ஷேபம் தெரிவிப்பது, சட்ட பூர்வமான கிளர்ச்சி செய்வது முதலிய முறைகளே கையாளப் பட்டு வந்தன. இன்று காங்கிரஸ் ஓர் புது ஆயுதத்தைக் கண்டு பிடித்துள்ளது. அது தான் சட்ட மறுப்பும் சத்யாக்ரஹமும் என்ற ஆயுதம். காங்கிரஸ் இன்று கடைப் பிடித்துள்ள சத்யாக்ரஹப் போர்முறை, தனிப்பட்டவர் முறையோ, பரமார்த்திக முறையோ அல்ல. காங்கிரஸின் சத்யாக்ரஹம், அரசியல் பொருளாதாரத் துறைகளுக் கேற்றபடி வகுக்கப் பட்டுள்ள கூட்டு முறை. சுயராஜ்யம் என்பதைப் போலவே சத்யாக்ரஹம் என்ற வார்த்தையும் ஆத்மார்த்தத் துறையிலிருந்து வந்த சொல். ஆனால் காங்கிரஸ் அம் முறையை ஏற்றுக் கொண்டுள்ளது, ஆத்மீக விடுதலைக்காகவோ முக்திக்காகவோ அல்ல. அரசியல், பொருளாதார அநீதிகளை

நீக்குவதற்குச் சாத்வீக முறையில் நேரடியான போராட்டம் நடத்துவதே சத்யாக்ரஹம். பலாத்காரத்தைக் கையாள்வது உசிதமல்லவென்பதை உணர்ந்தே அதை அரசியலிலிருந்து நீக்குகிறது காங்கிரஸ். தனிப்பட்டவர் சொந்த வாழ்வில் அஹிம்ஸை முறையைக் கையாள்வது, முக்கியமாக அவரவர் மனப் பான்மையைப் பொருத்ததே யொழிய, வெளி நிலைமையையோ, சூழ் நிலையையோ அவ்வளவாகப் பொருத்த தில்லை. சமூகம் சாத்விக முறையைப் பின் பற்றுகிற தென்றால், தனிப் பட்டவர்கள் அஹிம்ஸா முறையைப் பின்பற்ற முடியாது என்பதில்லை. ஆனால் அவை யிரண்டும் எப்பொழுதும் ஒத்துப் போவதில்லை. தனிப் பட்டவர் நடத்தையில், ஒரு செய்கைக்கு அகத் தூண்டுதலே அடிப்படையாக இருக்கிறது. அத் தூண்டுதலும் செய்கையின் நோக்கமும், அதற்கு ஆதாரமாக இருந்த எண்ணமும் பிரதானமாக இருக்கின்றனவே யொழிய, அச் செய்கையில் என்ன பலன் ஏற்பட்டது என்பது அவ்வளவு முக்கியமில்லை. சமூக வாழ்வில், அதாவது பொது நடத்தையில், செய்கையின் நோக்கமும் முக்கியமென்ற போதிலும், அச் செய்கையால் என்ன பலன் ஏற்பட்டுள்ளது என்பதே பிரதானம். தனிப் பட்டவர் அஹிம்ஸை, அவரவர் மதம், சமூகம், மனப் பான்மைக் கிணங்க மாறுபட்டிருக்கும். மாமிச உணவு அஹிம்ஸைக்கு மாறுபட்ட தல்லவென்று முஸ்லிம்களும் கிறிஸ்துவரும் எண்ணுவர். ஹிந்துவோ வேறு விதமாக நினைப்பார். சமணரோ அக் கொள்கையில் இன்னும் தீவிரமாக இருப்பார். காங்கிரஸ் கடைப்பிடித்துள்ள சத்யாக்ரஹக் கொள்கையில், இந்தப் பல விதமான அஹிம்ஸா முறைகளுக்கு இடமில்லை. தங்களுடைய பொதுவான அரசியல் பொருளாதார இலட்சியத்திற்காகக் காங்கிரஸ்வாதி பிறர் மீது பலாத்காரத்

தைப் பிரயோகிக்கக் கூடாது என்று மட்டுமே எதிர் பார்க்கப் படுகிறது. அஹிம்ஸா மனப்பான்மைக்கும் தத்துவத்திற்கும் சில சமயங்களில் முக்யத்துவம் தரப் பட்டுள்ள தென்றால் அது உசிதத்தைக் கருதியே. சிந்தை யிலும் வாக்கிலும் அஹிம்ஸையை உறுதியாகக் கடைப் பிடித்து வருவோர், செயலிலும் அதிக உறுதி காட்டுவது எளிது என்ற எண்ணமே இவ்வாறு முக்யத்துவம் தருவ தற்கே காரண மாகும். சொந்த வாழ்வில் அஹிம்ஸை யைக் கடைப் பிடிப்பவர் பொது வாழ்விலும் கடைப் பிடிப்பது மிக எளிது என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். சாத்விகத்தின் பிறப்பும் சரித்திரமும் எவ்வாறு இருப்பினும் சரி, பொது வாழ்விற் கேற்ற கூட்டு நடவடிக்கை யென்ற அம்சத்தை மட்டுமே காங் கிரஸ் ஏற்றுக் கொண்டது. வேறெந்த அம்சத்தையும் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய நடந்த எல்லா முயற்சிகளிலும் எப்பொழுதும் தோல்வி யடைந்துள் ளன. காங்கிரஸின் விதிகளில் சமாதான வழிகளில் 'என்ற சொற்றொடரை சாத்விக வழிகளில்' என்று மாற்றிக் கொள்ள காங்கிரஸ் மறுத்துள்ளது. அவ்வாறு மறுத்தது தப்போ, சரியோ, அது வேறு விஷயம். ஏனென்றால் சாத்விகம் என்பது சமாதான வழி என் பதை விட விரிந்தது. அதற்கு அப்பாற் பட்டது என்று காங்கிரஸ் கருதியுள்ளது. மேலும் சாத்விதம் அல்லது அஹிம்ஸை என்பதில் தனிப்பட்ட வருக்கும், பரமார்த் திகக் கொள்கைக்கும் அதிக முக்கியத்துவம் தரப்படு கிறது.

காந்திஜியால் வகுக்கப் பட்டுள்ள சத்யாக்ரஹ முறையில் மற்றொரு அம்சம் சத்தியம். ஆனால் இப் பதத்தை ஏற்றுக் கொள்ளவோ, உபயோகிக்கவோ காங்கிரஸ் எப்பொழுதும் மறுத்து வந்துள்ளது. அதை

விடச் சற்று அடக்கமான வார்த்தையான, 'நியாயமான' என்ற பதத்தையே காங்கிரஸ் உபயோகித்து வந்துள்ளது. ஆகவே காங்கிரஸ் தனது இலட்சியத்தை அடையக் கடைப்பிடித்து வந்த எல்லா சாதனங்களும், அவை சட்ட பூர்வமானவை ஆயினும் சரி, நியாயமான சமாதான வழிகளாயினும் சரி, அரசியல் சாதனங்களாகவே இருந்து வந்துள்ளன. தனிப் பட்டவரின் ஆத்மீக உயர்விற்கும், பரமார்த்திக வளர்ச்சிக்கும் காங்கிரஸின் சாதனங்களுக்கும் அவ்வளவாகச் சம்பந்தமில்லை. பரமார்த்திக நோக்குக் கொண்டவர்கள் கடைப்பிடிக்கக் கூடிய மார்க்கங்களாய் அவை இருக்கின்றன என்பது உண்மை தான். இதனால் இம் முறைகளின் பயனும் சக்தியும் குறைவடைய வில்லை; அதிகரிக்கத்தான் செய்கின்றன. தற்போதைய உலகம், ஆத்மீக உயர்வு கொண்ட அனைத்தையும் உதாசினம் செய்துவிடவில்லை- இந்தியாவிலோ இப் பற்று இன்னும் அதிகம் காணப் படுகிறது. ஆத்மீக சாதனமாகவும் இருக்கின்றதென்ற காரணத்தால், அதை அரசியல் ஆயுதமாகப் பயன் படுத்தக் கூடாதென்று சொல்வதை, இங்கு மங்கும் ஒரு சில வர்க்கத்தினரைத் தவிர, பொதுவாக உலக மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். 'சமாதான வழி' என்ற காங்கிரஸின் கொள்கையை இந்திய சோஷலிஸ்ட் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன என்பதிலிருந்தே, காங்கிரஸின் அஹிம்ஸை. அரசியல் அஹிம்ஸை என்பது தெளிவாகிறது. நியாயமான வழிகள் என்று காங்கிரஸ் சொன்னதில், குறுகிய கபட ராஜதந்திர சூழ்ச்சியும், சமய சந்தர்ப்ப ஆஷாட பூதித்தனமும் தான் விலக்கப் பட்டுள்ளன. விவேகமும் தூர திருஷ்டியும் அடிப்படை உண்மையும் கொண்ட எந்த அரசியல் ஞானியும் இந்தக் குணங்களை அகற்றுவார். சூழ்ச்சியினாலும் கபடத்தினா

லும், ஒரு தேசத்தின் மகத்தான பிரச்னைகள் தீர்க்கப் பட்டுள்ளன என்பதற்குச சரித்திரத்தில் ஒரு உதாரணம் கூடக் கிடையாது. அதிலும் ஒரு அடிமை நாடு இந்த முறைகளை உபயோகித்தாலோ, அவை தேச மக்களின் உறுதியையும், உயர்மையும் வளர்க்காமல், சீர் குலைவை யும் சோர்வையும் ஏற்படுத்தும். ஆகவே ஆத்மீகக் கார ணங்கள் ஒரு புறமிருக்க, அரசியல் காரணங்களாலும் உசிதத்தைக் கருதியுமே, காங்கிரஸ் இம் முறைகளை அகற்றி விடத் தீர்மானித்துள்ளது. பல நூற்றுண்டு களாக அடிமைத் தனத்தால் பிடிக்கப் பட்டுள்ள ஒரு தேசத்தில், எந்த அரசியல், பொருளாதாரத் திட்டமும் மக்கள் உறுதியையும், தேசத்தின் உயர்வையும் ஆத்மீகப் பண்மையும் வளர்த்தே தீரும்: ஆனல் அதைக் கொண்டு அத் திட்டத்தைப் பரமார்த்திகத் திட்டமென்று குறுகிய அர்த்தத்தில் கூறுவது ஏற்காது. இலட்சியம் கை கூடுவ தற்காக எந்த சாதனங்களையும் கையாளலாம் என்பது மிகவும் வசதியான சித்தாந்தம். ஆனல் காங்கிரஸ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்காக, அது பர மார்த்திகப் பித்துப் பிடித்தது என்று சொல்லிவிட முடி யுமா? இத்தகைய கொள்கைகளைப் பல மதங்களும் மதத் தொகுதிகளும் கடைப் பிடித்து வந்துள்ளன. இன்றும் கடைப் பிடித்து வருகின்றன என்பது உண்மை தான். ஆனல் கொடுமை, வெறி, ரத்த வெள்ளம், அழிவு, முதலிய வற்றையே உண்டு பண்ணக்கூடிய இக் கொள் கையைக் காங்கிரஸ் நிராகரிப்பது பரமார்த்திகக் கார ணங்களால் அல்ல. நடை முறையில் அது நன்மை பயக் காது என்பதையும் ஆதலால் அனுசிதம் என்பதையும் உணர்ந்தே நிராகரித் துள்ளது. காங்கிரஸின் வேலைத் திட்டங்கள் மதக் கொள்கைகளுக்கு மாறு பட்டவை யில்லை. அக் காரணத்தால் அவை மதப்பித்துப் பிடித்

தவை யென்றே மதத்திற்குக் கட்டுப்பட்டவை யென்றே கூற முடியாது. சன்மார்க்கத்தையும் நன்னடத்தையும் அடிப்படையாகக் கொண்டவையே அவை. மனிதர்கள் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளும் விதத்தில் நியாய மாகவும் நேர்மை யாகவும் சகோதர வாஞ்சையுடன் நடந்து கொள்ளும்படி போதிப்பதே சன்மார்க்கம். எதிரி யிடமும், குற்றவாளி யிடமும் கூட நாம் இந்தச் சகோதர வாஞ்சையைக் காட்ட வேண்டும். சட்டத்தைப் போலவே சன்மார்க்க சாஸ்திரத்திலும் குற்றவாளிக்கு இடமுண்டு. அவனை அனுவசியமான, அல்லது அநியாய மான கஷ்டத்திற்கு ஆளாக்கக் கூடாது என்பது அதன் போதனை. ஆனால், சட்டமும் சன்மார்க்கமும் வேறு; பரமார்த்திகத் தத்துவம் வேறு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

கிராமசேவை, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, தொழிலாளர் கிருஷிகர் சேவை, கதர், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, ஹிந்துஸ்தானி பிரசாரம், சட்டசபை வேலைத்திட்டம் முதலியன காங்கிரஸின் வேலைத்திட்டங்கள். இவற்றில், தீண்டாமை விலக்கைத் தவிர வேறெதுவும், அரசியல் அல்லாமல் பரமார்த்திக வேலைத் திட்டமென்று கூற முடியாது. இவ் வேலைத் திட்டங்களைப் பின் பற்றுவதால், தனிப்பட்ட நபர்கள் ஆத்மீக உயர்வடையலாம். ஆனால், அரசியல், பொருளாதாரத் துறைகளிலும் நடை முறையிலும் இவற்றால் நன்மை யேற்படு மென்பதால்தான் காங்கிரஸ் இவ் வேலைத் திட்டங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. தீண்டாமைப் பிரச்னையும் முற்றிலும் மதப் பிரச்னையல்ல. அரசியல், பொருளாதாரப் பிரச்னையாகவும், எல்லாவற்றையும் விட, சமூகப் பிரச்னையாகவும் உள்ளது. அதை அகற்றவிடில் தேசம் தனக்குள்ளாகவே பிளவு

பட்டிருக்கும். சுதந்திரம் என்ற கோரிக்கைக்கு அர்த்தமும் உரிமையும் இல்லாமல் போய்விடும்.

காங்கிரஸ் தலைவர்களை எடுத்துக் கொண்டாலோ, அவர்கள் தங்களிடம் பரமார்த்திக உயர்வு காணப்படுகிறதென்றோ, தாங்கள் ஞானிகளாக மதிக்கப் படவேண்டுமென்றோ என்றும் சொல்லிக் கொண்டதில்லை. தன்னலப் பற்றற்ற தியாக சிந்தை, பரமார்த்திகத்தின் அறிகுறி யென்றால், அது அவர்களிடம் காணப்பட்டுள்ளது உண்மை தான். ஆனால் அதற்கு மேல், காந்திஜியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பழுத்த அரசியல் வாதிகளே; காந்திஜி அரசியலை ஆத்மீகத்துடன் சேர்த்துப் பிணைக்கிறாரென்று கூறப்படுகிறது. அதனால், அவரிடம்; காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திறமையோ, நடைமுறை அனுபவமோ, ஆற்றலோ இல்லையென்று இதுவரை யாரும் குறை கூறியதில்லை. அவரைவிடக் கூர்மையான அரசியலறிவு படைத்தவர் வேறு யாரும் கிடையாது என்று லாயிட் ஜார்ஜ் ஒருமுறை கூறியுள்ளார். அவர் அரசியல் திறமையையும் உபாயங்களையும் கண்டு திகைப்படைந்து கதி கலங்கியுள்ள அவர் எதிரிகள், மாக்கியவல்லி போதித்தது போன்ற கபட சூழ்ச்சிகளை அவர் கையாளுகின்றார் என்றும் பழித்ததுண்டு. ஆனால் அவர் சொல்லிலும். செயலிலும் பளிங்குபோன்ற தூய்மை கொண்டவரென்பதையும், ஒளிவு மறைவின்றி எதையும் வெளிப்படையாகக் கூறுவாரென்பதையும் நண்பர்களும் பாரபக்ஷமற்றவர்களும் ஒத்துக் கொள்வார்கள்.

ஆகவே காங்கிரஸின் இலட்சியங்களிலோ வேலைத் திட்டங்களிலோ, தலைவர்களிடத்தோ பரமார்த்திகப் பற்று காணப்படுவதில்லை என்பதை மேலே கண்டோம். அப்படி யிருந்தும், பொது அறிவும் பொறுப் புணர்ச்சி

யும் மிகுந்த தலைவர்கள் கூட, இவ்வாறு குறை கூறுவ தேன்? இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள. லௌகிகத்திற்கும் அதை அடிப்படையாகக் கொண்ட லோகயாத வாதத்திற்கும், சமதர்மத்திற்கும் ஏற்காத தெல்லாம் கர்னாடகமானது, மதப்பித்துப் பிடித்தது என்பது ஒரு சில சமதர்ம வாதிகளின் கருத்து. பழைய காலத்தில் தான் பொது வாழ்விற்கு அரசியல் முக்கிய தூண்டுதலாக இல்லாமல், மதம் அடிப்படையாக இருந்தது என்று அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பழைய காலத்தைப் பற்றி அவர்கள் இவ்வாறு சொல்வதே எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதை நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை. இரண்டாவது காரணம் என்னவென்றால், பரமார்த்திகத் துறையுடன் சற்று சம்பந்தப் பட்ட பழைய வார்த்தைகளை உபயோகிப்பதால் இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. தவறான பதப் பிரயோகத்தால் நேரும் விபரீதங்கள் பல. சொல்லில் ஏற்படும் குழப்பத்தினால், சிந்தனா சக்தி மழுங்கி விடுகிறது. ஆராய்ச்சி பாதிக்கப் படுகிறது. இக் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டுமானால் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். பூரண சுயராஜ்யம், சத்யாக்ரஹம், ராம ராஜ்யம், ஹர்த்தால், கிராமக் கைத்தொழில்கள், கதர் போன்ற வார்த்தைகளில், பழங்கால, கர்னாடக, பரமார்த்திகத் தொனி இருப்பதாக, இக்காலத்தியவருக்குத் தோன்றுகிறது. இவ் வார்த்தைகளுக்குப் பதிலாக பூரண சுதந்திரம், ஒத்துழையாமை, ஜன நாயக ஆட்சி, பொது வேலை நிறுத்தம், இயந்திரத் தொழில் பரவல் முறை, முதலிய பதங்களை உபயோகித்து விட்டால், அதே எண்ணங்களும் கொள்கைகளும் புதியனவாகவும். காலத்துக் கேற்றவையாகவும் புலப்படுகின்றன. இப் புது வார்த்தைகளை, அதிலும் ஒரு அந்நிய மொழியில் உபயோகிப்ப

தால், பாமரமக்கள் அவற்றைப் புரிந்து பின் பற்றுவது சாத்தியமா என்பது பற்றி, நம் நண்பர்கள் சற்றும் கவலைப் படுவதில்லை. மேல் நாடுகளின் அரசியல் எண்ணங்களையும் பாஷையையும் பாணியையும் இந்தியாவும் அனுசரித்துப் போகாவிடில், இந்திய அரசியலில் தேக்க மேற்பட்டு விடுமென்பதும், இந்தியா, உலக அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டு விடு மென்பதும் அவர்கள் பீதி.

9. அரசியலும் ஆத்மீகமும்

இந்தியாவில், பொது வாழ்வில் ஈடுபட்டுப் பொது ஜன ஊழியம் செய்ய முன் வருபவர்கள் வெகு சிலரே. குடும்பம், சாதி, சமூகம், இவற்றிற்கு ஊழியம் செய்ய முன் வருவோர் பலர் சம்பிரதாயத்துக்குக் கட்டுப்பட்டுச் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தினுல் செய்வது உண்மை ஊழிய மாகாது. அதை அனைவரும் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறது. அதைச் செய்ய மறுப்பவர்கள், சமூக விரோதிகளாகவோ, புத்திக் கோளாறு கொண்டவர்களாகவோ மதிக்கப் படுகின்றனர். சமூகத்திங் வாழ்வதற்கு, நாம் அன்ருடம் பல இடைஞ்சல்களையுங் கஷ்டங்களையும் சகித்துக் கொண்டிருக்கிருேம். இதெல்லாம் ஊழியமோ, தியாகமோ, ஆகாது. குடும்பம், சாதி, மதம் ஆகியவற்றிற்குச் சேவை செய்ய வேண்டுமென்று சம்பிரதாயக் கட்டுப்பாடு உள்ளது. ஆனல் தேசத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு இடையாது. அச் சேவை செய்வதும் வழக்கமாயில்லை.

மற்ற சேவைகளை விட தேச சேவையில் அதிகக் கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அதைச் சாதாரணமாக அனைவரும் செய்யும் பழக்கம் இல்லாததால் அதைச் செய்வோர், மற்றவர்களைவிட மேம்பட்டவர்களாக மதிக்கப் படுகின்றனர். அவர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்கள் சாதாரணமானவையல்ல. இதுவரை யாரும் அனுபவித்திராத புதிய கஷ்டங்களையும் இடையூறுகளையும் அவர்கள் அனுபவிக்க வேண்டி யிருக்கிறது. ஒரே ஒரு மேன்மைதான் இந்தியாவில் மதிக்கப்பட்டு வந்தது. அதுதான் ஆத்மீக மேன்மை. மேலான மனிதரென்றால் அவர் பரமார்த்திகப் பற்றுடையவரா யிருக்க வேண்டும். பரமார்த்திகம் என்பதற்குப் பண்டைக் காலத்தில் என்ன பொருள் இருந்திருந்தாலும் சரி, இன்று, ஆசாரத்திற்கும் அனுஷ்டான சடங்குகளுக்கும் மேம்பட்ட பரமார்த்திகம், துறவாகவும், வேண்டுமென்றே உடலை வருத்துவதாகவுமே பொருள்படும். ஆகவே ஒவ்வொரு தேசிய ஊழியரும் இதை அனுசரித்து நடக்க வேண்டும்.

மேல் நாடுகளில் ஒரு தேசிய ஊழியரின் வாழ்வு, சாதாரணமானது. அவன் மகத்தான தியாகங்கள் செய்கிறான். உயிரையும் அர்ப்பணம் செய்கிறான். ஆனால் அதற்காக அவனுக்கு ஆத்மீக மேன்மையை யாரும் தருவதில்லை. காலத்துக்கு ஒவ்வாத வாழ்வு அவனிடமிருந்து எதிர்ப்பார்க்கப் படுவதில்லை. உணவு, உடை, வாழ்வின் மற்ற தேவைகள், முதலிய எல்லாவற்றிலும், அவன் மற்ற சாதாரண மக்களைப் போலவே வாழ்கின்றான். இந்தியாவிலோ ஒரு தேசிய ஊழியர் தன் செல்வத்தையோ சுகத்தையோ தியாகம் செய்வது மட்டும் போதாது. லௌகிக வாழ்க்கையின் சாதாரண தேவைகளையும் அவன் ஒதுக்க வேண்டும். அதிலும் ஹிந்துக்

களோ, எதை எடுத்துக் கொண்டாலும் லௌகிக சுகம் என்று கூறி விடுவார்கள். ஒரு தேசிய ஊழியர் சினிமாவுக்குப் போனால், பொதுமக்கள் குறை கூறுவார்கள். பசிக்கும்போது அவர் ஹோட்டலுக்குச் செல்வதும் தவறாகும். அவர் சுருட்டுக் குடிப்பதோ, காபி, தேநீர் குடிப்பதோ கூடாது. முகம்மதியரா யிருந்தால் அவர் க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாது. ஒரு ஹிந்து தேசிய ஊழியர் முட்டையோ, மாமிசமோ, மீனோ சாப்பிட்டால், அது பிறர் உணர்ச்சிகளைப் புண்படுத்துவதாகும். தன் சொத்தையும் அவர் அனுபவிக்கக்கூடாது. பரம்பரைச் சொத்தாயினும் சரி, தாமே திரட்டிய செல்வமாயினும் சரி, அனைத்தையும் அவர் துறந்துவிட வேண்டும். தேச சேவிகைகளோ ஆபரணங்கள் அணிந்து கொள்ளக் கூடாது. வைதிக முறைப்படிதான் அவர் தலையை வாரி, வகிடு எடுத்துக்கொள்ள வேண்டும். சுருங்கச் சொல்லின், தேச ஊழியர்கள் துறவிகளாகவும் இருக்க வேண்டும். துறவிகள் தான் தேச சேவை செய்யத் தகுதி உடையவர்கள். மதுபானம் அந்நிய நாட்டுச் சாமான்கள், அன்னிய நாட்டுத் துணி முதலியவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பது தான் காங்கிரஸின் தேசியக் கொள்கை. ஆனால் பொதுமக்கள் விதித்துள்ள தடைகளோ இன்னும் கடுமையானவை.

கிலாபத் இயக்கம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு முஸ்லிம் தேசபக்தர் தாடி வளர்ப்பதும், குறிப்பிட்ட ஒரு விதிப்படி மீசை வைத்துக் கொள்வதும், அவர் கடமை என்று மதிக்கப்பட்டது. தாடி இல்லாதவர் பேசினால், அவர் வார்த்தைக்கு யாரும் செவி சாய்க்கமாட்டார்கள், மீசையில்லாமலிருந்து விட்டாலோ, அவர் தேசத்துக்கோ கிலாபத்துக்கோ உண்மை ஊழியராக இருக்க முடியாது. அவர் தம்மைப்

போட்டோ எடுத்துக் கொள்ளக் கூடாது. தலைசிறந்த தேசபக்தரான மோதிலால் நேரு வாழ்ந்த காலத்திலேயே, அவர் தம் சொத்து அனைத்தையும் துறந்துவிட வில்லை யென்றும், இன்னும் சுகவாழ்வு வாழ்ந்து வந்தாரென்றும் குறை கூறப் பட்டுவந்தது. பல வருஷங்கள் சிறையில் வாசம் செய்வதையே வழக்க மாக்கிக் கொண்டுள்ள ஜவாஹர்லால் மீது கூடச் சிலர் அவ்வாறு குறை கூறுகிறார்கள். அறியாதவர்களும் வைதிகர்களும் மட்டும் இவ்வாறு குறை கூறுகிறார்கள் என்பதில்லை. படித்தவர்கள் கூட இவ்வாறு குதர்க்கம் செய்கிறார்கள். பேனா, கைக் கடிகாரம், க்ஷவரக் கத்தி, முதலியவை வைத்திருந்தால் கூடப் பொது ஜன ஊழியர்கள்மீது குறை கூறப்படுகிறது. அவை யெல்லாம், புதிய பொருள்களென்றும், வைதிக, சுத்த வாழ்விற்குப் புறம்பானவை யென்றும் மதிக்கப் படுகின்றது.

பொதுமக்கள் எண்ணப்படி ஒரு தேச ஊழியர் இருக்க வேண்டுமானால், அவர் பாதி நிர்வாணமாகவும், உடல் பசியால் வாடியும், அறிவு மழுங்கியும், கலை உணர்ச்சி இழந்தும், உணர்ச்சி வரண்டும் போய்விடுகிறார். அத்தகைய தேசிய ஊழியரால் உலகம் முன்னிருக்கும் பிரச்னைகளையோ, தேசத்தின் முன்னிருக்கும் பிரச்னைகளையோ உணர்ந்துகொள்ள முடியாது.

தேசிய ஊழியம் செய்ய முன் வரும் படி ஒரு சாதாரண இந்தியனை அழையுங்கள். தான் இன்னும் உலகைத் துறக்கவில்லை யென்றும், தனக்குக் குடும்பம் உள்ளதென்றும், லௌகிக வாழ்க்கையைச் சுகிக்க விரும்புவதாகவும், அவன் பதில் கூறுவான். சாதாரண வாழ்க்கை வாழ்ந்துகொண்டே தேச சேவை செய்வதென்பது அசாத்தியம் என்பது அவர்கள் எண்ணம். அவசியம் நேரிட்டால், ஒரு ஜெர்மானியனோ, ஜப்பானியனோ,

ஆங்கிலேயனோ, பீரங்கிக் கெதிரே நிற்பான். விளையாட்டு, விருந்து, ஆடல் பாடல், முதலிய கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆங்கிலேயன், மறு நிமிஷமே அங்கிருந்து வெளியேறி நேராகப் போர்க்களத்துக்குச் செல்ல சித்தமாயிருக்கின்றான், ஆனால் இந்தியனோ அவ்வாறில்லை. ஆத்மீக உயர்வைக் கடைப்பிடிக்காவிடில், தன் தேசத்துக்குச் சேவை செய்ய முடியாதென்றும் தேசத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்படி நேரிடுமென்றும் அஞ்சுகின்றான்.

ஆகவே, இந்திய இளைஞரிற் வெகு சிலரே தேசிய சேவை செய்ய முன் வருகின்றனர் என்பதில் ஆச்சரியமில்லை. ஆதாரமும் அவசியமும் இல்லாமல், இத்தகைய பொருத்தமற்ற விதிகளை சமூகம் நிர்ணயித்தால், அதனால் சிருஷ்டிக்கப்படுவர்கள் ஒன்று வைதிகப் பித்தர்களாகவும் கொள்கை வெறியர்களாகவும் இருக்க வேண்டும்; இல்லையேல் ஆஷாட பூதிகளாகவும் கபட வேஷக்காரர்களாகவும் இருக்க வேண்டும். சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடன் பலர் முன்வருகின்றனர். ஆனால், கர்நாடக முறைகளிலும் வைதிக வழிகளிலும் அவர்களுக்குப் பற்றுதலோ, பயிற்சியோ, நம்பிக்கையோ இல்லாததால், ஆரம்பத்திலிருந்தே அவர்கள் தங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேரிடுகிறது; இல்லாவிடில் பாசாங்கு செய்ய வேண்டியிருக்கிறது. பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒரு மனிதர் பாசாங்கு செய்வதும் மிக அபாயகரமானது, பொது மக்கள் பார்வை அவர்மீது எப்பொழுதும் இருந்து வருகிறது, அவர் செய்கை என்றைக்காவது ஒரு நாள் பகிரங்கமாவது நிச்சயம் அப்பொழுது அவர் நண்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் திகில் உண்டாகிறது. அத்துடன் நின்றால் பரவாயில்லை. எல்லா அரசியல் ஊழியர்கள் மீதுமே, பொதுமக்கள் அவநம்பிக்கையும் சந்தேகமும்

கொள்ளத் தொடங்குகின்றனர், தேசிய ஊழியர்களிற் பலர்மீதுள்ள குறைகளும் புகார்களும் இப்படிப்பட்டவையே.

மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டும். காங்கிரஸ் ஊழியர் ஒவ்வொருவரும், காந்திஜியின் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளதாக மதிக்கப்படுகிறது. காந்திஜியே தேசிய ஊழியர்களின் அரசியல் தலைவராகவும் மத குருவாகவும் வணங்கப்படுகிறார். காந்திஜியின் அரசியலை மட்டுமே பின்பற்றப் போவதாக நீங்கள் கூறுங்கள்; உங்களை யாரும் நம்பவே மாட்டார்கள். காந்திஜியைப் பின் பற்றுவதென்றால் அவர் சத்திய சோதனைகள் அனைத்தையும் பின் பற்றுவது அவசியமென்று அவர்கள் நினைக்கின்றனர். தாம் மெய்ஞ்ஞானத்தை அடையவில்லை யென்று காந்திஜியே கூறுகிறார். ஆனால் அவர் கூறுவது தான் மெய்ஞ்ஞானம் என்று பொது மக்களும், அவர் சீடர்களிற் சிலரும் கூறுகின்றனர். அரசியலில் நீங்கள் அஹிம்சைக் கொள்கையை ஏற்றுக் கொண்டு விட்டால், அதன் மூலம், இன்னும் பண்பட்டு, மனித சமுதாயம் முழுவதும் மீதும் அன்பு செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். உங்கள் அகத் தூண்டுதலைப் பின்பற்ற யாரும் விடுவதில்லை; காந்திஜியின் அகத் தூண்டுதலை—அதாவது அவர் அகத் தூண்டுதல் எது என்று பொது மக்கள் புரிந்து கொண்டுள்ளனரோ அதைப் பின்பற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

பலாத்காரப் போர் வீரர்களாயினும் சரி, சத்யாக்ரஹப் போர் வீரர்களாயினும் சரி அவர்களை ஒரு தனி வர்க்கத்திலிருந்தோ, வகுப்பிலிருந்தோ மட்டும் திரட்டுவதென்பது இன்று, தேசங்கள் உள்ள நிலைமையில் முற்றிலும் அசாத்தியம். ஏழை, செல்வர், உயர்ந்தவர், தாழ்ந்

தவர், அனைவரும் தேசிய சேவை செய்ய வேண்டியதவசியம். அவர்கள் அனைவரும், பிரஜைகளென்ற முறையில் தங்களுக்குள்ள கடமையைச் செய்ய வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யவேண்டு மென்றால் அவர்கள் மீது அனாவசியத் தடைகளையும் சாத்தியமில்லாத விதிகளையும் சுமத்தக்கூடாது. சாதாரண சன்மார்க்க நடத்தையை அவர்கள் பின் பற்றினால் போதும். அரசியல் வாழ்வு வேறு; ஆத்மீக வாழ்வு வேறு. இவையிரண்டையும் குழப்பக்கூடாது. உண்மையில், அரசியலை என்றும் ஆத்மீக மயமாக்க முடியாது. அரசியல் பொதுவாழ்வுடனும் கூட்டு நடவடிக்கையுடனும் சம்பந்தப்பட்டது. ஆத்மீக வாழ்வில் உள்ளதுபோல, தனி மனிதனின் அகத்தூண்டுதலுக்கும் விவேகமான தீர்மானத்திற்கும் இதில் அவ்வளவு முக்யத்துவம் கிடையாது. ஆசாரத்திற்கும் அனுஷ்டானச் சடங்கிற்கும் மேம்பட்ட ஆத்மீக வாழ்வு, தனி மனிதனின் அகப்பண்பைப் பொருத்ததே. அதில் கூட்டு வாழ்விற்கு அவ்வளவு முக்கியத்துவமில்லை. செயலை விட, அதற்கு ஆதாரமாயுள்ள அகத் தூண்டுதலே முக்கியம். நோக்கம் கெட்டதாயிருந்தாலும் அது பாபகாரியமே. அரசியல், சட்டம், சமூக வாழ்வு, முதலிய துறைகளிலும் செயலைவிட அகத் தூண்டுதலே முக்கிய மென்று ஏற்படுத்தி விட்டால், பொதுவாழ்வு பண்பட்டுத் தூய்மை யுறாமல் மேலும் குழப்பமும் கலக்கமும் அடையும்.

மெய்ஞ்ஞானத்தை அடைந்து தன்னை உணர்வதே ஆத்மீக வாழ்வின் இலட்சியம். இது ஒரு தேசம் அல்லது சமூகத்தின் இலட்சியமாக இருக்க முடியாது. அத்தகைய ஞானம் அடைவதற்கு அவசியமான பயிற்சிகளும் சாதகங்களும் பல தரப்பட்டவை. சிக்கலான அத் துறையில், சமூகம் இறங்கினால் கூட்டுவாழ்வு சிதைவுறக்

கூடும். ஒரு தேசம் முழுவதும் ஒரு விக்ரஹம் முன்பு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கொண்டிருந்தால் அல்லது 'சமாதி'யில் அமர்ந்திருந்தால், அல்லது தலைகீழ் நின்று கொண்டிருந்தால் எப்படி யிருக்குமென்று நினைத்துப் பாருங்கள். தனிப்பட்ட நபர்கள் தங்கள் உணர்ச்சிகளை அடக்கி ஆத்மீக உயர்வடைய இந்த சாதனங்களைக் கையாளலாம். ஆத்மீக வாழ்வின் அடிப்படை தனி மனிதனே. அரசியலின் அடிப்படை சமூகமும் கூட்டுவாழ்வும் ஆகும். மதத்தில் கூட அனைத்தையும் துறந்த சந்யாசிக்கும், சாதாரண லௌகிகவாழ்வு நடத்தும் இல்லற தர்மத்தாருக்கும் வேறுபாடு செய்யப்படுகிறது. அவர்கள் இருவரும் பின்பற்ற வேண்டிய விதிகளும் தர்மங்களும் கூட வேறுபட்டவை. புத்தர், தமது சிடர்களை இரண்டு வகுப்பினராகப் பிரித்தார். ஆசிரமவாசிகள் ஒரு வகுப்பு. லௌகிக சிடர்கள் மற்றொரு வகுப்பு. லௌகிக சிடர்கள் சாதாரண கிருஹஸ்த, வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆசிரம வாசிகளோ பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடித்து, சகல சுகங்களையும் துறக்கவேண்டி யிருந்தது. இந்தப் பாகு பாடு எல்லா மதங்களிலும் காணப்படுகிறது. சாதாரண கிருஹஸ்தன் ஒரு சில விதிகளுக்கும், நியதிகளுக்கும் கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்துகிறான். இவ் விதிகள் அவ்வளவு கடுமையாக இருக்க மாட்டா. காந்திஜி கூட இந்தப் பாகுபாட்டை அனுசரிக்கிறார். சத்யாக்ரஹ ஆசிரம வாசிகள் எடுத்துக் கொள்ளவேண்டிய. பிரதிக்ஞைகளையும் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களையும், சாதாரண காங்கிரஸ் வாதிகள் அனுஷ்டிக்க வேண்டுமென்று அவர் கட்டாயப் படுத்துவதில்லை.

அரசியலை ஆத்மீக மயமாக்குவது என்று நாம் சாதாரணமாகப் பேசும் போது, சில அடிப்படை நியதிகளை

அனுசரித்து அரசியல் நடக்கும்படி செய்யவேண்டும் என்பதே அதன் தாத்பரியம் என்று தோன்றுகிறது. சாதாரணமாக அரசியலில் இந்த அடிப்படை விதிகள் கூட மீறப்படுகின்றன. சொந்த வாழ்வில் எந்த கௌரவமான நடத்தையை நாம் பின் பற்றுகிறோமோ, அதே நடத்தையை அரசியலிலும் பின்பற்ற வேண்டும். தத்துவ இயலுக்கிணங்க, சரியான பதங்களை நாம் பிரயோகிப்பதென்றால், அரசியலை ஆத்மீக மயமாக்குவது என்று பேச மாட்டோம்; அடிப்படை சன்மார்க்க விதிகளை அரசியலிலும் பின் பற்றுவது என்று கூறுவோம். சன்மார்க்கம் என்பது ஆத்மீகத்தின் அடிப்படை அம்சம் தான். ஆனால் அது ஆத்மீகத்தின் அம்சம் ஆகி விடாது. ஆத்மீகத்திற்கும் சன்மார்க்கத்திற்குள்ள இந்த வேறுபாட்டை நாம் உணர்ந்தால், இன்று ஏற்பட்டுள்ள குழப்பத்தில் பெரும் பகுதி நீங்கிவிடும்; அரசியல் உலகில் உள்ள ஆஷாட பூதித்தனமும் அகற்றப்படும். மற்ற தேசங்களைப் போலவே, இங்கும் சாதாரண இந்தியனும் தேசத்துக்குச் சேவை செய்யமுடியும் என்ற நிலைமை ஏற்படும். இதனால் தேசப்பொது வாழ்விற்கு நன்மை யேற்படும். இன்றோ ஒரு சில உயர்ந்த கொள்கைகளைக் காட்டி, சாதாரண மனிதனுக்குக் கிலி யேற்படுத்தி அவனை அரசியலிலிருந்து நாம் விரட்டி விடுகின்றோம். அந்த உன்னத சிகரத்தை அடைவோரும் வெகு சிலரே. மற்ற பெருவாரியானவர் உயர்வடையாமல், கோளாறு தான் அடைகின்றனர்.

Printed at Universal Printers, Madras.

Jacket Printed at Commercial Printing and Pubiishing House, MS. 120A
for Kadambam Publication, MS. 463,